இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பத்தாவது பாராளுமன்றம்
முதலாவது கூட்டத்தொடர்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 489

அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் ஆறாவது அறிக்கை

(2024.05.10 தொடக்கம் 2024.08.08 வரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள்)

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினருமான
கௌரவ கபீர் ஹஷீம் அவர்களால்
பாராளுமன்றத்தில் 2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06ஆந் திகதி முன்னிலைப்படுத்தப்பட்டது.

*இலங்கைப் பாராளுமன்றத்தால் 2026 மார்ச் மாதம் 06ஆந் திகதி
அச்சிடப்பட வேண்டுமென கட்டளை இடப்பட்டது.*

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கைகள் மீதான அவதானிப்புகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை முன்னிலைப்படுத்தல்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119 (4) இல் பின்வருமாறு குறித்துரைக்கப்பட்டுள்ளது:-

"அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் ஏதேனும் அறிக்கையொன்று,சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் அவ்வறிக்கை நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் ஆற்றுபடுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புகளையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு வார காலப்பகுதியினுள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும் அத்துடன் குறித்த அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை முறைகள் பற்றிய கூற்றொன்றை சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது அச் சிபாரிசுளை நடைமுறைபடுத்த முடியாது என்பது அமைச்சரின் கருத்தானால் அவர் அதற்கான காரணங்களையும் அரசாங்க நிதியை முறையாகக் கையாளுவதற்குப் பின்பற்றப்படும் மாற்று நடவடிக்கை முறைகளையும் எழுத்துமூலம் விளக்கமளித்தல் வேண்டும். குழுவிற்குத் தேவைப்படின் நிலைப்பாட்டை நேரில் விளக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சரை குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைக்க முடியும் என்பதுடன், அவ்வாறான விடயங்களால் எழும் கேள்விகளுக்கு எட்டு வாரங்களுக்குள் பதிலளிக்கப்பட வேண்டும். பாராளுமன்றம் அவ்வாறு தீர்மானித்தால் சட்டமா அதிபரின் அவதானிப்புக்கள் மற்றும் தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அறிக்கை அவருக்கு சமர்ப்பிக்கப்படலாம்."

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடர்
அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் கட்டமைப்பு
(அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில்)

1. கௌரவ லசந்த அழகியவன்ன, பா.உ. - குழுவின் தவிசாளர்
2. கௌரவ சட்டத்தரணி மோஹான் பிரியதர்ஷன த சில்வா, பா.உ.
3. கௌரவ பிரசன்ன ரணவீர, பா.உ.
4. கௌரவ கே. காதர் மஸ்தான், பா.உ.
5. கௌரவ டயானா கமகே, பா.உ.
6. கௌரவ சாமர சம்பத் தசனாயக, பா.உ.
7. கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க, பா.உ.
8. கௌரவ வஜிர அபேவர்தன, பா.உ.
9. கௌரவ ஏ. எல். எம். அதாவுல்லா, பா.உ.
10. கௌரவ ஜயரத்ன ஹேரத், பா.உ.
11. கௌரவ கபீர் ஹஷீம், பா.உ.
12. கௌரவ விமலவீர திசாநாயக்க, பா.உ.
13. கௌரவ நிரோஷன் பெரேரா, பா.உ.
14. கௌரவ ஜே. சீ. அலவத்துவல, பா.உ.
15. கௌரவ அசோக் அபேசிங்க, பா.உ.
16. கௌரவ ஜயந்த கெட்டகொட, பா.உ.
17. கௌரவ சிவஞானம் சிறீதரன், பா.உ.
18. கௌரவ ஹெக்டர் அப்புஹாமி, பா.உ.
19. கௌரவ எம். உதயகுமார், பா.உ.
20. கௌரவ (டாக்டர்) மேஜர் பிரதீப் உந்துகொட, பா.உ.
21. கௌரவ கருணாதாச கொடித்துவக்கு, பா.உ.
22. கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி, பா.உ.
23. கௌரவ இசுரு தொடங்கொட, பா.உ.
24. கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சீ. தொலவத்த, பா.உ.
25. கௌரவ முதிதா பிரிஷாந்தி, பா.உ.
26. கௌரவ எம். டபிள்யூ. டீ. சஹன் பிரதீப் விதான, பா.உ.
27. கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே, பா.உ.
28. கௌரவ டீ. வீரசிங்க, பா.உ.
29. கௌரவ வீரசுமன வீரசிங்க, பா.உ.
30. கௌரவ மஞ்சுளா திசாநாயக்க, பா.உ.
31. கௌரவ கலாநிதி ஹரினி அமரசூரிய, பா.உ.

<u>பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடர்</u>
<u>அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் கட்டமைப்பு</u>

1. கௌரவ கபீர் ஹஷீம், பா.உ. - குழுவின் தவிசாளர்
2. கௌரவ எண்டன் ஜயகொடி, பா.உ.
3. கௌரவ (ஓய்வுபெற்ற) மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர, பா.உ.
4. கௌரவ சுகத் திலகரத்ன, பா.உ.
5. கௌரவ சுந்தரலிங்கம் பிரதீப், பா.உ.
6. கௌரவ நலின் ஹேவகே, பா.உ.
7. கௌரவ அரவிந்த செனரத், பா.உ.
8. கௌரவ தினிந்து சமன் ஹென்னாயக்க, பா.உ.
9. கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், பா.உ.
10. கௌரவ ரோஹித அபேகுணவர்தன, பா.உ.
11. கௌரவ ஜே.சீ. அலவத்துவல, பா.உ.
12. கௌரவ சாமர சம்பத் தசனாயக, பா.உ.
13. கௌரவ ஹெக்டர் அப்புஹாமி, பா.உ.
14. கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன, பா.உ.
15. கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன், பா.உ.
16. கௌரவ சட்டத்தரணி (திருமதி) சாகரிகா அதாவுத, பா.உ.
17. கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி, பா.உ.
18. கௌரவ கே. இளங்குமரன், பா.உ.
19. கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா, பா.உ.
20. கௌரவ அஜந்த கம்மெத்தெகே, பா.உ.
21. கௌரவ ருவன்திலக்க ஜயகொடி, பா.உ.
22. கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ, பா.உ.
23. கௌரவ ரீ.கே. ஜயசுந்தர, பா.உ.
24. கௌரவ எம்.ஏ.எம். தாஹிர், பா.உ.
25. கௌரவ சுசந்த குமார நவரத்ன, பா.உ.
26. கௌரவ லால் பிரேமநாத், பா.உ.
27. கௌரவ சானக மாதுகொட, பா.உ.
28. கௌரவ சுனில் ரத்னசிரி, பா.உ.
29. கௌரவ சந்தன சூரியஆரச்சி, பா.உ.
30. கௌரவ (டாக்டர்) ஜனக சேனாரத்ன, பா.உ.

<u>குழுச் செயலகத்தின் தற்கால பணியாட்டொகுதியினர்</u>

- திரு. சனத் விஜேகுணவர்தன – குழுவின் செயலாளர்/ உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)
- திருமதி. சமீலா ரூபசிங்க – பிரதான உத்தியோகத்தர்
- திருமதி. ஆர். ஏ. டி. என். கியோவனி – பிரதிப் பிரதான உத்தியோகத்தர்
- திரு. ஜே. டி. எல். பி. சமீர – உதவிப் பிரதான உத்தியோகத்தர்
- செல்வி. ஜி. டி. ஜே. எச். ஆயேஷ்மந்தி – பாராளுமன்ற உத்தியோகத்தர்
- திருமதி. ஜி. எம். கல்லேகொட – பாராளுமன்ற உத்தியோகத்தர்
- செல்வி. எம்.எல்.ஏ.டி.எம். குமாரி – பாராளுமன்ற உத்தியோகத்தர்

<u>குழு அறிக்கைகள்</u>

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கைகளை www.parliament.lk என்ற இணையத் தளத்தில், கீழ்க் காணும் படிமுறையின் ஊடாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

Select language → Business of Parliament → Committees → Committee Reports → Select Legislature (10th Parliament) → Select Session (1st Session) → Select Committee Type (Committees for Special Purposes) → Select Committee (Committee on Public Accounts) → Search

பொருளடக்கம்

அ. தவிசாளரின் குறிப்பு	1
ஆ. சுருக்க அறிக்கை	2
இ. சிறப்பு அவதானிப்புகள்	4
ஈ. விசாரணை செய்யப்பட்ட நிறுவனங்களில் கண்டறியப்பட்ட பிரதான பிரச்சினைகள், அவதானிப்புகள் மற்றும் விதந்துரைகள் / கட்டளைகள்	7
உ. சுட்டி	95

தவிசாளரின் குறிப்பு

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடரில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு 2024.05.10 ஆந் திகதி தொடக்கம் 2024.08.08 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை உள்ளடக்கிய குழுவின் ஆறாவது அறிக்கையை இவ்வாறு முன்னிலைப்படுத்துகின்றேன். கணக்காய்வு எனப்படுகின்ற பின்னரான செயற்பாட்டினால் அடையாளம் காணப்பட்ட பலவீனங்களுக்கு தீர்வுகளை வழங்குவதுடன், வினைத்திறனின்மையை பிரயோக ரீதியாகத் தடுப்பது மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதால், எதிர்காலத்தில் கடந்த காலக் குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கு நிறுவனங்களுக்கு வழிகாட்டுவதில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அதிக கவனத்தை செலுத்துகிறது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

அதற்கமைய, தற்போது, அரச நிறுவனங்களைப் பாராளுமன்றத்திற்கு அழைத்துக் விசாரணை செய்வதோடு இணைந்ததாக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் இணையத்தள நிகழ்நிலைத் தகவல் முகாமைத்துவ முறைமையின் ஊடாக அனைத்து அரச நிறுவனங்களையும் வருடாந்தம் மதிப்பீடு செய்யும் செயற்பாடும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனக் குறிப்பிடுகின்றேன். இதன் மூலம் குழுவின் விசாரணைகளை இற்றைப்படுத்தி மேற்கொள்வதற்கு முடிவதுடன், நிறுவனங்களில் காணப்படும் பலவீனங்கள் மற்றும் குறைபாடுகளை அடையாளம் கண்டு, காலத்திற்குப் பொருத்தமான முக்கியமான கொள்கைத் தீர்மானங்களின் மூலம் அவற்றைச் சரிசெய்து கொள்வதற்கு வழிகாட்டுவதற்கும் சந்தர்ப்பம் கிட்டும் என்பது எனது கருத்தாகும்.

நிறுவனங்களை விசாரணை செய்யும்போது அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள் மற்றும் தவறுகளைச் சரிசெய்து கொள்வதற்கும், காணப்படுகின்ற நேர்மறையான பண்புகள் மற்றும் போக்குகளை மேம்படுத்துவதற்கும், குழுக் கூட்டங்களை நடாத்தும்போது அரச உத்தியோகத்தர்களின் கௌரவத்தைப் பாதுகாப்பதும் அவசியம் என்பதை, நான் குழுக்களில் பணியாற்றியதன் மூலம் பெற்ற நீண்டகால அனுபவம் உணர்த்துகிறது.

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் வெற்றியென்பது அதில் பங்கேற்றுகும் அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பின் பிரதிபலனாகும். எனவே, இக்குழுவின் அனைத்து உறுப்பினர்களும் கட்சிபேதமின்றி அரசாங்க நிதிப் பொறிமுறையைச் சரியான முறையில் செயற்படுத்துவது தொடர்பிலான பின்னாய்வு செயற்பாட்டுக்காக எனக்கு வழங்கும் ஆதரவை நான் நன்றியுடன் பாராட்டுகிறேன்.

மேலும், பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் குழுவின் பணிகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு வழங்கும் ஒத்துழைப்புக்காகக் கணக்காய்வாளர் தலைமையதிபதி உள்ளடங்கலாகப் பணியாட்டொகுதிக்கும், திறைசேரியின் உத்தியோகத்தர்களுக்கும், பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் உள்ளடங்கலாக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அலுவலகத்தின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் குழு தனது நன்றியையும் பாராட்டையும் உரித்தாக்குகிறது என்பதை இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கபீர் ஹஷீம்
தவிசாளர்
அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு

சுருக்க அறிக்கை

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடரில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் விசாரணை செய்யப்பட்ட நிறுவனங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள், பிரதான கணக்கீட்டு அலுவலர்களால் அளிக்கப்பட்ட விளக்கங்கள், குழுவினால் வழங்கப்பட்ட விதந்துரைகள் இந்த அறிக்கையில் அடங்கியுள்ளன.

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2024.05.10 ஆந் திகதி தொடக்கம் 2024.08.08 ஆந் திகதி வரை விசாரணை செய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் அது தொடர்பான கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கைகள்

	நிறுவனம்	**பரிசீலிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கைகள் மற்றும் பரிசீலிக்கப்பட்ட விடயங்கள்**	**விசாரணை செய்யப்பட்ட திகதி**
01	மேல் மாகாண சபை	2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் தற்கால செயலாற்றுகை	2024 யூன் 04
02	இலங்கை புகையிரதத் திணைக்களம்	2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் தற்கால செயலாற்றுகை	2024 யூன் 05
03	மேல் மாகாண சபையின் அதிகாரத்திற்குட்பட்ட உள்ளாட்சி மன்றங்கள்	2020, 2021 நிதியாண்டுகளுக்கான மேல் மாகாணத்தின் உள்ளாட்சி நிறுவனங்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமையதிபதியால் வெளியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் அவ்வுள்ளூராட்சி மன்றங்களின் தற்கால செயலாற்றுகை	2024 யூன் 06
04	தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம்	2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் தற்கால செயலாற்றுகை	2024 யூன் 06
05	தொகைமதிப்பு மற்றும்புள்ளிவிபரத் திணைக்களம்	2020, 2021, 2022 நிதி ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கைகள் மற்றும் தற்கால செயலாற்றுகை	2024 யூன் 07
06	ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்	2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் தற்கால செயலாற்றுகை	2024 யூன் 18
07	கமநல அபிவிருத்தித் திணைக்களம்	2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் தற்கால செயலாற்றுகை	2024 யூன் 18
08	தொழில் திணைக்களம்	2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதி	2024 யூன் 19

		அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் தற்கால செயலாற்றுகை	
09	கம்பஹா மாவட்ட செயலகம்	2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் தற்கால செயலாற்றுகை	2024 யூன் 20
10	மேல் மாகாண சபையின் அதிகாரத்திற்குட்பட்ட உள்ளாட்சி மன்றங்கள்	2024.06.06 ஆந் திகதி நடாத்தப்பட்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக்கூட்டத்தில் வழங்கப்பட்ட விதந்துரைகளை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம் குறித்து ஆராய்தல்	2024 யூலை 10
11	கட்டிடங்கள் திணைக்களம்	2020 மற்றும் 2021 நிதி ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் தற்கால செயலாற்றுகை	2024 யூலை 23
12	ஆயுர்வேத திணைக்களம்	2018, 2019, 2020, 2021 மற்றும் 2022 நிதி ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் தற்கால செயலாற்றுகை	2024 யூலை 23
13	வனப் பாதுகாப்புத் திணைக்களம்	2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் தற்கால செயலாற்றுகை	2024 யூலை 25
14	நீர்ப்பாசனத் திணைக்களம்	2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் தற்கால செயலாற்றுகை	2024 ஆகஸ்ட் 07
15	தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம்	இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் செயலாற்றுகையைப் பரிசீலிப்பதற்காக 2024.06.06 ஆந் திகதி நடாத்தப்பட்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக்கூட்டத்தில் வழங்கப்பட்ட விதந்துரைகளின் முன்னேற்றம் மற்றும் தற்கால செயலாற்றுகை	2024 ஆகஸ்ட் 08

சிறப்பு அவதானிப்புகள்

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் உரிய காலப்பகுதியில் பரிசீலிக்கப்பட்ட நிறுவனங்கள் தொடர்பாக பின்வரும் பொதுவான பிரச்சினைகள் அவதானிக்கப்பட்டதோடு, அந்தந்த நிறுவனங்களுக்கு உரியவாறு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதந்துரைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

1. உள்ளகக் கணக்காய்வு அலகுகள் இல்லாமை, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்தாமை

1.1. மேல் மாகாண சபைக்குட்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்கள்

காலாண்டு ரீதியாக நடாத்தப்பட வேண்டிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் உரிய அனைத்து உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் உள்ளூராட்சி நிறுவனத்தினுள்ளேயே நடாத்தப்பட வேண்டுமென குழு விதந்துரைத்தது.

சுயாதீனமான கணக்காய்வொன்றை மேற்கொள்வதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களில் தனிப்பட்ட உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்றை நிறுவுவதன் மூலம் நிறுவனங்களில் இடம்பெறும் ஒழுங்கீனங்களைக் குறைத்துக் கொள்ள முடியும் என்பது குழுவின் கருத்தாக இருந்தது.

1.2. கமநல அபிவிருத்தித் திணைக்களம்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்களைச் சரியான முறையில் நடாத்துவது அமைச்சின் பொறுப்பாகும் என வலியுறுத்திய குழு, 2024 யூலை மாதத்திற்குள் 25 மாவட்ட அலுவலகங்களினதும் உரிய உத்தியோகத்தர்களை இணைத்துக் கொண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்களை நடாத்துமாறும், நிரல் அமைச்சின் ஒருங்கிணைப்புடன் இச்செயன்முறையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுமாறும் விதந்துரைத்தது.

1.3. கம்பஹா மாவட்ட செயலகம்

பிரதேச செயலகங்களின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் உரியவாறு நடாத்தப்படுவது தொடர்பில் மேற்பார்வை செய்வதற்கு பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தலையிட வேண்டும் என குழு விதந்துரைத்தது.

2. ஆளணி வெற்றிடங்கள்.

2.1. இலங்கை புகையிரதத் திணைக்களம்

புகையிரதத் திணைக்களத்தின் மூன்றாம் நிலை வெற்றிடங்கள் 328 ஐ நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது உட்பட ஒட்டுமொத்த திணைக்களத்திலும் பெருமளவிலான வெற்றிடங்கள் நிலவுவது வெளிப்படுத்தப்பட்டது.

2.2. கமநல அபிவிருத்தித் திணைக்களம்

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினுள் பெருமளவிலான ஊழியர் வெற்றிடங்கள் நிலவுவது குழு முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டது. இத்திணைக்களத்தின் கீழ்மட்ட ஊழியர்களின் எண்ணிக்கைக்குச் சார்பாக உயர் பதவிகளில் குறைபாடு

காணப்படுவதாகவும், அறிவியல் ரீதியிலான பகுப்பாய்வொன்றை மேற்கொண்டு திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பைச் சரியான முறையில் தயாரிக்க வேண்டும் என்றும் கணக்காய்வாளர் தலைமையதிபதி சுட்டிக்காட்டினார்.

2.3. கட்டிடத் திணைக்களம்

கட்டிடத் திணைக்களத்தின் ஒட்டுமொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 613 ஆகும் எனவும், 2024.06.30 ஆந் திகதி நிலவரப்படி அதில் 494 பதவிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள அதேவேளை, திணைக்களத்தின் மூன்றாம் நிலை அங்கீகரிக்கப்பட்ட 24 பதவிகளுள் இதுவரையில் 3 பதவிகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனவும் கணக்காய்வாளர் தலைமையதிபதி தெரிவித்துள்ளார்.

3. அரசுக்குச் சேர வேண்டிய வருமானங்களை உரிய திகதியில் அறவிட்டுக்கொள்வதில் தாமதம்.

3.1. மேல் மாகாண சபை மற்றும் அதற்குட்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்கள்

மாகாண இறைவரித் திணைக்களத்தில் ரூபா 777 மில்லியனும், மாகாண மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் ரூபா 11 பில்லியனும், மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தில் ரூபா 905 மில்லியனும் நிலுவை வருமானங்களாகக் காணப்படுவதாகவும், மேல் மாகாணத்தின் சில நகர சபை மற்றும் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களின் சொத்து மதிப்பீட்டுப் பணிகள் பல வருடங்களாக மேற்கொள்ளப்படாமையினால் சொத்துவரி இற்றைப்படுத்தப்படாது கணிசமான வரி வருமானம் இழக்கப்பட்டுள்ளதாகவும் குழு முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டது.

3.2. வனப் பாதுகாப்புத் திணைக்களம்

வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கற்பாறை அகழ்வு உரிமப் பத்திரங்களுக்குரிய நிலுவைக் கட்டணங்களைச் செலுத்தாத 143 நிறுவனங்களுக்கு நிலுவைக் கட்டணங்களைச் செலுத்துமாறு இறுதி அறிவித்தலை அனுப்பிய பின்னரும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளாத நிறுவனங்களைக் கருப்புப் பட்டியலிடுமாறும் (Blacklist), உரிய உரிமப் பத்திர உரிமையாளர்களின் பெயர்களில் பெறப்பட்டுள்ள வேறு உரிமப் பத்திரங்கள் இருப்பின் அவற்றையும் இரத்துச் செய்யுமாறும், தொடர்பாடல் கோபுரக் கட்டணங்கள் தொடர்பில் உரிய தொடர்பாடல் நிறுவனங்களை ஒரே நாளில் அழைத்துக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு இறுதித் திகதியொன்றை நிர்ணயித்து அன்றைய தினத்திற்குள் கட்டணங்களைச் செலுத்தி முடிக்குமாறு அறிவிக்குமாறும் பி.க.அ /க.அ விற்கு குழு விதந்துரைத்தது.

4. தகவல் தொழில்நுட்பத் தொகுதிகளை பயனுறுதி வாய்ந்த முறையில் பயன்படுத்துவது தொடர்பான பிரச்சினைகள் காணப்படல்.

4.1. ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

இலங்கையின் மிளகு மற்றும் கருவா ஆகியவற்றிற்கான புவியியல்சார் குறியீடு (GI) ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வதற்கும், விவசாயிகள், விநியோகஸ்தர்கள் மற்றும் வியாபாரிகளைப் பதிவு செய்வதற்கும் மென்பொருளொன்றைத் தயாரிப்பதற்கும் 300 தொடுதிரைக் கணினிகளை (Tab) கொள்வனவு செய்வதற்கும் ஒரு கோடியே இருபத்தைந்து இலட்சத்திற்கும் (12,500,000) அதிகமான செலவு செய்யப்பட்டிருந்த

போதிலும், அதனூடாக எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் பெற்றுக் கொள்ளப்படவில்லை என்பது குழுவில் வெளிப்படுத்தப்பட்டது.

4.2. மேல் மாகாண சபையின் அதிகாரத்திற்குட்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள்

மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டுப் பணிகளை ஒழுங்குபடுத்துவதற்காக அப்பணிகளைக் கணினிமயப்படுத்துவதற்குத் தயாரிக்கப்பட்ட தரவுத் தொகுதியை இதுவரையில் செயற்படுத்தாமை, அதன் தற்கால நிலைமை மற்றும் அதனைச் செயற்படுத்துவது தாமதமாவதற்குத்தில் தாக்கம் செலுத்தும் பிரச்சினைகள் குறித்து குழு வினவியதுடன், இத்தரவுத் தொகுதியைச் செயற்படுத்தும் பணிகள் இறுதிச் கட்டத்தில் உள்ளதாக மதிப்பீட்டுத் திணைக்களத்தின் க.அ. குறிப்பிட்டார்.

4.3. வனப் பாதுகாப்புத் திணைக்களம்

திணைக்களத்திற்கு மையப்படுத்தப்பட்ட தரவுத் தொகுதியொன்றைப் பேணிச் செல்வது குறித்து குழு அவதானம் செலுத்தியது. தற்போது திணைக்களத்தினுள் உள்ள 8 தொழில்நுட்பப் பிரிவுகளிலும் தனித்தனியான தரவுத் தொகுதிகள் பேணப்பட்டு வருவதாகவும், அதற்கு மேலதிகமாக நிருவாகப் பிரிவு, தாபன மற்றும் ஆராய்ச்சி ஆகிய பிரிவுகளில் தனித்தனியான தரவுத் தொகுதிகள் உள்ளதாகவும், அத்தரவுத் தொகுதிகளைச் சேமிப்பதற்காக 8 டெரா பைற்று கொள்ளளவைக் கொண்ட முகில் (Cloud) தொகுதியொன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் பி.க.அ / க.அ தெரிவித்தார்.

5. நிறுவனங்களுக்கிடையில் செம்மையான ஒருங்கிணைப்பு இன்மை.

5.1. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மக்கள் மற்றும் குடியிறுப்புத் தொகைமதிப்பிற்குரிய தரவுகளைத் திரட்டும் படிவத்தின் மூலம் திரட்டப்படும் அனைத்துத் தரவுகளும், "ஈ-கிராம நிலதாரி" திட்டத்திற்காக (e-GN Project) கிராம நிலதாரிகளினாலும் வேறு படிவத்தைப் பயன்படுத்தித் திரட்டப்படுவதாக வெளிப்படுத்தப்பட்டது. பல அரச நிறுவனங்களினால் ஒரே மாதிரியான தரவுகள் அவ்வப்போது திரட்டப்படுவது மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துவதாகவும், இதன்போது அரசின் செலவினம் அதிகரிப்பதுடன் உழைப்பும் நேரமும் வீணடிக்கப்படுவதாகவும் குழு வலியுறுத்தியது.

5.2. தொழிற் திணைக்களம்

ஆரம்பத்தில் தொழிற் திணைக்களத்தை மாத்திரம் டிஜிட்டல்மயமாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், முன்மொழியப்பட்டுள்ள தேசிய தொழிலாளர் சந்தை தகவல் தொகுதியின் (National Labour Market Information System) ஊடாக தொழிற் திணைக்களம் அடிப்படையாகக் கொண்டுள்ள அனைத்துப் பணிகளையும் டிஜிட்டல்மயமாக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பி.க.அ / க.அ தெரிவித்தார். இலங்கை மத்திய வங்கியும் தொழிற் திணைக்களமும் ஒரே தரவுத் தொகுதியின் ஊடாக இணைவது மிகவும் பொருத்தமானது என இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், அதற்காகக் கொள்கை ரீதியிலான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு யோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு பி.க.அ / க.அ ற்கு குழு அறிவுறுத்தியது.

விசாரணை செய்யப்பட்ட நிறுவனங்களில் கண்டறியப்பட்ட பிரதான பிரச்சினைகள், அவதானிப்புகள் மற்றும் விதந்துரைகள்

	கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலர் (க.அ) விளக்கமளிப்புகள் குழுவின் அவதானிப்புகள்/ விதந்துரைகள்
மேல் மாகாண சபை **2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுக்களுக்கான கணக்காய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான தற்கால செயலாற்றுகை** **விசாரணை செய்யப்பட்ட திகதி - 2024 யூன் 04**		
அழைக்கப்பட்ட நிறுவனங்கள் ❖ பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ❖ மேல் மாகாண சபை தலைமைச் செயலகம் ❖ அரச சேவை ஆணைக்குழு (மே.மா) ❖ மேல் மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு மற்றும் நிர்மாணிப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு ❖ மேல் மாகாண சுகாதார, உள்நாட்டு மருத்துவ, சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் மற்றும் சபை அலுவல்கள் அமைச்சு ❖ மேல் மாகாண, உள்ளூராட்சி, பொருளாதார மேம்பாட்டு, மின்சக்தி மற்றும் வலுசக்தி, சுற்றாடல் அலுவல்கள், நீர் வழங்கல் மற்றும் கழிவகற்றல் மற்றும் சுற்றுலா விவகார அமைச்சு ❖ மேல் மாகாண கமத்தொழில், நீர்ப்பாசன, காணி, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார, மற்றும் விவசாய அபிவிருத்தி அமைச்சு ❖ வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா) ❖ வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை (மே.மா) ❖ கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா)		
01	<u>மேல் மாகாண சபையின் வருமான செலவினங்கள்</u>	இது குறித்து மேல் மாகாண சபையின் பிரதான கணக்கீட்டு அதிகாரி (பி.க.அ)/ கணக்கீட்டு அதிகாரி (க.அ) பகுப்பாய்வொன்று மேற்கொண்டார். அதற்கமைய, மாகாண சபைக்குச் சொந்தமான வைப்பின் பெறுமதி 38.5 பில்லியன் ரூபாவாகும். உள்ளூராட்சி மன்றங்களுக்குச் செலுத்த வேண்டியுள்ள முத்திரைத் தீர்வைகளும் தண்டப் பணங்களுமான மொத்தம் 48 பில்லியன் ரூபாவாகும். . <u>அவதானிப்புக்கள் / விதந்துரைகள்</u> மாகாண சபையினால் உள்ளூராட்சி மன்றங்களுக்குச் செலுத்த வேண்டிய தொகை, வைப்புத் தொகையை விட அதிகமான உள்ளமை குறித்து அவதானம் செலுத்திய குழு, இந்த மாற்றத்திற்கான காரணங்களுடன் மாகாண சபையின்

	கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலர் (க.அ) விளக்கமளிப்புகள் குழுவின் அவதானிப்புகள்/ விதந்துரைகள்
		வருமானம் மற்றும் செலவினங்கள் குறித்துக் கணினி வழிக் காட்சிப்படுத்தலொன்றை (Computer Presentation) அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறு பி.க.அ/ க.அ க்கு விதந்துரைத்தது. இது தொடர்பில் தேசிய வரவுசெலவுத் திணைக்களத்துடன் கலந்துரையாடுமாறு மேற்கொண்டு விதந்துரைத்தது.
02	**<u>நிலுவை வருமானங்களை அறவிட்டுக்கொள்ளல்</u>** மாகாண வருமான வரித் திணைக்களத்தில் ரூ. 777 மில்லியனும், மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் ரூ. 11 பில்லியனும், மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தில் ரூ. 905 மில்லியனும் நிலுவை வருமானமாக உள்ளதாகக் குழுவின் முன்னிலையில் வெளிப்படுத்தியது.	ஆளுநரினால் நியமிக்கப்பட்ட, பிரதம செயலாளரின் தலைமையிலான குழுவொன்றின் மூலம் நிலுவை வருமானங்களை அறவிட்டுக்கொள்ளல் மற்றும் அது தொடர்பில் காணப்படும் பிரச்சினைகள் குறித்துக் கலந்துரையாடப்படுவதாக பி.க.அ குறிப்பிடப்பிட்டார். **<u>அவதானிப்புக்கள் / விதந்துரைகள்</u>** மாகாண வருமானம், காணி ஆணையாளர் மற்றும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் ஆகிய பிரிவுகளிலிருந்து மாகாண சபைக்குக் கிடைக்கப்பெற வேண்டிய நிலுவை வருமானங்களை அறவிட்டுக்கொள்ளல், அவற்றின் இலக்கு வைக்கப்பட்ட வருமானத்தைத் தீர்மானித்தல், வருமான முதலீடு செய்யும் முறைமை போன்ற விடயங்கள் தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்காக முறையான பொறிமுறையொன்றைத் தயாரிக்குமாறு பிரதம செயலாளருக்குக் குழு விதந்துரைத்தது.
03	**<u>பொருளாதார மேம்பாட்டுப் பணியகத்தின் கீழ் தொழிற்படும் வெஸ்ப்ரோ (Wespro) அச்சகத்தின் ரூ. 41 மில்லியன் வரையிலான அச்சுப் பொருட்கள் கையிருப்புக் குறைபாடு உள்ளிட்ட பல ஒழுங்கீனங்கள் கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டிருந்தமை.</u>**	இது தொடர்பில் விசேட குழுவொன்றின் மூலம் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு வருவதாக பி.க.அ தெரிவித்தார். **<u>அவதானிப்புக்கள் / விதந்துரைகள்</u>** பொருளாதார மேம்பாட்டுப் பணியகத்தின் முறையற்ற நிர்வாகம் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகள் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டமையின் காரணமாக இடம்பெற்றுள்ள மோசடிகள் மற்றும் ஒழுங்கீனங்கள் குறித்து ஆராய்வதற்காக பிரதம செயலாளரின் தலைமையிலான குழுவொன்றை நியமிக்குமாறும், அது பற்றிய அறிக்கையொன்றை அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறும் மாகாண சபையின் பிரதான செயலாளருக்குக் குழு விதந்துரைத்தது. **மேல் மாகாண பிரதம செயலாளரின் CSWP/FIN-AP/01/FI/18 (C) ஆம் இலக்க மற்றும் 2024.06.13 ஆந் திகதிய கடிதம் மூலம் உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**

	கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலர் (க.அ) விளக்கமளிப்புகள் குழுவின் அவதானிப்புகள்/ விதந்துரைகள்
04	**மதிப்பீட்டு நடவடிக்கைகள் உரிய முறையில் இடம்பெறாமை**	**அவதானிப்புக்கள் / விதந்துரைகள்** மாநகர சபைகள் மற்றும் நகர சபைகளின் மதிப்பீட்டு நடவடிக்கைகளில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்த்துக்கொள்வதற்காகத் தேவையாயின் உரிய சட்டமூலங்களைத் திருத்தியமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குழு அறிவுறுத்தியது.
05	**பிரிக்கப்பட்டு ஏலம் விடப்படும் காணிகள் மற்றும் வீடமைப்புத் திட்டங்களிலிருந்து காணிகள்/ வீடுகளை விலைக்கு வாங்கும் பொதுமக்கள் எதிர்கொள்ள வேண்டியேற்பட்டுள்ள பிரச்சினைகள்** சில விற்பனையாளர்களினால் உரிய சொத்துக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்டுள்ளதுடன், கடன் தவணைக் கட்டணங்களைச் செலுத்தாமையினால் வங்கியினால் அச்சொத்துக்களைக் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதன் காரணமாக அச்சொத்துக்களை விலைக்கு வாங்கிய பொதுமக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகத் தவிசாளர் சுட்டிக்காட்டினார்.	இது தொடர்பில் குழு விரிவாகக் கலந்துரையாடியதுடன், இதற்கான தீர்வைக் காண்பதில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குப் பாரிய பொறுப்பொன்று காணப்படுவதால் 2024 யூன் மாதம் 06 ஆந் திகதி நடைபெறவுள்ள அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவுக் கூட்டத்திற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையை அழைப்பதற்குக் குழு தீர்மானித்தது.
06	**சனச சங்கங்கள் செயலிழந்த நிலைக்குள்ளாகியிருந்தமை.** கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சனச சங்கங்கள் தொடர்ந்து குறித்த நடைமுறையொன்றைப் பின்பற்றாமல் கடன்களை வழங்குதல் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டமையினால் அச்சங்கங்கள் செயலிழந்த நிலைக்குச் சென்றுள்ளதாக இதன்போது வெளிப்படுத்தப்பட்டது.	**அவதானிப்புக்கள் / விதந்துரைகள்** இதனால் அச்சங்கங்களில் பணத்தை முதலீடு செய்த வைப்பாளர்கள் பெருந்திரளானோரின் வைப்புப் பணத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ள முடியாமல் அப்பாவிப் பொதுமக்கள் நிர்க்கதியான நிலைக்கு ஆளாகியுள்ளனர் என்றும், இவ்வாறானதொரு நிலைமை ஏற்படுவதற்கான அடிப்படைக்காரணம் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் பலவீனமான ஒழுங்குறுத்தலாகும் என்றும் குழு சுட்டிக்காட்டியது. கூட்டுறவு இயக்கத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள் மற்றும் அதனை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடிய குழு, கூட்டுறவுக் எண்ணக்கரு அழிந்துபோக இடமளிக்காது பாதுகாப்பது அனைவரினதும் பொறுப்பாகும் என்பதையும் வலியுறுத்தியது.

	கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலர் (க.அ) விளக்கமளிப்புகள் குழுவின் அவதானிப்புகள்/ விதந்துரைகள்
07	**வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் பதவிகள் 02 க்காகப் பதில் கடமை அடிப்படையில் தகுதிகளைப் பூர்த்தி செய்யாத அதிகாரிகளை நியமித்தல்** வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்காகப் பொது முகாமையாளர் பதவிக்கு மேலதிகமாக 3 பிரதிப் பொது முகாமையாளர் பதவிகளை உருவாக்குதல் மற்றும் அவற்றுள் 2 பதவிகளுக்காகத் தகுதிகளைப் பூர்த்தி செய்யாத இரு அதிகாரிகள் பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கணக்காய்வு குழுவிற்குச் சுட்டிக்காட்டியது.	இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஊழியர் மீளாய்வொன்றிற்கு அமைவாக வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்காக 818 பேரைக் கொண்ட பணியாட்டொகுதிக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதாக பி.க.அ/ க.அ அவர்களினால் குறிப்பிடப்பட்டது. அந்த 818 பேருக்குள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் பதவிகள் 03 காணப்பட்டதாகவும், 2016 ஆம் ஆண்டில் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிதி) மற்றும் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (இயக்கம்) ஆகிய பதவிகள் வெற்றிடமானதால் உள்ளக அதிகாரிகள் இருவர் அப்பதவிகளுக்காகப் பதில் கடமை அடிப்படையில் இணைக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். அவ்வதிகாரிகளுக்கான சம்பளத்தைக் கணிப்பிடும் போது ஏற்பட்ட தவறு காரணமாக மேலதிகச் சம்பளக் கொடுப்பனவொன்று செலுத்தப்பட்டுள்ளதாகவும், அப்பணத்தை வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்குத் திரும்பச் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் க.அ மேலும் குறிப்பிட்டார். **அவதானிப்புக்கள் / விதந்துரைகள்** இப்பதவிகள் 02 க்காக பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைவாகத் தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளாரா, ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அதிகாரிகளுள் எவரேனும் அதிகாரியினால் போலியான சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவா என்பது குறித்த நிலைமை மற்றும் அவ்வதிகாரிகளுக்கு மேலதிகச் சம்பளம் செலுத்தியமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ஆகிய விடயங்கள் குறித்துப் பரிசோதித்துப் பார்த்து அடுத்த கூட்டத்தில் குழுவிற்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு பிரதான செயலாளருக்குக் குழு விதந்துத்தது. **மேல் மாகாண பிரதான செயலாளரின் CSWP/FIN-AP/01/FI/18(C) ஆம் இலக்க மற்றும் 2024.08.26 ஆந் திகதிய கடிதம் மூலம் உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
08	**ஏனைய வீதிகளில் இயங்குவதற்காக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள பேருந்துகளுக்கு அதிவேகப் பாதையில் இயங்குவதற்காக விசேட சுற்றுலா**	இது தொடர்பில் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் க.அ குறிப்பிடப்பட்டதாவது, பயணிகள் தேவைக்கு அமைவாக வேறொரு வீதியில் இயங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ள பேருந்துகள் அதிவேகப் பாதையில் இயங்குவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதாகும்.

	கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலர் (க.அ) விளக்கமளிப்புகள்** **குழுவின் அவதானிப்புகள்/ விதந்துரைகள்**
	<u>அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.</u>	அதற்காக அனுமதிப்பத்திரமாக விசேட சுற்றுலா அனுமதிப்பத்திரம் பயன்படுத்தப்படுவதாகவும் குறிப்பிட்டார்.
09	**<u>2022.12.31ஆந் திகதியளவில் வழங்கப்பட்டிருந்த பொது மக்கள் போக்குவரத்துச் சேவைகள் அனுமதிப் பத்திரங்கள் 6161 இல் 5064 (82%) அனுமதிப்பத்திரங்கள் டெண்டர் நடைமுறைக்கு புறம்பாக வழங்கப்பட்டிருந்தமை.</u>**	2007 ஆம் ஆண்டில் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னர் அவ்வாறான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2007 ஆம் ஆண்டிற்குப் பின்னர் டெண்டர் நடைமுறைக்கு அமைவாக மட்டுமே வீதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் நடவடிக்கை இடம்பெறுவதாக க.அ தெரிவித்தார்.
10	**<u>அதிவேகப் பாதையில் பேருந்துகளின் இயக்கத்தை ஒழுங்குபடுத்துவதற்காக GPS தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்</u>.**	இதற்காக மொறட்டுவ பல்கலைக்கழகத்தினால் தயாரிக்கப்பட்ட மென்பொருளொன்று பயன்படுத்தப்படுவதாகவும், அது ஒரு முன்னோடிக் கருததிட்டமாக கடவத்தையிலிருந்து அதிவேகப் பாதையில் இயக்கப்படும் பேருந்துகளுக்காகப் பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தவிசாளர் குழுவிற்குத் அறிவித்தார். இதன் மூலம் பயணிகளுக்குத் தேவையான தகவல்களையும் அதிகாரிகளுக்குத் தேவையான தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவித்த தவிசாளர், அக்கருத்திட்டத்தின் முன்னேற்றம் அடுத்த குழுக்கூட்டத்தில் பரிசீலிக்கப்படும் என்றும் அறிவித்தார்.
இலங்கைப் புகையிரதத் திணைக்களம் **(2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை)** **விசாரணை மேற்கொள்ளப்பட்ட திகதி – 2024 யூன் 05**		
அழைக்கப்பட்ட நிறுவனங்கள்: ❖ போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு ❖ இலங்கை புகையிரதத் திணைக்களம்		
01	**<u>சமிக்ஞை ஒலி மற்றும் விளக்குத் தொகுதிகளை நிறுவுதல் மற்றும் அதன் தற்போதைய நிலை</u>** 44 தொகுதிகள் தற்பொழுது செயலற்ற நிலையில் உள்ளதாகவும், இதனால் புகையிரதத் திணைக்களத்திற்கு ரூ 213 மில்லியன் அளவிலான நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும்	இக் கருத்திட்டம் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு கருத்திட்டம் என்பதால், அக்காலத்தில் எழுந்த தேவையின் அடிப்படையில் குறைந்த நிதி ஒதுக்கீடுகளைக் கவனத்திற் கொண்டு கொள்முதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனத் தான் நம்புவதாகப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பி.க.அ / க.அ தெரிவித்தார். <u>அவதானிப்புக்கள்/ விதந்துரைகள்</u> சமிக்ஞை ஒலி மற்றும் விளக்குத் தொகுதிக் கருத்திட்டம் வெளிநாட்டு உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு

	கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலர் (க.அ) விளக்கமளிப்புகள் குழுவின் அவதானிப்புகள்/ விதந்துரைகள்
	கணக்காய்வுப் பிரிவினால் சுட்டிக்காட்டப்பட்டது. தொகுதிகளின் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் மையக் கண்காணிப்பு முறைமை ஒன்று உள்ளடக்கப்படாமை மற்றும் சமிக்ஞை ஒலி மற்றும் விளக்குத் தொகுதிகள் செயலிழத்தல் என்பவற்றால் பொதுமக்களின் பாதுகாப்பிற்கு ஏற்பட்ட பாதிப்புத் தொடர்பிலும் குழு கவனம் செலுத்தியது.	கருத்திட்டம் என்பதால், மையக் கட்டமைப்பு இன்றி இக்கட்டமைப்பை வடிவமைப்பு செய்தமைக்கான காரணமென கருத்திட்டத்திற்குப் பெறப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் வரம்பிற்குட்பட்டதாக இருந்ததென ஊக அடிப்படையிலான பதிலில் திருப்தியடைய முடியாது எனக் குழு தெரிவித்தது. சமிக்ஞை ஒலி மற்றும் விளக்குத் தொகுதிகளை நிறுவுவதற்காக உரிய நிறுவனத்தைத் தெரிவுசெய்யும்போது பின்பற்றப்பட்ட நடைமுறை, தற்காலகட்டத்தில் நிறுவப்பட்டுள்ள அளவு மற்றும் சரியாக இயங்கும் அளவுகள், இத் தொகுதியை முறையாகப் பராமரித்தல் மற்றும் முறையான மேற்பார்வை இன்மைக்மைக்குச் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் தொடர்பிலும் மற்றும் சமிக்ஞை ஒலி மற்றும் விளக்குத் தொகுதிக்கு மைய இயக்கக் கட்டமைப்பு ஒன்றை நிறுவுவது தொடர்பிலும் அறிக்கை ஒன்றைத் தயாரித்து 2024 யூலை 5ஆந் திகதியளவில் குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பி.நி.அ / நி.அ. விற்குக் குழு விதந்துரைத்தது. **போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரின் MT/04/14/03/02-2024 ஆம் இலக்க 2024.07.17 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
02	**<u>புகையிரத திணைக்களத்தின் மூன்றாம் நிலை வெற்றிடங்கள் 328 நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படாமை உட்பட்ட முழு திணைக்களத்திலும் பெருமளவிலான வெற்றிடங்கள் காணப்படுதல்</u>**	அரசு சேவைக்கு ஆட்களைச் சேர்த்தலை இடைநிறுத்தும் அரசாங்கக் கொள்கை காரணமாகக் கடந்த சில வருடங்களில் தொழில்நுட்பப் பிரிவுகளுக்கு ஆட்களைச் சேர்த்தல் தேவையானவாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எனப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பி.க.அ / க.அ தெரிவித்தார். மேலும், புகையிரத சாரதி பதவியின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 458 ஆக இருந்தபோதிலும் தற்போதுள்ள சாரதிகளின் எண்ணிக்கை 272 மட்டுமே என்பதையும், 2017 ஆம் ஆண்டிற்குப் பின்னர் புகையிரத சாரதி பதவிக்கு ஆட்களைச் சேர்த்தல் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். <u>அவதானிப்புக்கள் / விதந்துரைகள்</u> புகையிரதக் கட்டுப்பாட்டாளர், புகையிரத சாரதி உட்பட அனைத்து அத்தியாவசிய ஆட்சேர்ப்புக்களையும் துரிதமாக மேற்கொள்வதற்கும், உள்வாரிப் பதவி உயர்வுச் செயன்முறையை முறையான விதத்தில் மேற்கொள்வதற்கும் குழு ஆலோசனை வழங்கியடன், புகையிரத சேவையின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பில் காணப்படும்

	கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலர் (க.அ) விளக்கமளிப்புகள் குழுவின் அவதானிப்புகள்/ விதந்துரைகள்
		தடைகளை அகற்றி துரிதமாக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுடனும் கலந்துரையாடி பொருத்தமான வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்குமாறு பி.நி.அ / நி.அ. விற்கு குழு விதந்துரைத்தது. **போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரின் MT/04/14/03/02-2024 ஆம் இலக்க மற்றும் 2024.12.23ஆந் திகதிய கடிதம் மூலம் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
03	<u>**மிகவும் திறனுள்ள மற்றும் இலாபகரமான பொருட்கள் போக்குவரத்து ஊடகமாகப் புகையிரத சேவையைப் பிரசித்தி பெறச் செய்தல்.**</u>	புகையிரதப் பாதைகள் வழியாகச் சரக்குப் போக்குவரத்து வலைப்பின்னல் ஒன்றை உருவாக்குவது தொடர்பில் செலுத்தப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் ஆய்வொன்றை மேற்கொள்வதற்காகத் தமது அமைச்சினுள் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், 7.5 மில்லியன் அமெரிக்க டொலர் உலக வங்கி உதவித்தொகை ஒன்றும் இந்நடவடிக்கைக்காகக் கிடைக்கப் பெறவுள்ளதாகவும், இம்மாதத்தினுள் பெலியத்தவிலிருந்து கொழும்பு வரை முன்னோடி சரக்குப் போக்குவரத்து புகையிரதம் ஒன்றும் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பி.க.அ தெரிவித்தார்.
04	<u>முன்னைய குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட கட்டளைகளை நடைமுறைப்படுத்தாமை</u> ஊழியர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கும் முறைமை தொடர்பில் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் எழுத்துமூலக் கட்டளையின் பிரதிகளைக் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கும் சமர்ப்பிக்குமாறு முந்தைய குழுவுக் கூட்டத்தில் (2019.06.21ஆந் திகதிய குழுவின் செயல் குறிப்பு விடயம் 8.2 ஆம் பந்தி) செய்யப்பட்ட விதந்துரை நடைமுறைப்படுத்தப்படாமை.	புகையிரத சேவையின் மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கல் தாபனக் கோவையின் 8 ஆம் அத்தியாயத்திற்கு முரணாக இடம்பெற்றுள்ளது என்றும், மேல்நேரக் கொடுப்பனவு வழங்கும் முறைமையை முன்பிருந்தவாறே முன்னெடுப்பதற்கு நிறுவனப் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கூறப்பட்டவாறு கடிதம் எதுவும் வழங்கப்படவில்லை என்றும் குழுவின் முன்னிலையில் தெரிவிக்கப்பட்டதுடன், தற்போது புகையிரதப் பொது முகாமையாளரினால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுறுத்தல்கள் மற்றும் விதிக்கப்படும் எல்லைகளுக்கு உட்பட்டு மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன எனப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் க.அ தெரிவித்தார். <u>அவதானிப்புக்கள் / விதந்துரைகள்</u> மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கும் முறைமை தொடர்பில் நிறுவனப் பணிப்பாளர் நாயகத்தினால் கடிதம் எதுவும் வழங்கப்படவில்லை எனப் புகையிரத திணைக்களத்தின் க.அ வினால் தெரிவிக்கப்பட்டதன் காரணமாக, முந்தைய குழுவுக் கூட்டத்தில் குழு தவறாக வழிநடத்தப்பட்டுள்ளமை புலப்படுவதால், அவ்வாறு குழுவைத் தவறாக வழிநடத்திய உத்தியோகத்தர் யார் என்பது குறித்தும், அத்தகைய கூற்றை வெளியிடுவதற்குக் காரணமான விடயங்கள் எவை என்பது

	கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலர் (க.அ) விளக்கமளிப்புகள் குழுவின் அவதானிப்புகள்/ விதந்துரைகள்
		குறித்தும், 2019 யூன் 21ஆந் திகதி நடைபெற்ற குழுவில் கலந்துரையாடப்பட்ட கணக்காய்வு வினவல் தொடர்பான தற்போதைய நிலைமையும் உள்ளடங்கிய அறிக்கை ஒன்றை 2 மாதங்களுக்குள் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பி.க.அ வுக்கு குழு விதந்துரைத்தது. **போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரின் MT/04/14/03/02-2024 ஆம் இலக்க மற்றும் 2024.12.23ஆந் திகதிய கடிதம் மூலம் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
05	**<u>புகையிரத திணைக்களத்தினுள் தகவல் தொழில்நுட்பப் பிரிவை வலுப்படுத்துவதற்குத் தேவையான அமைச்சரவைப் பத்திரமொன்றைத் தயாரித்தல்.</u>** 2019 ஆம் ஆண்டில் கோபா குழு இதற்கான தேவையை இனங்கண்டு தேவையான விதந்துரைகளை வழங்கியிருந்த போதிலும், இதுவரை அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை தொடர்பில் குழு தனது அதிருப்தியை வெளியிட்டது.	புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்களைக் குத்தகைக்கு விடுவதற்காக நிகழ்நிலைத் தகவல் முறைமையொன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும், 2024 யூலை மாதம் 15ஆந் திகதியளவில் உரிய குத்தகைக்கு விடப்பட்டுள்ள சொத்துக்களை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் க.அ தெரிவித்தார். **<u>அவதானிப்புக்கள் / விதந்துரைகள்</u>** புகையிரத திணைக்களத்தில் தகவல் தொழில்நுட்பப் பிரிவொன்றை நிறுவுவதற்காகத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆலோசனை வழங்கிய குழு, இது தொடர்பில் புகையிரத திணைக்களத்தினால் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையொன்றைத் தயாரித்து 2024 ஆகஸ்ட் 05ஆந் திகதியளவில் குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பி.க.அ. / க.அ க்கு விதந்துரைத்தது. **போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரின் MT/04/14/03/02-2024 ஆம் இலக்க மற்றும் 2024.07.17ஆந் திகதிய கடிதம் மூலம் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
06	**<u>புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள் / ஆதனங்கள் மற்றும் அவற்றைக்க குத்தகைக்கு விடுவது தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்</u>**	தற்போது நாடு முழுவதும் பரந்து காணப்படும் புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து அக்காணிகளைக் கணினிமயப்படுத்தும் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், பிரதான நகரங்களை அண்டிய சொத்துக்கள் ஏற்கனவே

	கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலர் (க.அ) விளக்கமளிப்புகள் குழுவின் அவதானிப்புகள்/ விதந்துரைகள்
	2019 யூன் மாதம் 21ஆந் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட விதந்துரைகளுக்கு அமைவாகப் புகையிரத திணைக்களத்தின் காணிகளைக் கணினிமயப்படுத்துவது இடம்பெற்றிருக்கவில்லை என்றும், காணிக் குத்தகைக்கு விடுவது தொடர்பான ரூ. 79மில்லியன் தொகை திணைக்களத்திற்குக் கிடைக்கவில்லை என்றும் கணக்காய்வாளர் தலைமையதிபதி சுட்டிக்காட்டினார்.	கணினி முறைமையில் உள்ளீர்க்கப்பட்டுள்ளதாகவும், புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்களில் குடியிருப்பாளர்களுக்கு 2024 யூலை 15ஆந் திகதி வரை பதிவு செய்வதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பி.க.அ தெரிவித்தார். அதனடிப்படையில் அடையாளம் காணப்பட்ட, பதிவு செய்துகொள்ளாத மற்றும் சட்டவிரோதக் குடியிருப்பாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார். <u>அவதானிப்புக்கள் / விதந்துரைகள்</u> புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள் / ஆதனங்கள் தொடர்பான தரவுகளைக் கொண்ட தகவல் முறைமையொன்றை நிறுவுவது பற்றிய அறிக்கையொன்றை 2024 ஆகஸ்ட் 5ஆந் திகதியளவிலும், திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் சட்டவிரோதக் குடியிருப்புகள் மற்றும் பதிவுகளின் எண்ணிக்கை தொடர்பில் தயாரிக்கப்பட்ட முழுமையான அறிக்கையொன்றை 2024 செப்டெம்பர் 15ஆந் திகதியளவிலும் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பி.க.அ / க.அ விற்கு குழு விதந்துரைத்தது. **போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரின் MT/04/14/03/02-2024 ஆம் இலக்க மற்றும் 2024.08.05, 2024.10.02ஆந் திகதிய கடிதங்கள் மூலம் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
07	<u>வெலிகம புகையிரத நிலையத்திற்கு அருகில் புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணயில் 14 அறைகளைக் கொண்ட கட்டடமொன்றைச் சட்டவிரோதமாக நிர்மாணித்தல்</u>	இதன்போது, பிரதம கணக்கீட்டு அலுவலர் உரிய அதிகாரிகளுக்கு எதிராக முறையான நடவடிக்கை எடுக்காமல், குறித்த பொறுப்பை அவ்வதிகாரிகள் மீது சுமத்திப் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்ள முயற்சிப்பது குறித்துக் குழு தனது அதிருப்தியை வெளியிட்டது. <u>அவதானிப்புக்கள் / விதந்துரைகள்</u> இச்சட்டவிரோத நிர்மாணங்கள் மற்றும் சட்டவிரோதக் காணி ஆக்கிரமிப்புகள் தொடர்பில் உரிய புகையிரத நிலைய அதிபர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறும், இனிவரும் காலத்தில் இவ்வாறானவை இடம்பெறுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பி.க.அ / க.அ க்கு குழு விதந்துரைத்தது.

	கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலர் (க.அ) விளக்கமளிப்புகள்** **குழுவின் அவதானிப்புகள்/ விதந்துரைகள்**
08	பொருட்கள் கிடைக்கப்பெற்றமையை உறுதிப்படுத்திக் கொள்ளாமல் புகையிரத திணைக்களத்தினால் ஏறத்தாழ ரூ. 95மில்லியன் பெறுமதியான பணத்தைச் வழங்குநர்களுக்குச் செலுத்தியுள்ளமை மற்றும் 2020 ஆம் ஆண்டு முடிவடையும் போது பயன்படுத்த முடியாத மட்டத்தில் ரூ. 298மில்லியன் பெறுமதியான பொருட்கள் கையிருப்புக் களஞ்சியங்களில் இருந்தமை தொடர்பிலும் குழு கவனம் செலுத்தியது.	மேலும், உரிய வழங்குநர்களிடமிருந்து பொருட்கள் கிடைக்கப்பெறாமல் உரிய முழுத்தொகையையும் வழங்குநர்களுக்கு விடுவிப்பது கடந்த காலத்திலிருந்து பயன்படுத்தப்பட்ட ஒரு தவறான நடைமுறை என்றும், புகையிரத திணைக்களம் சிறிய அளவுகளில் பொருட்களைக் கொள்வனவு செய்வதன் காரணமாக உரிய விநியோகங்களுக்கு முன்னுரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக அந்நடவடிக்கை பின்பற்றப்பட்டது என்றும், தற்போது பொருட்கள் கிடைப்பதற்கு முன்னர் உரிய தொகையிலிருந்து 80% கொடுப்பனவை மாத்திரம் செலுத்துவதற்கான விதந்துரையொன்றும் செய்யப்பட்டுள்ளது என்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பி.க.அ. குழுவின் முன் தெரிவித்தார். <u>அவதானிப்புக்கள் / விதந்துரைகள்</u> புகையிரத உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்தல் மற்றும் கையிருப்பு முகாமைத்துவம் தொடர்பில் இதைவிட முறையான நடைமுறையொன்றைப் பின்பற்றுமாறு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பி.க.அ வுக்குக் குழு அறிவுறுத்தல் வழங்கியது.
09	**<u>2019 யூன் மாதம் 21ஆந் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவுக் கூட்டத்தில் கலந்துரையாடலுக்குப் பாத்திரமான, இந்தியக் கடன் உதவியின் கீழ் 10 புகையிரத எஞ்சின்களை இறக்குமதி செய்தல் தொடர்பிலும், அவ்வாறு கொண்டுவரப்பட்ட புகையிரத எஞ்சின்களுள் சில பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமை தொடர்பிலும்</u>** அமெரிக்காவிலிருந்து இதைவிடக் குறைந்த தொகையில் புகையிரத எஞ்சின்களைப் பெற்றுக்கொள்ள முடிந்திருந்தமை, கொண்டுவரப்பட்ட எஞ்சின்களுக்கான 46 தொழில்நுட்ப விவரக் குறிப்புக்களில் 17 இணங்காமல் இருந்தமை மற்றும் முழுமையான கொடுக்கல்வாங்கல் ஊடாக	இவ்வாறான இறக்குமதிகளின் போது தொழில்நுட்ப ரீதியாக அனைத்துக் காரியங்களையும் திருப்திப்படுத்துவது நடைமுறைச் சாத்தியமற்றது என்றும், இணங்காமைகள் தொடர்பில் வழங்குநர்களுடன் சில உடன்பாடுகளுக்கு வந்ததாகவும், உரிய கடன் வசதியை வழங்கிய இந்திய வங்கியினால் விதிக்கப்பட்ட கடன் நிபந்தனைகளுக்கு அமைய அவர்களினால் பெயரிடப்பட்ட வழங்குநர்களுளிருந்து வழங்குநர் ஒருவரைத் தெரிவுசெய்ய வேண்டியேற்பட்டது என்றும், இதன்போது கருத்தைத் தெரிவித்து போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பி.க.அ குழுவின் முன் தெரிவித்தார். அவ்வாறே, இறக்குமதி செய்யப்பட்ட புகையிரத எஞ்சின்களுள் ஒரு எஞ்சின் கடுமையான விபத்துக்குள்ளானமையினால் உதிரிப்பாகங்கள் இறக்குமதி செய்யப்படும் வரை இரத்மலானை புகையிரத பாராமரிப்புத் தளத்தில் உள்ளதாகவும், ஏனைய 9 எஞ்சின்களும் இயங்கும் நிலையில் உள்ளதாகவும், அவற்றுள் 4 எஞ்சின்களின் சக்கரங்கள் தேய்வடைந்தமையினால் சக்கரங்களை மாற்றுவதற்காக நிறுத்தப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பி.க.அ குழுவின் முன் தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலர் (க.அ) விளக்கமளிப்புகள்** **குழுவின் அவதானிப்புகள்/ விதந்துரைகள்**
	அரசாங்கத்திற்கு 1905 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டிருந்தமை தொடர்பிலும் குழு கவனம் செலுத்தியது.	
10	**கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சுருக்கக் குறிப்பில் அடங்கியுள்ள விடயங்கள் (2024.06.05ஆந் திகதிய கூட்டத்தில் கலந்துரையாடப்படாத கணக்காய்வுப் பந்திகள்)**	**அவதானிப்புக்கள் / விதந்துரைகள்** 2024.06.05ஆந் திகதிய கூட்டத்திற்காகக் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வுச் சுருக்கக் குறிப்பில் (Brief Note) அடங்கியுள்ள, எனினும் இன்றைய தினம் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படாத கணக்காய்வு வினவல்கள் தொடர்பான விரிவான பதில் அறிக்கையொன்றை 2024 ஆகஸ்ட் 05ஆந் திகதியளவில் குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பி.க.அ / க.அ க்கு குழு விதந்துரைத்தது. **போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரின் MT/04/14/03/02-2024 ஆம் இலக்க மற்றும் 2024.08.05ஆந் திகதிய கடிதம் மூலம் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
11	**புதிதாக இந்நாட்டிற்குக்கொண்டுவரப்பட்ட புகையிரத எஞ்சின்களின் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் புகையிரதப் பராமரிப்புத் தளங்களை விரிவாக்குவது தொடர்பில் வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான தேவை.**	புகையிரத சேவையை மறுசீரமைப்பதற்காகப் பிரேரணைகளை வழங்குமாறு அமைச்சரவையினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் அறிக்கை அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், அவ்வறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் மற்றுமொரு குழுவிடமிருந்து அறிக்கையொன்று கோரப்பட்டுள்ளதாகவும், அது எதிர்வரும் வாரத்தில் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் பி.க.அ குழுவின் முன் தெரிவித்தார்.
12	**புகையிரத திணைக்களத்தில் தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பொன்றை உருவாக்குதல், மனித வள முகாமை மற்றும் புகையிரத மூலம் சரக்குப் போக்குவரத்தைப் பிரபலமாக்குதல்**	**அவதானிப்புக்கள் / விதந்துரைகள்** புகையிரத திணைக்களத்தில் தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பொன்றை உருவாக்குதல், மனித வள முகாமை மற்றும் புகையிரத மூலம் சரக்குப் போக்குவரத்தைப் பிரபலமாக்குதல் ஆகிய விடயங்கள் தொடர்பில் புகையிரத திணைக்களம் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்துத் தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றை 2024 ஆகஸ்ட் 05ஆந் திகதியளவில் குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு போக்குவரத்து மற்றும்

	கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலர் (க.அ) விளக்கமளிப்புகள் குழுவின் அவதானிப்புகள்/ விதந்துரைகள்
		நெடுஞ்சாலைகள் அமைச்சின் பி.க .அ / க.அ விற்கு குழு விதந்துரைத்தது. **போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரின் MT/04/14/03/02-2024 ஆம் இலக்க மற்றும் 2024.08.05ஆந் திகதிய கடிதம் மூலம் உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**

மேல் மாகாண சபைக்குச் சொந்தமான உள்ளூராட்சி மன்றங்கள்

(2020, 2021 நிதியாண்டுகளுக்காக மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளும் அவ்வுள்ளூராட்சி மன்றங்களின் தற்போதைய செயலாற்றுகையும்)

விசாரணை செய்யப்பட்ட திகதி - 2024 யூன் 06

அழைக்கப்பட்ட நிறுவனங்கள் -

- ❖ பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
- ❖ மேல் மாகாண சபை பிரதான செயலாளர் அலுவலகம்
- ❖ உள்ளூராட்சி அமைச்சு (மே.மா.)
- ❖ மாகாண இறைவரித் திணைக்களம் (மே.மா.)
- ❖ உள்ளூராட்சித் திணைக்களம் (மே.மா.)
- ❖ நீர்கொழும்பு மாநகர சபை
- ❖ களுத்துறை மாநகர சபை
- ❖ கடுவெல மாநகர சபை
- ❖ ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை
- ❖ பேலியகொட நகர சபை
- ❖ மகரகம நகர சபை
- ❖ மஹர பிரதேச சபை
- ❖ களுத்துறை பிரதேச சபை
- ❖ பேருவளை பிரதேச சபை
- ❖ நகர அபிவிருத்தி அதிகாரசபை
- ❖ அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களம்

01	**<u>காணிகளைத் பிரித்து செய்து விற்பனை செய்யும்போது பொதுக் தேவைகளுக்காகக் காணிப் பங்குகளை ஒதுக்குதல்.</u>**	<u>அவதானிப்புக்கள் / விதந்துரைகள்</u> காணிகளை ஏலம் விடும்போது பொதுத் தேவைகளுக்காக ஒதுக்கப்படும் காணிகள் பாவனைகுதவாத நிலையில் காணப்படுவதாக அவதானிக்கப்படுவதாகக் குழு சுட்டிக்காட்டியது. அதற்கமைய, கடந்த 20 வருட காலப் பகுதியில் காணிகளைத் பிரித்து விற்பனை செய்யும் போது பொதுத் தேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட காணிகளின் தற்போதைய நிலைமை குறித்து ஆய்வொன்றை மேற்கொள்ளுமாறு மேல் மாகாணத்தின் உள்ளூராட்சித் திணைக்களத்தின் க.அ க்குக் குழு விதந்துரைத்தது.

	கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலர் (க.அ) விளக்கமளிப்புகள்** **குழுவின் அவதானிப்புகள்/ விதந்துரைகள்**
		மேல் மாகாண உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரின் CMWP/ACC 3/9/2 – 2023 ஆம் இலக்க மற்றும் 2024.07.08ஆந் திகதிய கடிதம் மூலம் உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
02	**காணி மற்றும் வீடு விற்பனையாளர்களின் மோசடி நடவடிக்கைகளால் கொள்வனவு செய்வோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்**	**அவதானிப்புக்கள் / விதந்துரைகள்** பெரும்பாலான ஏல விற்பனையாளர்களினால் விற்பனை செய்யப்படும் காணிகள் மற்றும் வீடுகள் அவர்களினால் வங்கிகளில் அடகு வைக்கப்பட்டுள்ளமையால் அவற்றை விலைக்கு வாங்கும் பொதுமக்கள் பெரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர் என்பதை வலியுறுத்திய குழு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, பிரதம செயலாளர் (மே.மா), உள்ளூராட்சித் திணைக்களம் (மே.மா) மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவொன்றின் மூலம் அதற்கான தீர்வு யோசனைகளைத் தயாரித்து 2024 யூலை 10ஆந் திகதியளவில் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு விதந்துரைத்தது. மேற்படி குழுவினால் சமர்ப்பிக்கப்படும் தீர்வு யோசனைகளில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் குழு விதந்துரைத்தது. • வீடமைப்புத் திட்டங்களிலிருந்து வீடுகளை அல்லது ஏல விற்பனையாளர்களிடமிருந்து காணிகளை விலைக்கு வாங்கும் பொதுமக்கள், விற்பனையாளர்களின் மோசடி நடவடிக்கைகளால் பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதைத் தடுப்பதற்கான பிரேரணைகள். • வீடமைப்புத் திட்டங்களிலும் ஏலக் காணிகளிலும் நீர், மின்சாரம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை உரிய முறையில் நிறுவுவது தொடர்பில் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள். • காணிகளைத் பிரித்து விற்பனை செய்யும் போது பொதுத் தேவைகளுக்குப் பொருத்தமான காணிப் பங்குகளை ஒதுக்குதல். **மேல் மாகாண உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரின் CMWP/ACC 3/9/2 – 2023 ஆம் இலக்க மற்றும் 2024.07.08ஆந் திகதிய கடிதம் மூலம் உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**
f03	**கட்டடத் திட்டங்களுக்கு அனுமதியளிக்கும் போது**	நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் கட்டடத் திட்ட ங்களுக்கு அனுமதியளிப்பதற்காக அறிமுகப்படுத்த

	கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலர் (க.அ) விளக்கமளிப்புகள் குழுவின் அவதானிப்புகள்/ விதந்துரைகள்
	<u>அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் பொதுவான நடைமுறையொன்றை அறிமுகப்படுத்துதல்</u>	பிரேரிக்கப்பட்டுள்ள நிகழ்நிலை முறைமை தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் க.அ குழுவின் முன் தெளிவுபடுத்தினார். **<u>அவதானிப்புக்கள் / விதந்துரைகள்</u>** முன்மொழியப்பட்டுள்ள வேலைத்திட்டம் மிகவும் காலத்திற்குப் பொருத்தமானது என்பதுடன் ஒழுங்கீனங்களைக் குறைத்துக் கொள்ளக்கூடிய ஒரு முறைமையாகும் என்பதால் துரிதமாக அதனைச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குழு அறிவுறுத்தியது. அதற்காக உள்ளூராட்சி அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஒருங்கிணைப்புடன் தேவையான சுற்று நிருபங்களை உள்ளூராட்சி ஆணையாளர்களினால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வெளியிட வேண்டும் என்றும், அதன் பிரதிகளைக் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் அனுப்பிவைக்குமாறும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பி.க.அ. குக் குழு விதந்துரைத்தது. **இது தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திற்கு விழித்த பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளரின் PL/7/4/8/2 – 2024 ஆம் இலக்க மற்றும் 2024.07.05ஆந் திகதிய கடிதத்தின் பிரதி அனுப்பப்பட்டுள்ளது.** இதற்கு மேலதிகமாக, 2024 ஆம் ஆண்டு முதல் உள்ளூராட்சி மன்றங்களின் அனைத்துச் சேவைகளுக்காகவும் நிகழ்நிலை முறைமை (Online System) பின்பற்றப்பட வேண்டும் என அறிவித்து பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ள சுற்று நிருபத்தின் பிரதிகளைக் கணக்காய்வாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்குமாறும் அவ்வமைச்சின் பி.க.அ வுக்குக் குழு விதந்துரைத்தது. **குறித்த சுற்றறிக்கைப் பிரதிகளைக் கணக்காய்வாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பித்த, அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளரின் PL/7/4/8/2–2024 ஆம்**

	கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலர் (க.அ) விளக்கமளிப்புகள் குழுவின் அவதானிப்புகள்/ விதந்துரைகள்
		இலக்க மற்றும் 2024.07.05ஆந் திகதிய கடிதத்தின் பிரதி அனுப்பப்பட்டுள்ளது. அச்சுற்றறிக்கைகளுக்கு அமையச் தொழிற்படாத மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களும் உரிய உள்ளூராட்சி ஆணையாளர்களும் அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், மீண்டும் ஒருமுறை 2024 ஆகஸ்ட் 09ஆந் திகதியன்று குழுவின் முன்னிலையில் அழைக்கப்படுவர் என்றும், 2024 செப்டெம்பர் 18ஆந் திகதியளளவில் இவ்வேலைத்திட்டத்தைச் செயற்படுத்துவது தொடர்பான முன்னேற்றம் குழுவினால் பரிசீலிக்கப்படும் என்றும் குழு வலியுறுத்தியது.
04	**<u>சொத்து மதிப்பீட்டு நடவடிக்கைகள் தாமதமடைதல்</u>** மேல் மாகாணத்தின் சில நகர சபைகள் மற்றும் மாநகர சபை அதிகாரப் பிரதேசங்களில் சொத்து மதிப்பீட்டு நடவடிக்கைகள் பல வருடங்களாக மேற்கொள்ளப்படாமையினால் மதிப்பீட்டு வரிகள் இற்றைப்படுத்தப்படவில்லை என்றும், இதன் காரணமாகக் குறிப்பிடத்தக்க அளவு வரி வருமானம் இழக்கப்பட்டுள்ளதாகவும் குழுவின் முன்னிலையில் வெளிப்படுத்தப்பட்டது.	5 வருடத்திற்கு ஒருமுறை சொத்து மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்ற போதிலும், உரிய உள்ளூராட்சி மன்றத்தின் கோரிக்கையின்றித் தமது திணைக்களத்தினால் மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது என அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தின் முதன்மை மதிப்பீட்டாளர் குறிப்பிட்டார். உரிய உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையும் மதிப்பீட்டு நடவடிக்கைகள் தாமதமடைவதற்குக் காரணியாக அமைந்துள்ளதால் புதிய உத்தியோகத்தர்கள் 196 பேரைக் ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிய வந்தது. 2025 ஆம் ஆண்டு முடிவடையும் போது அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தின் அனைத்து நடவடிக்கைகளும் கணினிமயப்படுத்தப்பட வேண்டும் எனச் சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்டுள்ள உடன்பாட்டிற்கு அமைய தற்போது அதற்கான தரவு முறைமை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இதன்போது தெரிய வந்தது. **<u>அவதானிப்புக்கள் / விதந்துரைகள்</u>** மதிப்பீட்டுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி, உள்ளூராட்சி மன்றங்களின் சொத்துக்களை மதிப்பீடு செய்யும் பணியைக் குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் மேற்கொள்ளக்கூடிய வகையில் முறைமையொன்றைத் தயாரிக்குமாறு மேல் மாகாண சபையின் பிரதம செயலாளருக்குக் குழு விதந்துரைத்தது. மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டு நடவடிக்கைகளைக் கணினிமயப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள தரவு முறைமையின் தற்போதைய நிலைமை மற்றும் அது இதுவரை முழுமையான கொள்ளளவில்

	கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலர் (க.அ) விளக்கமளிப்புகள் குழுவின் அவதானிப்புகள்/ விதந்துரைகள்
		தொழிற்படாமைக்குக் காரணமான பிரச்சினைகள் குறித்த அறிக்கையொன்றை 2024.06.11ஆந் திகதிக்கு முன்னர் குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பி.க.அ க்கு குழு விதந்துரைத்தது. **அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதம மதிப்பீட்டாளரின் CV/01/25 ஆம் இலக்க மற்றும் 2024.06.12ஆந் திகதிய கடிதம் மூலம் உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
05	**<u>கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவுக் கூட்டங்களை நடாத்துதல்</u>**	**<u>அவதானிப்புக்கள் / விதந்துரைகள்</u>** மாவட்டத்தின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளையும் உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு அழைத்து கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துவது வெற்றிகரமான முறைமையல்ல எனச் சுட்டிக்காட்டிய குழு, காலாண்டு அடிப்படையில் நடாத்தப்பட வேண்டிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவுக் கூட்டங்களை உரிய அனைத்து அதிகாரிகளினதும் பங்கேற்புடன் உள்ளூராட்சி மன்றத்தினுள்ளேயே நடாத்த வேண்டும் என விதந்துரைத்தது. **மேல் மாகாண உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரின் CMWP/ACC 3/9/2 – 2023 ஆம் இலக்க மற்றும் 2024.07.08ஆந் திகதிய கடிதம் மூலம் மேற்கூறிய அறிவூறுத்தல்கள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**
06	**<u>உள்ளூராட்சி மன்றங்களின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள்</u>**	உள்ளூராட்சி மன்றங்களில் விடயப் பரப்பிற்குப் பொறுப்பாகக் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவரை உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நியமிப்பதன் மூலம் சுயாதீனமான கணக்காய்வொன்றை எதிர்பார்க்க முடியாது எனக் குழு சுட்டிக்காட்டிய. அதற்காகத் தனியான உள்ளகக் கணக்காய்வு அலகொன்றை நிறுவுவதன் மூலம் நிறுவனங்களில் இடம்பெறும் ஒழுங்கீனங்களைக் குறைத்துக்கொள்ள முடியும் என்பது குழுவின் அபிப்பிராயமாக இருந்தது. இவ்விடயம் தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்குத் தமது அமைச்சினால் எழுத்துமூல கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை தீர்வு வழங்கப்படவில்லை என பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பி.க.அ தெரிவித்தார். மாகாண

	கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலர் (க.அ) விளக்கமளிப்புகள் குழுவின் அவதானிப்புகள்/ விதந்துரைகள்
		மட்டத்தில் ஊழியர் மீளாய்வொன்றை மேற்கொள்ள வேண்டியதன் அவசியமும் இதன்போது வலியுறுத்தப்பட்டது. **<u>அவதானிப்புக்கள் / விதந்துரைகள்</u>** இது குறித்து விரிவாகக் கலந்துரையாடிய பின்னர், உள்ளூராட்சி மன்றங்களின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக உள்ளூராட்சித் திணைக்களத்தினுள் உள்ளகக் கணக்காய்வு அலகொன்றை நிறுவுமாறு செய்யப்பட்டுள்ள கோரிக்கைக்கு, நடைமுறையிலுள்ள சட்ட ஏற்பாடுகள் தொடர்பிலும் கவனஞ் செலுத்திப் பொருத்தமான தீர்வை இனங்கண்டு குழுவிற்கு அறிவிக்குமாறு பி.க.அ. க்கு விதந்துரைத்தது.
07	**<u>கடுவெல மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பில் கணக்காய்வொன்றை மேற்கோள்வது</u>** கடுவெல மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் நடைமுறைப்படுத்தப்படும் சில திட்டங்களில் இடம்பெற்றுள்ள ஒழுங்கீனங்கள் தொடர்பில் குழுவின் அவதானம் செலுத்தப்பட்டது.	**<u>அவதானிப்புக்கள் / விதந்துரைகள்</u>** i. ரூ. 16 மில்லியன் வரையில் செலவிடப்பட்டு நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், நிர்மாணப்பணிகள் பூர்த்தி செய்யப்படாத போரே தகனச்சாலை நிர்மாணத் திட்டத்தில் இடம்பெற்றுள்ள ஒழுங்கீனங்கள் தொடர்பில் கணக்காய்வொன்றை மேற்கொள்ளுமாறும், ii. செலவிடப்பட்ட தொகைக்குச் சார்பாக மக்களுக்குப் பலன் கிடைக்கப் பெறாத ரன்பெலெஸ்ஸ கழிவு மீள்சுழற்சி மையத்தை நிர்மாணித்தமையினூடாக இடம்பெற்றுள்ள நிதி ஒழுங்கீனங்கள் தொடர்பிலும் கணக்காய்வொன்றை மேற்கொள்ளுமாறும், iii. கடந்த 05 வருடங்களில் கடுவெல பிரதேச செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களுள் ஒரே கருத்திட்டத்திற்காகக் கடுவெல உள்ளூராட்சி மன்றத்தினாலும் நிதி ஒதுக்கீடுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து விசாரணை செய்யுமாறும், கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு விதந்துரைத்த குழு, அது பற்றிய அறிக்கையொன்றை 2024 யூலை 10ஆந் திகதியளளவில் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறும் அறிவித்தது. **கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் 2024.07.10ஆந் திகதி நடைபெற்ற குழுவுக் கூட்டத்தில் இது பற்றிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டன.** **i. இந்நிர்மாணப்பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ள போதிலும் இதனால் அரசாங்கத்திற்கு நிதி இழப்பு எதுவும்**

	கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலர் (க.அ) விளக்கமளிப்புகள்** **குழுவின் அவதானிப்புகள்/ விதந்துரைகள்**
		ஏற்படவில்லை என்பது கணக்காய்வின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. **ii. கணக்காய்வாளர்களால் ஆய்வு இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் திருத்த வேலையொன்றிற்காக இக்கருத்திட்டத்தின் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்ததாகவும், கழிவு அகற்றும் பிரச்சினைக்கு இதுவொரு முன்மாதிரியான திட்டம் என்றும், இதன் மூலம் குறிப்பிட்டளவு மின் உற்பத்தி இடம்பெறுவதாகவும் கணக்காய்வு மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**
08	<u>நிலுவை மதிப்பீட்டு வரிகளை அறவிட்டுக்கொள்ளல்</u>	உள்ளூராட்சி மன்றங்களினால் நிலுவை வரிப்பணத்தை அறவிட்டுக் கொள்ளும் நடவடிக்கைகள் மிகவும் மெதுவாக இடம்பெறுவதால் அந்நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தைக் குழு வலியுறுத்தியது. 2023.12.31ஆந் திகதியளவில் மேல் மாகாணத்தினுள் மட்டும் முத்திரைக்கட்டணம் தவிர்ந்த நிலுவை வரிப்பணத் தொகை ரூ. 12மில்லியனை தாண்டுகிறது என்பது கணக்காய்வு மூலம் வெளிப்படுத்தப்பட்டது. வருமானம் திரட்டும் அதிகாரிகளின் பற்றாக்குறை காணப்படுமாயின் அப்பணியை வெளித்தரப்பிற்கு ஒப்படைப்பது (Out Source Method) தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. மேலும், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபையின் தீயணைப்பு அலகுக்காக அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியினரை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பிலும் குழுவில் கலந்துரையாடப்பட்டது.
09	<u>2024.06.06ஆந் திகதிய குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்படாத, கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் பற்றிய அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.</u>	<u>அவதானிப்புக்கள் / விதந்துரைகள்</u> இன்றைய தினம் கலந்துரையாடலுக்காகக் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்ட சுருக்கக் குறிப்பில் அடங்கியுள்ள, எனினும் கூட்டத்தில் கலந்துரையாடப்படாத ஒவ்வொரு கணக்காய்வு வினவலும் தொடர்பில் வெவ்வேறாக விபரங்கள் அடங்கிய அறிக்கையொன்றை 2024 யூலை 10ஆந் திகதியளவில் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு மேல் மாகாண சபையின் பிரதம செயலாளருக்குக் குழு விதந்துரைத்தது. **மேல் மாகாண பிரதம செயலாளரின் CSWP/FIN-AP/01/FI/18 (C) ஆம் இலக்க மற்றும் 2024.07.10ஆந் திகதிய கடிதம் மூலம் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**

	கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலர் (க.அ) விளக்கமளிப்புகள்** **குழுவின் அவதானிப்புகள்/ விதந்துரைகள்**
	தேசிய புலமைச் சொத்து அலுவலகம் **(2020, 2021 மற்றும் 2022 நிதியாண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கைகளும் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் தற்போதைய செயலாற்றுகையும்)** **விசாரணை செய்யப்பட்ட திகதி - 2024 யூன் 06**	
	அழைக்கப்பட்ட நிறுவனங்கள்: ❖ வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு ❖ இலங்கைத் தேசியப் புலமைச்சொத்து அலுவலகம்	
01	**<u>இலங்கைத் தேசியப் புலமைச்சொத்து அலுவலகத்தின் பணியாளர் வெற்றிடங்கள்</u>** இலங்கைத் தேசியப் புலமைச்சொத்து அலுவலகத்தில் தற்போது 32 வெற்றிடங்கள் காணப்படுவதை அவதானித்த குழு, இது குறித்து விசாரித்தது.	இலங்கைத் தேசியப் புலமைச்சொத்து அலுவலகத்தின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை 110 ஆகும் எனவும், அலுவலகத்தின் பணிகளை மேற்கொள்வதற்கு தொழில்சார் திறன் கொண்ட அலுவலர்கள் தேவைப்படுகின்றார்கள் எனவும், புலமைச்சொத்து அலுவலர்களின் கடமைகள் தற்போது அரசாங்கத்தால் ஏற்கனவே பணியமர்த்தப்பட்டுள்ள பட்டதாரி அபிவிருத்தி அலுவலர்களைக் கொண்டு மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், தற்போது புலமைச்சொத்து அலுவலர் பதவிகள் மற்றும் காப்புரிமை பரிசோதகர் (Patent Examiner) பதவிகள் என்பனவற்றிற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், ஏற்கனவே பணியமர்த்தப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கி அவர்களை புலமைச்சொத்து அலுவலர் மற்றும் காப்புரிமை பரிசோதகர் பதவிகளில் உள்வாங்குவதற்கு அரச சேவை ஆணைக்குழு அனுமதி வழங்கவில்லை எனவும், மாறாக அந்த அலுவலர்களை திறந்த போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்வதற்கு அரச சேவை ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளதாகவும், அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக திறந்த போட்டிப் பரீட்சையொன்றை நடத்துமாறு பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டு, தற்போது அதன் பணிகள் இறுதி கட்டத்தில் உள்ளதாகவும் பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். இது தொடர்பான பரீட்சை 2024 ஆகஸ்ட் மாதத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டபோது உறுதிப்படுத்தினார். **புலமைச்சொத்து அலுவலர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கான வெற்றிடங்கள் ஏற்கனவே வர்த்தமானியில்**

		பிரசுரிக்கப்பட்டுள்ளதாகவும், காப்புரிமை பரிசோதகர் பதவிகளுக்கு திறந்த போட்டிப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்படும் எனவும் வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் MT/ADM/03/COPA ஆம் இலக்க 2024.07.31 ஆந் திகதிய கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
02	<u>**காப்பகம், விற்பனை ஊக்குவிப்பு மையம் மற்றும் பயிற்சி மையம் தாபிப்பதற்கான கருத்திட்டம்**</u> தேசிய புலமைச்சொத்து அலுவலகத்திற்காக காப்பகம், விற்பனை ஊக்குவிப்பு மையம் மற்றும் பயிற்சி மையம் ஒன்றை அமைப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 22,978,101/- தொகையை பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சிடமிருந்து இதுவரை மீளப் பெற்றுக்கொள்ளாமை குறித்து குழு விசாரித்தது.	இத்திட்டத்தை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த லங்கா சதோச (Sathosa) நிறுவனத்திற்குச் சொந்தமான வளாகம், பின்னர் ஒரு கலப்பு அபிவிருத்தி (Mixed Development) திட்டத்திற்காக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதால், தேசிய புலமைச்சொத்து அலுவலகத்திற்கான காப்பகம், விற்பனை ஊக்குவிப்பு மையம் மற்றும் பயிற்சி மையம் அமைக்கும் திட்டத்தை நிறுத்துவதற்கு அமைச்சரவை தீர்மானித்ததாக தெரிவிக்கப்பட்டது. மேலும், அத்தொகையை மீளப் பெறுவதற்காக பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சிடம் தேவையான கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும், இதுவரை அந்த நிதி கிடைக்கப்பெறவில்லை என இலங்கைத் தேசியப் புலமைச்சொத்து அலுவலகத்தின் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.
03	<u>**இலங்கைத் தேசியப் புலமைச்சொத்து அலுவலகத்தின் கோப்புகளை டிஜிட்டல் மயமாக்கும் கருத்திட்டம் (Digitization Project)**</u> 2015 முதல் 2023 வரை வியாபாரச் சின்னங்களுக்காக (Trademarks) 88,797 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன எனவும், அவற்றில் 54,520 விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனவும், இலங்கைத் தேசியப் புலமைச்சொத்து அலுவலகத்தின் தரவு முறைமைக்கு மேலதிகமாக இயற்பியல் கோப்புகளைப் பயன்படுத்தியே கடமைகள் செய்யப்படுகின்றன என்பதும் குழுவின் முன்னிலையில் வெளிப்பட்டது.	உலக புலமைச்சொத்து அமைப்பின்(World Intellectual Property Organization – WIPO) உதவியுடன் கோப்புகளை ஸ்கேன் செய்யும் திட்டமொன்று செயற்படுத்தப்படவுள்ளதாகவும், ஆனால் கோப்புகளை வைப்பதற்கான இடவசதி போதுமானதாக இல்லாததால் அந்த ஸ்கேன் திட்டத்தை ஆரம்பிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கைத் தேசியப் புலமைச்சொத்து அலுவலகத்தின் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். இத்திட்டத்திற்காக தற்காலிகமாக கோப்புகளை பகுதிகளாக வைப்பதற்குத் தேவையான இடவசதியை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். எனினும், கோப்புகள் அலுவலக கடமைகளுக்கு தொடர்ந்து பயன்படுத்தப்படுவதால், அவ்வாறு பகுதிகளாக கோப்புகளை வேறு இடத்திற்கு கொண்டு செல்வது சாத்தியமற்றது என இலங்கைத் தேசியப் புலமைச்சொத்து அலுவலகத்தின் கணக்கீட்டு அலுவலர் விளக்கமளித்தார். <u>அவதானிப்புகள் / பரிந்துரைகள்:</u> தற்போது தேசிய புலமைச்சொத்து அலுவலகத்தில் உள்ள கோப்புகளின் எண்ணிக்கை மற்றும் ஸ்கேன் திட்டத்தை நிறைவு செய்வது தொடர்பான திகதிகளுடன் கூடிய செயற்பாட்டுத் திட்டம் (Action Plan) பற்றிய எழுத்துப்பூர்வ அறிக்கையை

		2024.06.20 ஆந் திகதிக்கு முன்னர் குழுவிற்கு வழங்குமாறும், சம்பந்தப்பட்ட கோப்புகளை ஸ்கேன் செய்வதற்குத் தேவையான ஆதரவை தேசிய புலமைச்சொத்து அலுவலகத்திற்கு வழங்குமாறு வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு குழு பரிந்துரை செய்தது. டிஜிட்டல் மயமாக்கல் கருத்திட்டம் (Digitization Project) நிறைவடைந்து 1 வருடத்திற்குள் இணையவழி (Online) முறை மூலம் விண்ணப்பங்களை ஏற்கும் வசதிகளை ஏற்படுத்த முடியும் என பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். **இலங்கைத் தேசியப் புலமைச்சொத்து அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 2/4/8 VOL III மற்றும் 2024.06.20 ஆந் திகதிய கடிதம் மூலம் உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
04	**<u>இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையிடமிருந்து (ICTA) சர்வரைக் (Server) கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம்</u>** தேசிய புலமைச்சொத்து அலுவலகத்திற்காக இலங்கை தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனத்திடமிருந்து (ICTA) ஒப்பந்தத்தின்படி 32.5 மில்லியன் ரூபா செலுத்தப்பட்ட போதிலும், அந்தச் சர்வர் வழங்கப்படவில்லை எனவும், பணம் மீளப் பெறப்படவில்லை எனவும் குழு விசாரித்தது.	இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஆலோசனை கோரியபோது, சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் கலந்துரையாடுமாறு சட்டமா அதிபர் அறிவித்துள்ளதாகவும், சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் செயலாளர்களுக்கு இடையில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்ட போதிலும் இதுவரை சர்வரோ அல்லது பணமோ கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. தற்போது ஐசிடிஏ (ICTA) நிறுவனத்திடமிருந்து சர்வரைப் கொள்வனவு செய்வதற்கான கொள்முதல் செயன்முறை (Procurement Process) ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், வேறொரு நிறுவனத்திடமிருந்து சர்வரைப் கொள்வனவு செய்வதற்கான புதிய கொள்முதல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில் சிக்கலான நிலை ஏற்பட்டுள்ளதாகவும், எவ்வாறாயினும் தரவுகளைப் பாதுகாப்பதற்காக (Data Repository) புதிய சர்வரைக் கொள்வனவு செய்வது அவசியம் எனவும் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். மேலும், சர்வரைக் கொள்வனவு செய்வதற்கான புதிய கொள்முதல் செயல்முறையை ஆரம்பிப்பதற்கு உள்ள தடைகள் குறித்த விபரங்களை கண்டறிய உள்ளதாக வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.
05	**<u>இலங்கைத் தேசியப் புலமைச்சொத்து அலுவலகத்தின் இடவசதி குறித்த கணக்காய்வு (Space Audit)</u>**	**<u>அவதானிப்புகள் / பரிந்துரைகள்:</u>** குழுவொன்றை நியமித்து அதன் மூலம் புலமைச்சொத்து அலுவலகத்தின் இடவசதி கணக்காய்வை மேற்கொண்டு, அது தொடர்பான அறிக்கையை 2024.07.10 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்கு வழங்குமாறு வர்த்தக, வாணிப மற்றும் உணவுப்

		பாதுகாப்பு அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு குழு பரிந்துரைத்தது. **வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் MT/ADM/03/COPA ஆம் இலக்க மற்றும் 2024.07.15 ஆந் திகதிய கடிதம் மூலம் உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
06	**<u>இலங்கைத் தேசிய புலமைச்சொத்து அலுவலகத்தில் உள்ள கோப்புகளை தேசிய ஆவணக்காப்பக திணைக்களத்திற்கு அனுப்புதல்.</u>**	**<u>அவதானிப்புகள் / பரிந்துரைகள்:</u>** இலங்கைத் தேசிய புலமைச்சொத்து அலுவலகத்தில் பெருமளவிலான கோப்புகள் உள்ள போதிலும் இடவசதி குறைவாக உள்ளதால், பழைய கோப்புகளை தேசிய ஆவணக்காப்பக திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இலங்கைத் தேசியப் புலமைச்சொத்து அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு பரிந்துரைக்கப்பட்டதுடன், அதற்காகத் தேவையான தலையீடுகளை மேற்கொள்ளுமாறு வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு குழு பரிந்துரை செய்தது.
07	**<u>பதிவு செய்வதில் தாமதமடைந்துள்ள வியாபாரச் சின்னங்கள், காப்புரிமங்கள் மற்றும் தொழில்துறை வடிவமைப்புக்கள்</u>** 2023.12.31 ஆம் திகதி வரை பதிவு செய்யப்படாமல் இருந்த 3762 வியாபாரச் சின்ன விண்ணப்பங்களில் 892 விண்ணப்பங்கள் 1995 முதல் 2013 வரையிலான காலப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட்டவை எனவும், அவற்றில் 27 விண்ணப்பங்கள் தொடர்பாக நடத்தப்பட்ட மாதிரி பரிசோதனையில் 2 ஆண்டுகள் முதல் 28 ஆண்டுகள் வரை தாமதமாகியுள்ளமை குழுவில் வெளிப்பட்டதுடன், இவ்வளவு காலம் தாமதமானதற்கான காரணத்தை குழு விசாரித்தது..	உலகில் பெரும்பாலான நாடுகள் வியாபாரச் சின்னத்தை பதிவு செய்வதற்கு குறைந்தபட்சம் 1 வருட காலத்தையே எடுத்துக்கொள்கின்றன என இலங்கைத் தேசியப் புலமைச்சொத்து அலுவலகத்தின் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். மேலும் இந்த தாமதங்களுக்கு பிரதானமாக நிறுவனத்தில் உள்ள உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையே காரணம் எனவும், அதற்கு மேலதிகமாக விண்ணப்பதாரர்களால் ஏற்படும் தாமதங்கள், வியாபாரச் சின்னப் பதிவின் போது மூன்றாம் தரப்பினரால் தாக்கல் செய்யப்படும் எதிர்ப்புகள், ஒருதலைப்பட்ச விசாரணைகள், சர்வதேச விண்ணப்பங்கள் தொடர்பாக சர்வதேச உடன்படிக்கைகளின் நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டியேற்படுதல் போன்ற காரணங்கள் செல்வாக்கு செலுத்துகின்றன என இலங்கைத் தேசியப் புலமைச்சொத்து அலுவலகத்தின் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.
08	**<u>வியாபாரச் சின்னப் பதிவில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதற்காக வேலை நேரத்தை</u>**	தேங்கியுள்ள வேலைகளை (Backlog) பொது நிர்வாக அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட வேலை நேரத்தை கணக்கிடாமல், ஒரு தொழிலாளி தயாரிக்கும் பொருட்களின்

	<u>**கணக்கிடாமல், ஒரு தொழிலாளி தயாரிக்கும் பொருட்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கூலி வழங்கும் முறையில் (Piece Rate) கொடுப்பனவுகளைச் செய்தல்**</u> பதிவு செய்ய தாமதமடைந்துள்ள வியாபாரச் சின்ன விண்ணப்பங்கள் மற்றும் பதிவுகளை விரைவுபடுத்துவதற்காக எடுக்கக்கூடிய தீர்வுகள் குறித்து குழு விசாரித்தது.	எண்ணிக்கைக்கு ஏற்ப கூலி வழங்கும் முறையின் கீழ் (Piece Rate) செயல்படுத்துவதற்கு தேசிய புலமைச்சொத்து அலுவலகம் எதிர்பார்த்த போதிலும், அதற்காக தினசரி செலுத்தப்படும் தொகை போதுமானதாக இல்லாததால் சில பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளதாகவும், எனவே வேலை நேரத்தை கணக்கிடாமல், ஒரு தொழிலாளி தயாரிக்கும் பொருட்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கூலி வழங்கும் முறையில் அதிக தொகையை செலுத்துவதற்கு பொது நிர்வாக அமைச்சின் அனுமதியைப் பெற்றுக்கொள்வது பொருத்தமானது என வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். எனினும், தேங்கியுள்ள வேலைகளின் அளவு மிக அதிகமாக இருப்பதால், அவற்றை முடிவுக்குக் கொண்டுவரக்கூடிய ஒரு குறிப்பிட்ட திகதியைக் கூற முடியாது எனவும், எதிர்காலத்தில் இத்தகைய தாமதங்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மாத்திரம் ஏற்பது பொருத்தமானது எனவும் அவர் மேலும் விளக்கினார். இங்கு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் நிதி வழங்கப்படாமை போன்ற காரணங்களும் இதற்கு செல்வாக்கு செலுத்துவதாக இலங்கைத் தேசியப் புலமைச்சொத்து அலுவலகத்தின் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். <u>**அவதானிப்புகள் / பரிந்துரைகள்:**</u> வியாபாரச் சின்னப் பதிவு தாமதத்தைத் தவிர்ப்பதற்காக வேலை நேரத்தை கணக்கிடாமல், ஒரு தொழிலாளி தயாரிக்கும் பொருட்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கூலி வழங்கும் முறையில் கொடுப்பனவுகளைச் செய்யும்போது, வேலைகளை முடிப்பதற்காக அந்தந்த அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட கோப்புகளின் எண்ணிக்கை, அலுவலர்யின் பெயர், பதவியின் பெயர் மற்றும் அந்தந்த அலுவலர்களுக்கு செலுத்தப்பட்ட தொகை பற்றிய விபரங்கள் அடங்கிய அறிக்கையை 2024.06.20 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ குழுவிற்கு சமர்ப்பிக்குமாறும், பதிவு செய்ய தாமதமடைந்துள்ள வியாபாரச் சின்னங்கள், காப்புரிமங்கள் மற்றும் தொழில்துறை வடிவமைப்புக்களை பதிவு செய்யும்போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளில் தாமதமடைந்துள்ள காலப்பகுதிகள் தொடர்பான காலப் பகுப்பாய்வு (Age Analysis) அறிக்கை ஒன்றை இலங்கைத் தேசியப் புலமைச்சொத்து அலுவலகத்தின் தரவு முறைமையின்படி 2024.07.04 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் குழுவிற்கு வழங்குமாறு இலங்கைத் தேசியப் புலமைச்சொத்து அலுவலகத்தின் கணக்கீட்டு அலுவலருக்கு குழு பரிந்துரை செய்தது. **தேசியப் புலமைச்சொத்து அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2/4/8 VOL III மற்றும் 2024.06.20 திகதியிட்ட கடிதம் மூலம் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**

09	<u>புவியியல் குறிகாட்டிகள் பதிவு (Registration of Geographical Indications)</u>	ஆரம்பத்தில் புவியியல் குறிகாட்டிகள் வியாபாரச் சின்னங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டதாகவும், புதிய முறையின்கீழ் பதிவு செய்வதற்காக தேசிய புலமைச்சொத்துச் சட்டம் 2022 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டதாகவும் இலங்கைத் தேசியப் புலமைச்சொத்து அலுவலகத்தின் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். எவ்வாறாயினும், இதுவரை உரிய ஒழுங்குவிதிகள் (Regulations) வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை என்பது குழுவின் முன்னிலையில் வெளிப்பட்டதுடன், அடுத்த அமைச்சரவை ஆலோசனைக் குழுவிடம் சமர்ப்பித்து அதை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.
10	<u>இலங்கைத் தேசியப் புலமைச்சொத்து அலுவலகத்தின் மட்ரிட் கருத்திட்டம் (Madrid Project)</u>	2016 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டம் மூலம் வர்த்தக மற்றும் சேவை முத்திரைகளை சர்வதேச ரீதியாக பதிவு செய்வதற்காக இலங்கைத் தேசியப் புலமைச்சொத்து அலுவலகத்தின் மட்ரிட் கருத்திட்டத்திற்காக ரூபா 78 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2023 ஆம் ஆண்டு முடிவடையும் போதும் மட்ரிட் உடன்படிக்கை நெறிமுறையில் (Madrid Protocol) இணைவதற்கான பணிகள் நிறைவு செய்யப்பட முடியாமல் இருந்ததால், வியாபாரச் சின்னங்களை சர்வதேச ரீதியாக பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொகைமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களம்

(2020, 2021, 2022 நிதி ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை)

விசாரணை செய்யப்பட்ட திகதி: 2024 யூன் 07

அழைக்கப்பட்ட நிறுவனங்கள்:

- ❖ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு
- ❖ தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

01	<u>குடிசன மற்றும் வீட்டுவசதிகள் தொகைமதிப்பு - 2021 ஆம் ஆண்டு</u>	குடிசன மற்றும் வீட்டுவசதிகள் தொகைமதிப்பை 2021 ஆம் ஆண்டில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2020 இல் ஏற்பட்ட கோவிட் பெருந்தொற்று மற்றும் 2022 இல் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார சூழ்நிலைகள் காரணமாக தொகைமதிப்பிற்குத் தேவையான டேப்லெட் (Tablet) கணினிகளை கொள்வனவு செய்யும் செயன்முறைக்கு தடைகள் ஏற்பட்டதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலர் (க.அ) தெரிவித்தார்.

		குடிசன மற்றும் வீட்டுவசதிகள் தொகைமதிப்பு 04 கட்டங்களின் கீழ் நடத்தப்படுவதாகவும், முதற்கட்டத்தின் கீழ் முழு நாடும் "தொகைமதிப்புத் தொகுதிகளாக" பிரிக்கப்பட்டு வரைபடமாக்கப்படுவதாகவும், அதன் முதற்கட்டத்தின் கீழ் தற்போது முழு நாடும் டிஜிட்டல் தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் GIS தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் டிஜிட்டல் மயமாக்கப்பட்டு (Digitalize) அதற்குள் அடையாளம் காணப்பட்ட தொகைமதிப்புத் தொகுதிகளும் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாக கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். தொகைமதிப்பின் இரண்டாம் கட்டத்தின் கீழ், தற்போது பயன்பாட்டில் உள்ள அனைத்து கட்டிடங்களையும் பட்டியலிடும் பணி 2023 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதாக கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். டேப்லெட் கணினிகளை கொள்வனவு செய்யும் செயன்முறை தாமதமானமை, 2018 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு சுற்றறிக்கையின்படி 2023 இல் கொடுப்பனவுகளைச் செய்யும்போது சில அலுவலர்கள் அதனை நிராகரித்ததால் அக்கொடுப்பனவுகளை அதிகரிக்க வேண்டியேற்பட்டமை, மற்றும் சில அலுவலர்கள் கடமைகளில் இருந்து விலகியதால் வேறு அலுவலர்களை அதற்கு இணைக்க வேண்டியேற்பட்டமை போன்ற காரணங்களால் கட்டிடங்களை பட்டியலிடும் செயன்முறையில் சில தாமதங்கள் ஏற்பட்டுள்ளமை வெளிப்பட்டது. குடிசன மற்றும் வீட்டுவசதிகள் தொகைமதிப்பின் பின்னர் தயாரிக்கப்படும் ஆரம்ப அறிக்கையை வெளியிடக்கூடிய திகதி குறித்து குழு விசாரித்ததுடன், 2024 செப்டம்பர் மாதத்தில் ஆரம்ப அறிக்கையை தயாரித்து முடிக்க எதிர்பார்ப்பதாக கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். <u>பரிந்துரை:</u> குடிசன மற்றும் வீட்டுவசதிகள் தொகைமதிப்பிற்குரிய அந்தந்த கட்டங்களுடன் இறுதி அறிக்கையை தயாரிப்பதற்கு எதிர்பார்க்கும் திகதிகளை உள்ளடக்கிய அறிக்கையொன்றை 2024.06.14 ஆந் திகதிக்கு முன்னர் குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலருக்கும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபவியல் திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலருக்கும் குழு பரிந்துரைத்தது. **நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் MF06/10/C & S/COPA/2024 ஆம் இலக்க 2024.06.24 ஆந் திகதிய கடிதம்**

		மூலம் 2024 ஆம் ஆண்டு குடிசன மற்றும் வீட்டுவசதிகள் தொகைமதிப்பிற்கான காலவரையறை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2024.07.01 ஆம் திகதி முதல் கணக்கெடுப்பு அலுவலர்களுக்கு பயிற்சி அளிப்பதன் மூலம் ஆரம்பிக்கப்படும் இந்த வேலைத்திட்டத்தின் இறுதி அறிக்கை 2025.03.31 ஆந் திகதியளவில் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
02	**குடிசன மற்றும் வீட்டுவசதிகள் தொகைமதிப்பு - 2021 தாமதமானமையுடன், பொருளாதார தொகைமதிப்பு, குடும்ப வருமான மற்றும் செலவின கணக்கெடுப்பு (HIES) மற்றும் புள்ளிவிபர மற்றும் சுகாதார கணக்கெடுப்பு (DHS) நடத்தப்படாமை.**	குடிசன மற்றும் வீட்டுவசதிகள் தொகைமதிப்பு தாமதமானமையுடன் ஏனைய தொகைமதிப்புகள் / கணக்கெடுப்புகளும் தாமதமடைந்துள்ளதாக கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். வாழ்வாதார மற்றும் நுகர்வு முறைகள் இயல்பான மட்டத்தில் இருக்கும் ஒரு வருடத்திலேயே குடும்ப வருமான மற்றும் செலவின கணக்கெடுப்பு (HIES) நடத்தப்பட வேண்டும் என்பதால், தற்போது வீட்டு அமைப்பு பெருமளவில் மாறியுள்ளதாலும், 2011 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட தொகைமதிப்பு கட்டமைப்பின்படி HIES கணக்கெடுப்பை நடத்த வேண்டாம் என ஆலோசகர்களிடமிருந்து அறிவுரை கிடைத்ததாக கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். பெரும்பாலான கணக்கெடுப்புகளுக்கு HIES கணக்கெடுப்பின் தரவுகள் பயன்படுத்தப்படுவதால், தரவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 2023 ஆம் ஆண்டில் அதற்காக ஒரு விரைவுக் கணக்கெடுப்பு (Quick Survey) நடத்தப்பட்டதாக வெளிப்பட்டது.
03	**"இ-கிராம உத்தியோகத்தர்" கருத்திட்டம் (e-GN Project)** தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் மக்கள் தொகை மற்றும் வீட்டுத் தொகைமதிப்பிற்குரிய தரவுகளைச் சேகரிக்கும் படிவங்கள் மூலம் சேகரிக்கப்படும் அனைத்து தரவுகளும், "இ-கிராம உத்தியோகத்தர்" திட்டத்திற்காக (e-GN Project) கிராம உத்தியோகத்தர்களால் பிறிதொரு படிவத்தைப் பயன்படுத்தி சேகரிக்கப்படுவதாகவும், தொகைமதிப்பு மற்றும் வீட்டுத் தொகைமதிப்பிற்கு சேகரிக்கப்படும் தரவுகளுக்கு மேலதிகமாக "இ-கிராம உத்தியோகத்தர்" திட்டத்திற்காக சிறிய அளவிலான மேலதிக தரவுகள் மட்டுமே கிராம	பல அரச நிறுவனங்கள் ஒரே மாதிரியான தரவுகளை அவ்வப்போது சேகரிப்பது பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துவதாக குழு சுட்டிக்காட்டியதுடன், இதனால் அரசாங்கத்தின் செலவு அதிகரிப்பதுடன் மனித உழைப்பும் காலமும் வீணடிக்கப்படுவதாக சுட்டிக்காட்டியது. தரவுகளைச் சேகரிக்கும் போது, ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தேவையான பொதுவான தரவுகளை ஒரே படிவத்தின் மூலம் ஒரு நிறுவனம் சேகரிப்பதும், தேவையான ஏனைய நிறுவனங்களுக்கு அத்தரவுகளை அணுகுவதற்கான (Access) வசதியை வழங்குவதும் மிகவும் பயனுள்ளது என குழு அவதானித்தது. "இலங்கையின் புள்ளிவிபர அபிவிருத்தி பற்றிய உத்தி"யை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அதற்கான செயற்பாட்டுக் குழுவின் தலைமைத்துவத்தை நிதி அமைச்சின் செயலாளர் வகிப்பதாகவும், அப்புள்ளிவிபர முறைமையை (Statistical System) நிறுவுவதற்கு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் மாத்திரமன்றி ஏனைய அரச நிறுவனங்களும் ஒருங்கிணைந்து செயற்படுவதாகவும், அதன் மூலம் தரவுகளை வேறொரு நிறுவனத்திற்கு பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாகவும் கணக்கீட்டு அலுவலர் மேலும் தெரிவித்தார்.

	உத்தியோகத்தர்களால் சேகரிக்கப்படுவதாக வெளிப்பட்டது.	அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான நிர்வாகத் தரவுகளைச் சேகரித்து பாதுகாப்பாக வைப்பதற்குத் தேவையான சட்ட அதிகாரத்தை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்திற்கு வழங்குவதற்காக புதிய சட்ட மூலமொன்றை வரைவு செய்யும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு இறுதி கட்டத்தில் உள்ளதாக கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். **<u>பரிந்துரைகள்:</u>** உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய சட்ட வரைவு, சட்ட வரைஞரிடம் சமர்ப்பிக்கப்படும் திகதி, அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் திகதி மற்றும் அச்சட்ட மூலத்தை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்து நிறைவேற்றுவது தொடர்பான திகதிகளுடன் கூடிய அறிக்கையொன்றை 2024.06.14 ஆந் திகதிக்கு முன்னர் குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலருக்கு குழு பரிந்துரைத்தது. **நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் MF06/10/C & S/COPA/2024 ஆம் இலக்க மற்றும் 2024.06.24 ஆந் திகதிய கடிதம் மூலம் இக்காலவரையறை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன்படி உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய சட்ட வரைவு 2024.06.24 ஆந் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.** அரச நிறுவனங்களினால் ஒரே மாதிரியான தரவுகளைச் சேகரிக்கும் தொகைமதிப்புகள்/கணக்கெடுப்புகளை நடத்துவதைத் தவிர்த்து தேவையற்ற செலவுகளைக் குறைப்பதற்கும், அந்தந்த அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கும் ஒரு வேலைத்திட்டத்தை தயாரிக்குமாறு நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு குழு பரிந்துரைத்தது. அதற்காக தொழில்நுட்ப அமைச்சின் மூலம் செயல்படுத்தப்படும் வேலைத்திட்டமொன்று உள்ளதாகவும், தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள டிஜிட்டல் உத்திகளுக்கு ஏற்ப அனைத்து அரச நிறுவனங்களுக்கும் தேவையான தரவு முறைமைகளுக்கான ஆலோசனை சேவைகளை வழங்குவதற்காக ஒரு நிறுவனத்தை நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பாக தேவையான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருவதாகவும் பிரதம கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். **நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் MF06/10/C & S/COPA/2024 ஆம் இலக்க மற்றும் 2024.07.04 ஆந் திகதிய கடிதத்தின்படி, இ-கிராம உத்தியோகத்தர் திட்டத்தின் மூலம்**

		சேகரிக்கப்படும் தகவல்கள் தற்போது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தேவைகளுக்குப் பயன்படுத்த முடியாததால், 2031 ஆம் ஆண்டில் நடத்தப்படவிருக்கும் அடுத்த தொகைமதிப்பில் இத்தரவுகளைப் பரிமாறிக்கொள்வதற்கும் அதற்காக உரிய நிறுவனங்களுக்கு இடையில் உடன்பாடுகளுடன் செயற்படுவதற்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது. மேலும், இ-கிராம உத்தியோகத்தர் திட்டத்திற்குரிய தரவுகளைச் சேகரிக்கும்போது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுமாறு கோரி பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு கடிதமொன்றை அனுப்புமாறு குழுவின் செயலாளருக்கு குழு பரிந்துரைத்தது. **மேற்குறிப்பிட்ட கடிதம் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் செயலாளரினால் COPA/09/05/2024 ஆம் இலக்க மற்றும் 2024.06.14 திகதிய பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளுராாாட்சி அலுவல்கள் பற்றிய அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.**
04	**<u>தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பக் கருத்திட்டம் 2016 - 2025</u>**	2016 ஆம் ஆண்டில் முதன்முறையாக புள்ளிவிபர மற்றும் சுகாதார கணக்கெடுப்பு (DHS) டேப்லெட் கணினிகளைப் பயன்படுத்தி நடத்தப்பட்டு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாகவும், திணைக்களத்தினால் வெளியிடப்படும் அறிக்கைகள் தொடர்பாக ஊடக அறிக்கைகள் இணையத்தள ஊடாக வெளியிடப்பட்டுள்ளதாகவும், இலங்கை மனிதவள கணக்கெடுப்பு மற்றும் அடுத்த வருடத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள குடும்ப வருமான மற்றும் செலவின கணக்கெடுப்பை டேப்லெட் கணினிகளைப் பயன்படுத்தி நடத்துவதற்கு எதிர்பார்ப்பதாக கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். 2016-2025 காலப்பகுதிக்காக திட்டமிடப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப மற்றும் தொடர்பு நடவடிக்கைகள் உள்ளடங்கலாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையின் முன்னேற்றம் குறித்தும் குழுவில் கலந்துரையாடப்பட்டது. காலத்திற்கு காலம் மனித நுகர்வு முறைகள் மாறுபடுவதால் விலை சுட்டெண்களின் அடிப்படை ஆண்டு (Base Year) அவ்வப்போது மாற்றப்படுவதாகவும், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படை ஆண்டு 2021 ஆகும்

		எனவும் குழு அவதானித்ததுடன், முழு நாட்டையும் உள்ளடக்கி பொருட்களின் விலைகளை சேகரிக்கும் முறைமை குறித்தும் குழுவில் கலந்துரையாடப்பட்டது.
05	**<u>தனிநபர் குடும்ப அலகிற்கான செலவினம் (Per Capita Household Expenditure)</u>**	சராசரி மாதாந்த தனிநபர் குடும்ப அலகிற்கான செலவினம் ரூபா 17,000 அளவாகக் காணப்படும் எனவும், அந்தந்த மாவட்டங்களின் அடிப்படையில் அதில் சில வேறுபாடுகள் காணப்படுவதாகவும் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். மேலும், ஒவ்வொரு மாதமும் 21 ஆந் திகதி வெளியிடப்படும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிற்கு ஏற்ப மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் தனிநபர் செலவினம் பிரசுரிக்கப்படுவதாகவும் அவர் கூறினார். 2024 ஆம் ஆண்டு குடிசன மற்றும் வீட்டுவசதிகள் தொகைமதிப்பு தரவுகள் மற்றும் 2025 ஆம் ஆண்டு குடும்ப வருமான மற்றும் செலவின கணக்கெடுப்பு தரவுகளைப் பயன்படுத்தி குறுகிய கால முடிவுகளை எடுப்பதற்குத் தேவையான சுட்டெண்களைத் தயாரிக்க எதிர்பார்ப்பதாக கணக்கீட்டு அலுவலர் மேலும் தெரிவித்தார். கடந்த காலப்பகுதியில் நிலவிய பொருளாதார நெருக்கடி குடும்பப் பொருளாதாரத்தை எவ்வாறு பாதித்தது என்பது குறித்தும், அந்தப் பிரச்சினைகளுக்கு குடியிருப்பாளர்களால் எடுக்கப்பட்ட உத்திகள் (Strategies) குறித்தும் ஆராய்வதற்காக 2023 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளதாக கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். **<u>பரிந்துரை:</u>** 2022 ஆம் ஆண்டின் குடும்ப அலகு செலவினம் 2023 ஆம் ஆண்டின் குடும்ப அலகு செலவினத்திலிருந்து வேறுபட்ட விதம் குறித்த ஒரு ஒப்பீட்டு அறிக்கையை ஒரு வாரத்திற்குள் குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலருக்கு குழு பரிந்துரைத்தது. **நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் MF06/10/C & S/COPA/2024 ஆம் இலக்க மற்றும் 2024.06.24 ஆந் திகதிய கடிதம் மூலம் இவ்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
06	**<u>உலக வங்கி உதவி மற்றும் அரசாங்க நிதியைச் செலுத்தி திணைக்களத்திற்காக 2015 ஆம் ஆண்டில் 12 மாடிகளைக் கொண்ட கட்டிடத்தை அமைத்து அதன் அலுவலக பணிகளை ஆரம்பித்தல்.</u>**	முதற்கட்டத்தின் கீழ் உலக வங்கி கடன் உதவியின் கீழ் கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக ஆழமான அடித்தளம் அமைக்கும் பணிகள் (Piling) மேற்கொள்ளப்பட்டதாகவும், அதற்காக ரூபா 109 மில்லியன் செலவிடப்பட்டதாகவும், இரண்டாம் கட்டத்தின் கீழ் அரசாங்க நிதியைப் பயன்படுத்தி கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாகவும்,

	கட்டிடம் அமைப்பது தொடர்பான முழுமையான அறிக்கை மற்றும் பொறுப்புறுதிச் சான்றிதழை ஒப்பந்தக்காரரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நிர்வாக நடவடிக்கைகள் எடுக்கப்படாமை, கட்டுமானப் பணிகளை முடிப்பதற்கு இரண்டு வார கால அவகாசம் இருந்தபோது தடுத்து வைக்கப்பட்டிருந்த பணத்திலிருந்து 88% அதாவது ரூபா 35,673,850 தொகையை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தியிருந்தமை, மழை நாட்களில் மேல் மாடிகளில் நீர் கசிவு ஏற்படுதல் மற்றும் உள் அலுவலக வளாகத்திற்குள் நீர் பாய்தல் போன்ற குறைபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.	அதற்காக சுமார் ரூபா 1070 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதாகவும் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். உள்ள குறைபாடுகள் குறித்து ஒப்பந்தக்காரருடன் கலந்துரையாடப்பட்ட போதிலும் அவர்கள் அதற்கு பதிலளிக்கவில்லை எனவும், ஒப்பந்தக்காரருடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் தற்போது முடிவடைந்துள்ளது எனவும் வெளிப்பட்டது. **<u>பரிந்துரைகள்:</u>** பிரதான அலுவலக கட்டிடத்தை தாபிப்பதற்கான மதிப்பீட்டை தயாரித்தது யார் மற்றும் கட்டிடத்திற்கான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது யார் என்பதையும், அரசாங்க நிறுவனமொன்றின் பரிந்துரையின்றி தனிப்பட்ட ஆலோசனை நிறுவனமொன்றின் பரிந்துரையின் பேரில் கொடுப்பனவுகளைச் செய்தமை மற்றும் தடுத்து வைக்கப்பட்டிருந்த பணத்தை விடுவித்தமை எவ்வாறு நிகழ்ந்தது என்பது உள்ளடங்கலாக விரிவான அறிக்கையொன்றை குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலருக்கு குழு பரிந்துரைத்தது. CECB நிறுவனத்தினால் தொழில்நுட்ப கணக்காய்வொன்றை (Technical Audit) நடத்துவதற்காக 2020 ஆம் ஆண்டில் மதிப்பீடொன்று வழங்கப்பட்ட போதிலும் CECB நிறுவனத்தினால் தொழில்நுட்ப கணக்காய்வொன்றை (Technical Audit) நடத்துவதற்காக 2020 ஆம் ஆண்டில் மதிப்பீடொன்று வழங்கப்பட்ட போதிலும், அக்காலப்பகுதியில் நிதி ஒதுக்கீடுகள் இல்லாததால் அதனை செய்ய முடியாமல் போனதாகவும், இவ்வருடத்தில் அதனை செய்ய எதிர்பார்ப்பதாகவும் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். கட்டிடத்தில் நீர் கசிவது மற்றும் அலுவலக வளாகத்திற்குள் நீர் பாய்வதைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய பழுதுபார்ப்புகளுக்காக கட்டிடத் திணைக்களத்திடமிருந்து தற்போது மதிப்பீடொன்று கிடைத்துள்ளதாகவும், அதற்குரிய கொள்முதல் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கணக்கீட்டு அலுவலர் மேலும் தெரிவித்தார். பிரதான கட்டிடம் தொடர்பாக அரசாங்க கட்டிடத் திணைக்களத்திடமிருந்து அல்லது CECB நிறுவனத்திடமிருந்து அதற்குரிய மதிப்பீடொன்றைப் பெற்றுக்கொண்டு, கட்டிடத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்த அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு குழுவினால் பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலருக்கு பரிந்துரைக்கப்பட்டதுடன், உடனடியாக கட்டிடத்தின் தற்போதைய குறைபாடுகளை முழுமையாக நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் பரிந்துரைக்கப்பட்டது.

		நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் MF06/10/C & S/COPA/2024 ஆம் இலக்க மற்றும் 2024.06.24 ஆந் திகதிய கடிதம் மூலம் இத்தகவல்களை உள்ளடக்கிய அறிக்கைகளை விரைவாக சமர்ப்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளைப் பரிந்துரைத்து சான்றிதழ் வழங்கிய தனிப்பட்ட ஆலோசனை நிறுவனம் அக்கட்டிடம் தொடர்பாக சரியான சான்றிதழை வழங்காததால், அந்நிறுவனத்தை கருப்புப் பட்டியலில் (Blacklist) சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு குழு பரிந்துரைத்தது. **தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DCS/ACC/F13/04 ஆம் இலக்க மற்றும் 2024.12.18 ஆந் திகதிய கடிதம் மூலம் மேற்குறிப்பிட்ட விடயங்கள் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
07	<u>**அச்சிடல் பிரிவு மற்றும் பழைய அலுவலக வளாகத்தில் உள்ள குறைபாடுகள்**</u> திணைக்களத்தின் புதிய கட்டிடத்தைத் திட்டமிடும்போது அச்சிடல் பிரிவை அக்கட்டிடத்திற்குள் நிறுவுவதற்குத் திட்டமிடப்படாமை தொடர்பாக கணக்காய்வில் வெளிப்பட்ட விபரங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன. அச்சிடல் பிரிவை திணைக்களம் அமைந்துள்ள புதிய கட்டிட வளாகத்திற்கு கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து குழுவினால் வினவப்பட்டது.	அச்சிடல் பிரிவில் பெரிய அளவிலான இயந்திரங்கள் உள்ளதால், அவற்றை இயக்கும்போது ஏனைய பிரிவுகளுடன் இணைந்து அக்குறிப்பிட்ட பிரிவை நடத்துவதில் சிக்கல்கள் உள்ளதாக கணக்கீட்டு அலுவலர் சுட்டிக்காட்டினார். <u>பரிந்துரைகள்:</u> அச்சிடல் பிரிவு நிறுவப்பட்டுள்ள கட்டிடத்தை பயனுள்ள முறையில் பயன்படுத்துமாறு குழு பரிந்துரைத்தது. அக்கட்டிடத்தைப் பழுதுபார்த்து அப்பிரிவை முறையாக நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.

ஏற்றுமதி விவசாய திணைக்களம்

(2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடங்கும் விடயங்களும் தற்போதைய செயலாற்றுகையும்)

விசாரணை செய்யப்பட்ட திகதி - 2024 ஜூன் 18

<table>
<tr><td colspan="3"></td></tr>
<tr><td colspan="3">அழைக்கப்பட்ட நிறுவனங்கள் -
• கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
• ஏற்றுமதி விவசாய திணைக்களம்</td></tr>
<tr><td>01</td><td><u>2016 மார்ச் 11 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட விதந்துரைகளை நடைமுறைப்படுத்தல்.</u>

<u>ஏற்றுமதி வருமான இலக்குகளை அடைவதற்கான திட்டங்களைத் தயாரித்தல்</u>

2016 ஆம் ஆண்டில் 0.5 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்த ஏற்றுமதி வருமானத்தை 2020 ஆம் ஆண்டளவில் 1 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துக் கொள்வதற்காக திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக முந்தைய குழுக் கூட்டத்தின் போது தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தர் வெளியிட்டிருந்தபோதிலும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த இலக்கை அடைந்துகொள்ளத் தவறியுள்ளதாக கணக்காய்வாளர் தலைமையாதிபதி தெரிவித்தார்.முறையான திட்டம் மற்றும் சரியான மேற்பார்வை இன்மை என்பன இவற்றுக்கான காரணமாக அமையலாம் எனவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டினார்.</td><td>ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அத்திட்டம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைவதற்குப் போதுமானதல்ல என்பதைப் புரிந்துகொண்டு, 2030 ஆம் ஆண்டு வரை புதிய திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தர் (க.அ.) தெரிவித்தார். அத்திட்டத்திற்கமைய ஒவ்வொரு பயிர்செய்கைக்கும் பொருத்தமான நிலங்களை இனங்கண்டு, அதற்கேற்ப பயிர்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். மேலும், பயிர்செய்கை நிலத்தை விரிவுபடுத்துவதற்காக புதிய பயிர்செய்கை நிலங்களை இனங்காணுதல் மற்றும் உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்த்து (Value Add) ஏற்றுமதி செய்வதன் மூலம் ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்துக் கொள்ள எதிர்பார்ப்பதாகவும் தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் குழுவின் முன்னிலையில் தெரிவித்தார்.

<u>விதந்துரை</u>:
விஞ்ஞானரீதியான அடிப்படையில் கமத்தொழில் சேவைகள் பிரிவுவாரியாக பயிர்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது பொருத்தமானதென இனங்காணப்பட்ட பயிர் வகைகளை ஊக்குவிப்பதற்கும், இலக்கிடப்பட்ட ஏற்றுமதி வருமானத்தை அடைந்து கொள்வதற்கான திட்டமொன்றைத் தயாரித்து, 2024 ஜூலை 31 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறும் கமத்தொழில் அமைச்சின் தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு குழு விதந்துரைத்தது.

ஏற்றுமதி விவசாய பணிப்பாளர் நாயகத்தின் 08/01/40/2024 ஆம் இலக்க மற்றும் 2024.07.29 ஆந் திகதிய கடிதம் மூலம் குறித்த திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>02</td><td><u>வல்லபட்டை தாவரங்களை ஏற்றுமதி செய்தல்</u>
வல்லபட்டை தாவரங்களை ஏற்றுமதி செய்வதன் மூலம் பெருமளவு அந்நியச் செலாவணியை ஈட்டிக்கொள்ள முடியும் என்பதால், சட்டரீதியான அடிப்படையில் அத்தாவரப்</td><td><u>அவதானிப்புகள்</u>
ஏற்றுமதி விவசாயத் திணைக்களமானது தற்போது ஏற்றுமதிப் பயிர்களாக இனங்காணப்பட்டுள்ள 14 பயிர் வகைகளுக்கு மேலதிகமாக, வெளிநாட்டுச் சந்தையில் கேள்வி உள்ள புதிய பயிர்கள் மீதும் நாட்டம் செலுத்த வேண்டுமென குழு சுட்டிக்காட்டியது.</td></tr>
</table>

	பயிர்செய்கையை ஊக்குவிப்பதன் மீது கவனம் செலுத்துமாறு முந்தைய குழுக் கூட்டத்தின் போது அறிவுறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வல்லபட்டை தாவரங்களைப் பயிரிடுதல் அல்லது ஏற்றுமதி செய்தல் தொடர்பில் ஏற்றுமதி விவசாய திணைக்களத்தினால் எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என கணக்காய்வாளர் தலைமையாதிபதி குழுவில் சுட்டிக்காட்டினார்.	சம்பந்தப்பட்ட சட்டத்தில் ஏற்றுமதிப் பயிர்கள் என்பன, "தேயிலை, தெங்கு, இறப்பர் மற்றும் மரமுந்திரிகை ஆகியன அல்லாததும், வருடாந்த உற்பத்தியில் குறைந்தது 50 சதவீதமாவது ஏற்றுமதி செய்யப்படுவதுமான வருடாந்தப் பயிர்கள் உள்ளடங்கும்" என பொருள்கோடல் செய்யப்பட்டுள்ளதாகவும், அதனால் வருடாந்தப் பயிர்கள் அல்லாத பயிர்களை ஏற்றுமதிக்காகப் பயிரிடுவதற்கான ஏற்பாடுகள் சட்டத்தில் இல்லை எனவும் தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் சுட்டிக்காட்டினார். **<u>விதந்துரை</u>** வல்லபட்டை உள்ளிட்ட ஏற்றுமதியூடாக வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டக்கூடிய அனைத்துப் பயிர்களையும், ஏற்றுமதி விவசாயப் பயிர்களாக அல்லது பெருந்தோட்டப் பயிர்களாகப் பெயரிடுவதற்கான சட்ட ஏற்பாடுகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு, அது தொடர்பான அறிக்கையை 2024 ஜூலை 31 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு கமத்தொழில் அமைச்சின் த.க.உத்தியோகத்தருக்கு குழு விதந்துரைத்தது. **ஏற்றுமதி விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் 08/01/40/2024 மற்றும் 2024.07.29 ஆந் திகதிய கடிதம் மூலம் குறிப்பிட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** **வல்லபட்டை தாவரத்தைச் சட்டப்பூர்வமாக்கும் நடவடிக்கைகள் வனப்பாதுகாப்பு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்புச் சட்டம் திருத்தப்பட்டதன் பின்னர் ஏற்புடைய பயிர்களைப் பெயரிடும் போது வல்லபட்டை தாவரத்தை உள்ளடக்க முடியும் எனவும் குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.**
03	**<u>அரசாங்கத்திற்கும் தனியார் துறைக்கும் சொந்தமான 29 காணித்துண்டுகளைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்காமை</u>** அரசாங்கத்திற்கும் தனியார் துறைக்கும் சொந்தமான 350 ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவைக் கொண்ட 29 காணித்துண்டுகளைக் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை எனக்	அரசாங்கத்திற்கும் தனியார் துறைக்கும் சொந்தமான 49 காணித்துண்டுகள் காணப்பட்டதாகவும், அவற்றுள் 31 காணித்துண்டுகள் தற்போது கையகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், குறிப்பிட்ட நிறுவனங்கள் இணைந்து எஞ்சியுள்ள காணித்துண்டுகளைக் கையகப்படுத்துவதற்கும் சுவீகரிப்பதற்குமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரிவித்தார். இக்காணிகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகளின் தற்போதைய நிலைமை பற்றிய அறிக்கையைக் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு கமத்தொழில் அமைச்சின் தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு குழு விதந்துரைத்தது.

	கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.	**ஏற்றுமதி விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் 08/01/40/2024ஆம் இலக்க மற்றும் 2024.07.29ஆந் திகதிய கடிதம் மூலம் குறிப்பிட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.** **காணித் துண்டுகளைக் கையகப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகள் பல்வேறு கட்டங்களில் காணப்படுவதுடன், அத்தகைய கையகப்படுத்தல்களின் தற்போதைய நிலைமை குறித்து அதில் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது.**
04	**<u>300 டப் கணினிகளை கொள்வனவு செய்வதற்கும் கணினி மென்பொருள் ஒன்றைத் தயாரிப்பதற்கும் பாரிய செலவினை மேற்கொண்டுள்ளபோதிலும், அதனால் எதிர்பார்க்கப்பட்ட பலன்கள் கிடைக்கப்பெறாமை</u>** இலங்கையின் மிளகு மற்றும் கறுவாவுக்கு புவியியல் குறியீட்டைப் (GI) பெற்றுக் கொள்வதற்காகவும், விவசாயிகள், வழங்குநர்கள் மற்றும் வியாபாரிகளைப் பதிவு செய்வதற்கான கணினி மென்பொருள் ஒன்றைத் தயாரிப்பதற்காகவும், 300 டப் கணினிகளைக் கொள்வனவு செய்வதற்காகவும் ஒரு கோடியே 25 இலட்சத்திற்கும் (12,500,000) அதிகமான செலவு மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், அதிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பலன்கள் கிடைக்கப்பெறாமை மீது குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.	மிளகு மற்றும் கறுவா என்பவற்றுக்கான புவியியல் குறியீட்டைப் (GI) பெற்றுக் கொள்வதற்கு அந்த விவசாயிகளைப் பதிவு செய்வது கட்டாயமானதாகையால், அதற்காக இந்த மென்பொருளை தயாரித்ததாகவும், விவசாயிகளின் தகவல்களை உள்ளிடுவதற்காக டப் கணினிகளைக் கொள்வனவு செய்வதற்கும் கணினி மென்பொருளை அபிவிருத்தி செய்வதற்கும் ரூபா 12.5 மில்லியனுக்கும் அதிகமான செலவினை மேற்கொண்டு அவற்றை கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கியதாகவும் க.அ. குறிப்பிட்டார். பெருமளவு தரவுகளை உள்ளிடும் போது தரவுகள் பதிவேற்றப்படுவதில் தாமதம் காணப்பட்டமையினால், குறிப்பிட்ட மென்பொருள் நிறுவனத்தைக் (Software Developer) கொண்டு பல தடவைகளில் முறைமையை திருத்தியபோதிலும், அதிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பலன் கிடைக்கப்பெறவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். **<u>விதந்துரைகள் / கட்டளைகள்</u>** முறையான திட்டமிடல் இன்றி இவ்வாறான திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டமையினால் பெருமளவு நிதி விரயம் ஏற்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டிய குழுவானது, இந்த மென்பொருளைப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவது தொடர்பில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை 2024 ஜூலை 31 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு கமத்தொழில் அமைச்சின் தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு குழு விதந்துரைத்தது. **ஏற்றுமதி விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் 08/01/40/2024ஆம் இலக்க மற்றும் 2024.07.29ஆந் திகதிய கடிதம் மூலம் குறிப்பிட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
கமநல அபிவிருத்தி திணைக்களம் (2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடங்கும் விடயங்களும் தற்போதைய செயலாற்றுகையும்)		

<table>
<tr><td colspan="3">விசாரணை செய்யப்பட்ட திகதி - 2024 ஜூன் 18</td></tr>
<tr><td colspan="3">அழைக்கப்பட்ட நிறுவனங்கள் -
❖ கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
❖ கமநல அபிவிருத்தி திணைக்களம்</td></tr>
<tr><td>01</td><td><u>கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துதல்</u>
கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிப்பது குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், இத்திணைக்களத்தினால் 2019 ஆம் ஆண்டு முதல் பதிலளிக்கப்படாதுள்ள கணக்காய்வு ஐயவினாக்களின் எண்ணிக்கை 98 எனவும் தெரியவந்ததுள்ளது.</td><td>கணக்காய்வு ஐயவினாக்களுக்குக் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பதிலளிப்பது ஒவ்வொரு நிறுவனத்தினதும் பொறுப்பாகும் என குழு சுட்டிக்காட்டியது.

2019 ஆம் ஆண்டு முதல் தமது திணைக்களத்திற்கு 407 கணக்காய்வு ஐயவினாக்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், அவற்றுள் பெரும்பாலானவற்றுக்குப் பதிலளிக்கப்பட்டுள்ளதாகவும் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தர் (க.உ.) தெரிவித்தார்.

அவதானிப்புகள் / விதந்துரைகள்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை உரிய முறையில் நடத்துவது அமைச்சின் பொறுப்பாகும் என வலியுறுத்திய குழுவானது, 2024 ஜூலை மாதத்திற்குள் 25 மாவட்ட அலுவலகங்களிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இணைத்துக்கொண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்துமாறும், இவ்வருடத்தின் எஞ்சிய 2 காலாண்டுகளுக்குமான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்கும் திகதிகளை நிர்ணயித்துக் கொள்ளுமாறும், நிரல் அமைச்சின் ஒருங்கிணைப்புடன் இச்செயன்முறையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுமாறும் விதந்துரைத்தது.

விவசாய ஆணையாளர் நாயகத்தின் DAD/FIN/PRO/04/COPA-ii ஆம் இலக்க மற்றும் 2024.07.15ஆந் திகதிய கடிதம் மூலம் 2024 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்ட மற்றும் நடாத்தப்படவுள்ள திகதிகள் அடங்கிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>02</td><td><u>ஊழியர் வெற்றிடங்கள்</u>
கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் ஏராளமான ஊழியர் வெற்றிடங்கள் காணப்படுவதாக குழுவில் வெளிப்படுத்தப்பட்டது.</td><td><u>அவதானிப்புகள்</u>
இத்திணைக்களத்தின் கீழ்மட்ட ஊழியர் குழாத்துடன் ஒப்பிடும்போது உயர் பதவிகளில் குறைவு காணப்படுவதாகவும், விஞ்ஞானபூர்வமான பகுப்பாய்வொன்றை மேற்கொண்டு திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பைச் சரியான முறையில் திருத்தியமைக்க வேண்டும் எனவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டினார். மேலும், அபிவிருத்தி உத்தியோகத்தர் போன்ற பதவிகளில் சேவையாற்றும் பிராந்திய உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் மிகக் குறைவாக</td></tr>
</table>

		உள்ளதாகவும் கணக்காய்வினால் மேலும் சுட்டிக்காட்டப்பட்டது. ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் குறித்து கருத்துத் தெரிவித்த முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அதிகாரிகள், இவ்வருடத்தில் மேற்கொள்ளப்படவுள்ள ஊழியர் மீளாய்வொன்றின் பின்னர் தேவையான ஊழியர்கள் குறித்த கோரிக்கைகளை சமர்ப்பிக்குமாறு கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.
03	<u>**வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**</u> கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதில் பாரிய தாமதம் காணப்படுவதாக குழுவில் வெளிப்படுத்தப்பட்டது. 2019 ஆம் ஆண்டு முதல் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லையென கணக்காய்வாளர் தலைமை அதிபதி தெரிவித்தார்.	உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்தல் போன்ற காரணங்களினால் செயலாற்றுகை அறிக்கைகளைச் சமர்ப்பிப்பது தாமதமானதாகத் தெரிவித்த தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர், 2023 ஆம் ஆண்டு வரையிலான அனைத்து செயலாற்றுகை அறிக்கைகளும் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.
04	<u>**கமநல அபிவிருத்தி சபைகளை நிறுவுதல்**</u> 2000 ஆம் ஆண்டின் 46 இலக்க விவசாய அபிவிருத்தி சட்டம் நிறைவேற்றப்பட்டு 24 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், அச்சட்டத்தின்படி நிறுவப்பட வேண்டிய கமநல அபிவிருத்தி சபைகளை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் குழு தனது பலத்த அதிருப்தியைத் தெரிவித்தது.	கமநல அபிவிருத்தி சபைகளுடன் தொடர்புடைய ஒழுங்குவிதிகள் தயாரிக்கப்பட்டிராமையால் சபைகளை இதுவரை நிறுவ முடியாமல் போனதாகத் தெரிவித்த தலைமை கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தர், ஒழுங்குவிதிகளைத் தயாரிக்கும் பணிகளை 2024 ஆம் ஆண்டுக்குள் பூர்த்தி செய்ய முடியுமெனவும் தெரிவித்தார். <u>**விதந்துரைகள்**</u> கமநல அபிவிருத்தி சபைகளை நிறுவுவது தொடர்பான ஒழுங்குவிதிகளைத் தயாரிப்பது குறித்து கௌரவ அமைச்சருடன் கலந்தாலோசித்து, அப்பணிகளைப் பூர்த்தி செய்யக்கூடிய திகதி முதலியவற்றை உள்ளடக்கிய அறிக்கையை 2024 ஜூலை 15ஆந் திகதியளவில் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு கமத்தொழில் அமைச்சின் த.க.உத்தியோகத்தருக்குக் குழு விதந்துரைத்தது. இது தொடர்பில் கமநல அமைப்புகள் மற்றும் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்திகளுக்கான உதவி உத்தியோகத்தர்களின் சங்கங்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்பினருடனும் கலந்தாலோசிக்குமாறு குழு விதந்துரைத்தது.

		2024.06.27 அன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இது தொடர்பான இறுதி வரைபுக்கு கௌரவ அமைச்சரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், விரைவில் சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் எனவும் விவசாய அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் DAD/FIN/PRO/04/COPA-ii இலக்க மற்றும் 2024.07.15ஆந் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.
05	**<u>விவசாய வங்கிகளின் பலவீனமான செயல்பாடு</u>**	**<u>கண்காணிப்பு</u>** 559 விவசாய வங்கிகள் செயல்பாட்டில் இருந்த போதிலும், நெல் விவசாயிகளில் 1% க்கும் குறைவான மிகச்சிறிய தரப்பினருக்கே கடன் வழங்கப்படுவதாக இதன்போது வெளிப்படுத்தப்பட்டது. இந்த வங்கிகளின் நிதி அறிக்கை மாதிரிகள் சரியானவை அல்லவென்றும், கணக்கீட்டு தரநியமங்கள் பின்பற்றப்படுவதில்லை எனவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டினார்.
06	கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் குருநாகல் மாவட்ட அலுவலகத்தின் நிர்மாணப் பணிகளை மேற்கொள்கையில் ஏராளமான நிதி முறைகேடுகள் இடம்பெற்றுள்ளமை.	நிறைவேற்றப்படாத பணிகளுக்காக 35 இலட்சத்திற்கும் அதிகமான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வின்போது வெளிப்படுத்தப்பட்டதாகவும், இது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டினார். இச்சம்பவம் 2018, 2019 காலப்பகுதிக்குள் இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிட்ட த.க.உ../க.உ., தற்போது பொறுப்புக்கூற வேண்டிய அதிகாரிகளுக்கு குற்றப்பத்திரிகைகள் கையளிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கமைய ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.
07	**குளங்களில் திருத்தப் பணிகளை மேற்கொள்கையில் ஏற்படும் சூழல் சேதங்கள்:** சூழலுக்கு சேதம் ஏற்படும் வகையில் வடமேல் மாகாணத்தில் குளங்களின் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குழுவில் வெளிப்படுத்தப்பட்டது.	**<u>கண்காணிப்புகள் / விதந்துரைகள்:</u>** குருநாகல் மாவட்டத்தில் 5000இற்கும் மேற்பட்ட சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் அமைந்துள்ளன எனவும், அக்குளங்களை அகழ்கையில் பொறுப்புள்ள எவரதும் மேற்பார்வை இல்லாத காரணத்தினால் அது மணல் அகழும் தொழிலாக மாறியுள்ளது எனவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி தெரிவித்தார். வடமேல் மாகாண சுற்றாடல் அதிகாரசபையினால் மணல் அகழ்வதற்காக சுமார் 237 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடப்பட்டது. அத்துடன், கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் மற்றும் மாகாண நீர்ப்பாசன திணைக்களம் ஆகிய இரு தரப்பினராலும் குளங்களின் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் இங்கு வெளிப்படுத்தப்பட்டது.

		இக்குளங்களின் திருத்தப் பணிகளின் போது சூழலுக்கு ஏற்படும் சேதங்களைக் குறைத்துக் கொள்வதற்கான வழிமுறையொன்றைத் தயாரிப்பதற்கும், குளங்களின் உரிமை தொடர்பில் நிலவும் குழப்பமான நிலையைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கும், மாகாண சபைகள் அமைச்சு, கமத்தொழில் அமைச்சு, வடமேல் மாகாண நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் வடமேல் மாகாண சுற்றாடல் அதிகாரசபை ஆகிய நிறுவனங்களை கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் அடுத்த கூட்டத்திற்காக அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் முன்பு அழைக்குமாறு குழு விதந்துரைத்தது.
08	<u>**முறையற்ற விதத்தில் வயல் நிலங்களை நிரப்புதல்**</u>	<u>**கண்காணிப்புகள்**</u> வயல் நிலங்கள் நிரப்பப்பட்ட பின்னர், அவற்றை வயல் நிலப் பதிவேட்டில் இருந்து நீக்கி, மேட்டு நிலங்களாகச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளமை குழுவில் வெளியானது. வயல் நிலங்கள் குறித்த முழுமையான கணக்கெடுப்பொன்றை மேற்கொண்டு, பயிரிடக்கூடிய வயல் நிலங்கள் மற்றும் பயிரிட முடியாத வயல் நிலங்களை வேறுபடுத்தி அடையாளம் கண்டு, பயிரிட முடியாத வயல் நிலங்களை வேறு பயனுள்ள தேவைகளுக்காகப் பயன்படுத்த அனுமதி வழங்குவது பொருத்தமானது என குழு குறிப்பிட்டது. குழு சுட்டிக்காட்டியது போன்ற நடவடிக்கைகள் குறித்து கடந்த காலத்தில் தங்களது திணைக்களத்திற்குப் புகார்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிவித்த த.க.உ./க.உ. அத்தகைய செயல்களைத் தடுப்பதற்காக தற்போது ஒரு வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். நாடு முழுவதும் உள்ள அனைத்து வயல் நிலங்களையும் டிஜிட்டல் முறையில் அளவீடு செய்து கணினிமயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது சுமார் 95% வயல் நிலங்களின் அளவீட்டுப் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். <u>**விதந்துரைகள்**</u> குருநாகல், கெட்டுவான, இரத்தினபுரி நாமல்தெனிய மற்றும் கம்பஹா மாவட்டத்தின் மஹர பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் முறையற்ற விதத்தில் வயல் நிலங்கள் நிரப்பப்படுவதைச் சுட்டிக்காட்டிய குழுவானது, i. குறித்த நிரப்புதல்களை விதந்துரைத்த அதிகாரிகள், அனுமதி வழங்கப்பட்ட திகதிகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலைமை ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான அறிக்கையை 2024 ஜூலை 15 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்கு சமர்ப்பிக்குமாறும்,

		ii. 25 மாவட்டங்களிலும் கடந்த ஆண்டில் வயல் நிலங்களை நிரப்புவதற்கு அனுமதி வழங்கியுள்ள நிலங்களின் பெயர்ப் பட்டியலைக் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறும் விதந்துரைத்தது. **விவசாய ஆணையாளர் நாயகத்தின் DAD/FIN/PRO/04/COPA-iiஆம் இலக்க மற்றும் 2024.07.15ஆந் திகதிய கடி மூலம், இந்த வயல் நிலங்களை நிரப்புவதை விதந்துரைத்த உத்தியோகத்தர்களின் பெயர்கள், அனுமதி வழங்கப்பட்ட திகதிகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலைமை குறித்த தகவல்களை உள்ளடக்கிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
09	<u>**நெல் கொள்வனவு தொடர்பான சிக்கல்கள்**</u> 2021 சிறு போகத்தில் புத்தளம் மற்றும் பொலன்னறுவை மாவட்ட விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்வதற்காக திறைசேரியினால் வழங்கப்பட்ட நிதி, அதற்கான நோக்கத்துக்குப் பயன்படுத்தப்படவில்லை என்று கணக்காய்வு மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக, பொலன்னறுவை மாவட்டத்தில் நெல் கொள்வனவுக்காக வழங்கப்பட்ட 214 மில்லியன் ரூபா ஆன நிதி உரிய பணிக்குப் பயன்படுத்தப்படவில்லை என்றும், அந்நிதி திறைசேரிக்கு மீண்டும் திருப்பிச் செலுத்தப்படவில்லை என்றும் கணக்காய்வின் போது தெரியவந்துள்ளதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.	இந்த விடயம் தனது அமைச்சின் விடயப்பரப்பிற்கு உட்பட்டதல்ல என்று குறிப்பிட்ட விவசாய அமைச்சின் பிரதம கணக்கீட்டு அலுவலர், இது தொடர்பாக திறைசேரி செயலாளரிடம் வினவுவது பொருத்தமானது என்று தெரிவித்தார். மேற்படி நெல் கொள்வனவானது கூட்டுறவு சங்கங்கள் அல்லது மாவட்ட செயலகங்கள் ஊடாக இடம்பெற்றிருக்கலாம் என்று குறிப்பிட்ட குழு, இது தொடர்பாக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து அறிக்கை ஒன்றைக் கோருமாறு அறிவுரை வழங்கியது.
10	<u>**400 விவசாயக் கிணறுகளை நிர்மாணிக்கும் கருத்திட்டம்**</u> 2019 ஆம் ஆண்டில் 400 விவசாயக் கிணறுகளை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ள போதிலும், அந்தக் கடனைப் பெற்றுள்ள விவசாயிகள் சிலர் விவசாயக் கிணறுகளை நிர்மாணிக்கவில்லை	இப்பணிக்காக வழங்கப்பட்ட ரூபா 2 இலட்சம் ஆன கடன் தொகையில் 75% ஆன முற்பணத் தொகை (ரூபா 150,000/-) கிணறு நிர்மாணிக்க முன்னர் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதாகவும், எஞ்சிய 25% கிணறு நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்டதாகவும் பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். சில விவசாயிகள் முற்பணத்தைப் பெற்றுக்கொண்டுள்ள போதிலும் கிணறுகளை நிர்மாணிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

	என்றும், பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை என்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டினார்.	<u>பரிந்துரை</u> மேற்படி கருத்திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்பட்ட விவசாயிகளின் பெயர்ப் பட்டியல், செலுத்தப்படாத தொகைகள் மற்றும் குறித்த விவசாயக் கிணறுகளை நிர்மாணிப்பதன் முன்னேற்றம் குறித்து விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி அலுவலரின் சிபாரிசுடனான அறிக்கையை 2024 யூலை 15 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்கு வழங்குமாறு சிபாரிசு செய்யப்பட்டது. **கமநல சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் DAD/FIN/PRO/04/COPA-ii ஆம் இலக்க 2024.07.15 ஆம் திகதிய கடிதம் மூலம், உதவி வழங்கப்பட்ட விவசாயிகளின் பெயர்ப் பட்டியல், செலுத்தப்படாதுள்ள தொகைகள் மற்றும் விவசாயக் கிணறுகளை நிர்மாணிப்பதன் முன்னேற்றம் ஆகியவற்றை உள்ளடக்கிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**
தொழில் திணைக்களம் **(2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை)** **விசாரணை மேற்கொள்ளப்பட்ட திகதி - 2024 யூன் 19**		
அழைக்கப்பட்ட நிறுவனங்கள் - ❖ **தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு** ❖ **தொழில் திணைக்களம்**		
01	<u>**ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பில் நிலவும் சிக்கல்கள்**</u>	<u>அவதானிப்பு</u> 2016.04.07 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் கூட்டத்தில் வழங்கப்பட்டிருந்த சிபாரிசுக்கமைய, ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதை குழு அவதானிப்புச் செய்தது. உயர் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்ட ஒரு வழக்கிற்கமைய, ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 38(2) ஆம் பிரிவின் கீழ் சான்றுப்பத்திர நடவடிக்கை முறையில் (Certificate Method) வழக்குத் தொடர முடியாது என்ற கருத்து நிலவியதன் காரணமாக ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தைத் திருத்தம் செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்ட போதிலும், பிற்காலத்தில் உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குத் தீர்ப்புகளின் மூலம் சான்றுப்பத்திர நடவடிக்கைமுறையில் ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரும் சாத்தியம் தொழில் ஆணையாளருக்குக் காணப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதற்கமைய மேற்படி

		சிக்கல் தீர்க்கப்பட்டுள்ளதால் ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கான தேவைப்பாடு எழவில்லை என்றும் பிரதம கணக்கீட்டு அலுவலர் /கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். அது தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதம கணக்கீட்டு அலுவலர் .கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார் / அது பற்றி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டுள்ளதாகவும் பிரதம கணக்கீட்டு அலுவலர் .கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார் / சேமலாப நிதி அறவிடப்படாத நிறுவனங்களைக் குறிப்பாக அடையாளம் காணும் முறையியல் பற்றி குழு வினவியதுடன், தொழில் வழங்குனர்கள் தொழில் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் "சீ" ("C") அறிக்கைகள் மூலம் இலங்கை மத்திய வங்கிக்குச் சேமலாப நிதியை அனுப்ப வேண்டும் என்றும், இலங்கை மத்திய வங்கியினால் ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் ஒருமுறை தொழில் திணைக்களத்திற்கு வழங்கப்படும் இற்றைப்படுத்தப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டும், தொழில் அலுவலர்களின் வெளிக்களப் பரிசோதனைகள் மூலமும் சேமலாப நிதியைச் செலுத்தாத நிறுவனங்கள் இனங் காணப்படுவதாகவும், மேற்படி நிறுவனங்கள் பற்றிய விபரங்களைத் தொழில் திணைக்களத்தின் கண்காணிப்புத் தரவு முறைமை (Monitoring Data System) ஊடாகப் பரிசோதிக்க முடியும் என்றும் பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். ஐம்பதுக்கு மேற்பட்ட ஊழியர்களைக் கொண்டுள்ள நிறுவனங்கள் ஏற்கனவே நிகழ்நிலை (Online) முறையினூடாக இலங்கை மத்திய வங்கிக்குச் சேமலாப நிதிச் செலுத்தல்களை மேற்கொண்டு வருவதாகவும், ஊழியர்களின் எண்ணிக்கை பதினைந்துக்கு மேற்பட்ட நிறுவனங்களின் செலுத்தல்களை நிகழ்நிலை முறைமையினூடாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். அத்துடன், ஊழியர் சேமலாப நிதியம் சட்டத்தின் புதிய திருத்தங்களுக்கு அமைய பிராந்திய அலுவலகங்கள் ஊடாக நிகழ்நிலை முறையில் உறுப்பினர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். தரவு முறைமைகள் சார்ந்த பணிகளுக்காக 2021 ஆம் ஆண்டில் 241 மில்லியன் ரூபாவும், 2022 ஆம் ஆண்டில் 75 மில்லியன் ரூபாவும், 2023 ஆம் ஆண்டில் 240 மில்லியன் ரூபாவும் நிதி ஏற்பாடுகளாக வழங்கப்பட்ட போதிலும், மேற்படி ஒவ்வொரு ஆண்டிலும் முறையே 37 மில்லியன், 35 மில்லியன் மற்றும் 22 மில்லியன் ரூபா மாத்திரமே குறித்த ஏற்பாடுகளிலிருந்து செலவிடப்பட்டுள்ளது என்பதை குழு அவதானிப்புச் செய்தது. ஆரம்பத்தில் தொழில் திணைக்களத்தை மாத்திரம் டிஜிட்டல்மயமாக்க எதிர்பார்க்கப்பட்ட போதிலும், உத்தேச

		தேசிய தொழில் சந்தை தகவல் முறைமையின் (National Labour Market Information System) ஊடாகத் தொழில் திணைக்களத்தை அடிப்படையாகக் கொண்ட சகல நடவடிக்கைகளும் டிஜிட்டல் மயமாக்கப்படவுள்ளதாகப் பிரதம கணக்கீட்டு அலுவலர் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். / இலங்கை மத்திய வங்கியும், தொழில் திணைக்களமும் ஒரே தரவு முறைமையின் ஊடாக இணைக்கப்படுவது மிகவும் பொருத்தமானது என்று இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், அதற்கான கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்வதற்குரிய யோசனைகளைச் சமர்ப்பிக்குமாறு பிரதம கணக்கீட்டு அலுவலர் கணக்கீட்டு அலுவலருக்கு /குழு அறிவுறுத்தியதுஅத்துடன் ., இது தொடர்பாக இலங்கை மத்திய வங்கி மற்றும் தொழில் திணைக்களத்தின் மேற்படி சகல அலுவலர்களுடனும் இணைந்து கலந்துரையாடல் ஒன்றை நடத்துமாறும் குழு சிபாரிசு செய்தது. ஊழியர்களின் உரிமைப் பயன்கள் கிடைக்காமை தொடர்பாக 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் செயலிழந்த நிலையில் 5,923 வழக்குகள் காணப்பட்ட போதிலும், மேற்படி வழக்குகளை செயற்படும் நிலைக்குக் கொண்டுவருவதற்குப் போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காமை தொடர்பிலும் குழு கவனம் செலுத்தியது. மேற்படி வழக்குகள் செயலிழந்த மற்றும் திறந்த பிடியாணை நிலைக்கு (Open Warrants) உள்ளாகியுள்ளமைக்கான காரணம், நிறுவனங்களின் பணிப்பாளர்கள் வெளிநாடு சென்றுள்ளமை, பரிசோதனைகள் நடத்தப்படும் தினங்களில் நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தமை அல்லது முகவரிகள் மாற்றப்பட்டிருந்தமையே என்று சுட்டிக்காட்டிய பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர், கிராம அலுவலர்கள், தேர்தல் ஆணைக்குழு மற்றும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் ஆகியவற்றின் ஊடாகத் தொழில் வழங்குனர்களின் தற்போதைய நிரந்தர வசிப்பிட முகவரிகளைப் பரிசோதிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். பயன்களைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்களில் உறுப்பினரின் விபரங்களில் குறைபாடுகள் காணப்படுவதன் காரணமாக, பயன்பெறுநர்களின் நிதியைப் பெற்றுக்கொள்வதில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதற்கான முறையியல் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்றும் குழு சுட்டிக்காட்டியது. நிறுவனங்கள் தொழில் திணைக்களத்தில் உறுப்பினர்களைப் பதிவு செய்யும்போதும், இலங்கை மத்திய வங்கிக்குப் பங்களிப்புப் பணத்தைச் செலுத்தும் போதும் வழங்கப்பட்டுள்ள விபரங்களில் முரண்பாடுகள் காணப்படுகின்றமையே இந்த சிக்கலுக்கான காரணமாகும் என்றும், அதற்கான தீர்வாகத்

		தற்போது வழங்கப்பட்டுள்ள விபரங்களை நிகழ்நிலையில் (Online) பரிசோதித்துத் சீராக்கல் செய்துகொள்வதற்காக, தொழில் திணைக்களத்தின் புதிய இணையத்தளத்தின் கீழ் e-சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும், அது பற்றி விரைவில் பொதுமக்களை விழிப்புணர்வூட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். __பரிந்துரை__ சகல மாவட்டங்கள் தொடர்பாகவும் மேற்படி வருடாந்த ரீதியாக மாவட்ட மட்டத்தில் இற்றைவரை ஊழியர் சேமலாப நிதிக் கொடுப்பனவை மேற்கொண்டுவரும் நிறுவனங்களின் எண்ணிக்கை, எவ்வித பிரச்சினையுமின்றி மேற்படி கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் யாவை என்பது மற்றும் ஊழியர் சேமலாப நிதிக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதில் சிக்கல்கள் நிலவும் நிறுவனங்கள் யாவை என்பதும், இதனால் பாதிப்புக்குள்ளாகும் ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் செலுத்தப்பட வேண்டியுள்ள நிலுவைத் தொகைகள் உரிய ஆண்டு வாரியாக தனித்தனியே எவ்வளவு என்ற விபரங்களை உள்ளடக்கிய அறிக்கை ஒன்றை 2024.07.19 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு சிபாரிசு செய்த குழுவானது, மேற்படி பணி சம்பந்தமாக மாவட்ட அலுவலர்கள் பொறுப்புக் கூற வேண்டும் என்றும் வலியுறுத்தியது. **தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளரின் ML/AC/01/37/02-2024 ஆம் இலக்க மற்றும் 2024.07.17 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் மாவட்ட அலுவலக மட்டத்திலான மேற்படி தகவல்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன.**
02	__**2002 ஆம் ஆண்டில் கடத்தல் மூலம் காணாமல் போன வாகனம் சம்பந்தமாக அடுத்தகட்டப் பணிகளை முன்னெடுத்தல்.**__	மேற்படி வாகனத்தின் பதிவை ரத்துச் செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகப் பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். அது சம்பந்தமான விபரங்களைத் கணக்காய்வுப் பிரிவிற்கு வழங்குவதற்கான பணிகளை முன்னெடுக்குமாறு பிரதம கணக்கீட்டு அலுவலருக்குக் குழு அறிவுறுத்தியது.
03	__**மகளிர் மற்றும் சிறுவர் பிரிவின் செயற்பாடுகளின் முன்னேற்றம்**__	சிறுவர் ஊழியர்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு அதிகாரம் இல்லாமை காரணமாக சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்குக் கிடைக்கும் முறைப்பாடுகளை, நேரடியாக தொழில் திணைக்களத்தின் முறைப்பாட்டு முகாமைத்துவ முறைமைக்கு அனுப்புவதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.

04	**<u>2019 செப்டம்பர் 27 ஆம் திகதிய 2142/90 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் ஏற்பாடுகளுக்கமைய, தொழிற்சாலைகளைப் பதிவு செய்யும் செயன்முறையில் குறைபாடுகள் காணப்படுகின்றமை.</u>** 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு பதிவு செய்யப்பட்டுள்ள 32,948 தொழிற்சாலைகளில் 28,555 தொழிற்சாலைகள் 2019 செப்டம்பர் 27 ஆம் திகதிய 2142/90 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் ஏற்பாடுகளுக்கமைய பதிவு செய்யப்படாமை தொடர்பாக குழு கவனம் செலுத்தியதுடன், ஊழியர்களின் பாதுகாப்பிற்கு எவ்வித ஆபத்தும் இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக இத்தொழிற்சாலைகளைப் பதிவு செய்வதன் முக்கியத்துவத்தையும் குழு சுட்டிக்காட்டியது.	தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் தொழிற்சாலைகளைப் பதிவு செய்வது அவசியமானதல்ல என்பதைச் சுட்டிக்காட்டிய பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர், 1950 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை அவ்வப்போது வெளிக்கள ஆய்வுகளை மேற்கொண்டு 32,948 தொழிற்சாலைகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவற்றுள் தற்போது இயங்கிவரும் நிறுவனங்களைப் பதிவு செய்வதற்காக மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர் அலுவலகங்கள் மற்றும் மாவட்ட தொழில் அலுவலகங்கள் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குத் தேவையான நினைவூட்டல்களும், விழிப்புணர்வூட்டல்களும் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்புதிய சட்டங்களின் கீழ் தொழிற்சாலைகளைப் . பதிவு செய்யும் போது, கட்டிட வரைபடங்களை தொழில் திணைக்களத்தின் ஊடாக அங்கீகரிப்பது கட்டாயமாகும் என்றும் பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார் .2019 ஆம் ஆண்டு முதல் நாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமாக மேற்படி பதிவு நடவடிக்கைகளில் தாமதங்கள் ஏற்பட்ட போதிலும், தற்போது அப்பணியை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர் மேலும் குறிப்பிட்டார். அத்துடன், சகல தொழிற்சாலைகளையும் பரிசோதித்து முடிப்பதற்கு சுமார் மூன்று ஆண்டுகள் வரை காலம் எடுக்கும் என்றும் அவர் தெரிவித்தார். **<u>அவதானிப்பு/ பரிந்துரை</u>** சகல தொழிற்சாலைகளையும் பதிவு செய்வதற்குத் தேவையான தகவல்களைச் சேகரிப்பதற்கு, தொழில் திணைக்களத்தில் தற்போதுள்ள உத்தியோகத்தர்கள் போதுமானதாக இல்லை எனச் சுட்டிக்காட்டிய குழு, சகல தொழிற்சாலைகளையும் பதிவு செய்வதற்குத் தேவையான தகவல்களைச் சேகரிப்பதற்காக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அல்லது தொழில் திணைக்களத்தின் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலருக்கு ஆலோசனை வழங்கியது. அதற்கமைய, தேவைக்கேற்ப இப்பணிக்கு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் ஊடாக, பிரதேச செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களை யாதாயினுமொரு கொடுப்பனவை செலுத்துவதன் அடிப்படையில் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பது பொருத்தமானது என்றும் குழு சுட்டிக்காட்டியது.

		இத்தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான மாதிரிப்படிவத்தையும், சகல தொழிற்சாலைகளையும் பதிவு செய்வதற்கான ஒரு வேலைத்திட்டத்தையும் தயார் செய்து 2024.07.19 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பிக்குமாறும், இப்பணிக்காக சகல மாவட்ட தொழில் ஆணையாளர்களையும் இணைத்துக்கொள்ளுமாறும் குழு சிபாரிசு செய்ததுஅத்துடன் ., நிறுவனங்களுக்கு வருடாந்த உரிமப்பத்திரம் வழங்கும் போது இப்பதிவைக் கட்டாயமாக்குவதற்கான சுற்றறிக்கை ஒன்றை வெளியிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் குழு சிபாரிசு செய்தது. **தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளரின் 2024.07.17 ஆம் திகதிய ML/AC/01/37/02-2024 ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம், தொழிற்சாலைகளின் பதிவுகளை அதிகரிப்பதற்காக திணைக்கள உத்தியோகத்தர்களைப் பயன்படுத்துவது தொடர்பாக திட்டமிடப்பட்ட பொறிமுறையானது உரிய மாதிரிப்படிவங்களுடன் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், தொழிற்சாலைகளை பொதுவான நடைமுறையின் கீழ் பதிவு செய்வதற்கு மேலதிகமாக, நடமாடும் பதிவுத் திட்டங்களை ஆரம்பிப்பதும், இயங்காத நிலையிலுள்ள தொழிற்சாலைகள் தொடர்பான கோப்புகளை மூடுவதும் இப்பொறிமுறையின் முக்கிய செயற்பாடுகளாகும்.** **தொழிற்சாலைகளை பேணிவருவதற்கான உரிமப்பத்திரங்களை வழங்கும் போது, தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அவை பதிவு செய்யப்பட்டிருப்பது ஒரு கட்டாயத் தேவையாக மாற்றப்படுவதை உறுதி செய்வதற்காக, குறித்த உரிமப்பத்திரங்களை வழங்கும் அரச மற்றும் பகுதியளவிலான அரச நிறுவனங்கள் உரித்தான அமைச்சுகளின் இணக்கப்பாட்டுடன் முறையியல் ஒன்றைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**
05	**<u>2021 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையின் 1.6.1 (ஆ)(i) ஆம் பந்தி</u>** நிலுவை சேமலாப நிதியம், ஊழியர் நட்டஈடு மற்றும் பணிக்கொடை தொடர்பாக நீதிமன்ற உத்தரவின் பேரில் 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை கிடைத்திருந்த சுமார் 352	நீதிமன்ற உத்தரவின் பேரில் தவணைக் கட்டணங்களை முழுமையாகச் செலுத்தி முடிக்காத 62 மில்லியன் ரூபா தவிர்ந்த ஏனைய தொகைகள் தற்போது தீர்க்கப்பட்டுள்ளதாக பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். ஊழியர் சேமலாப நிதியத்திற்குக் கிடைக்கும் தவணைக் கட்டணங்களின் அளவிற்கு ஏற்ப, விகிதாசார அடிப்படையில் உறுப்பினர்களுக்குக் கிடைக்கும் வகையில் கணக்குகளில் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர் மேலும் தெரிவித்தார்.

	மில்லியன் ரூபா ஆன தொகையை, உரிய பயனாளிகளுக்குச் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை தொடர்பாக குழு கவனம் செலுத்தியது.	
06	**<u>முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களில் அமைக்கப்பட்டுள்ள பெண்களுக்கான விடுதிகள் தொடர்பான சிக்கல்கள்</u>** முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களில் அமைக்கப்பட்டுள்ள பெண்களுக்கான விடுதிகளில், பியகம பெண்களுக்கான விடுதி 2018 யூன் 15 ஆம் திகதி முதல் மூடப்பட்டுள்ளமை மற்றும் கொக்கல, கட்டுநாயக்க பெண்களுக்கான விடுதிகளின் மலசலக் கூடத் தொகுதிகளைப் புனரமைப்பதற்கு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கம் செய்யப்பட்டிருந்த போதிலும் அப்பணிகள் நிறைவேற்றப்படாமை தொடர்பில் தற்போதைய நிலைமை பற்றி குழு வினவியது.	விடுதிகளைப் பேணிவருவது தொழில் திணைக்களத்தின் செயற்பணிக்கு உரித்தானதல்ல என்பதைச் சுட்டிக்காட்டிய பிரதம கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர், பியகம பெண்களுக்கான விடுதி அமைந்துள்ள கட்டிடம் ஆபத்தான நிலையிலுள்ளது என்று பொறியியல் பிரிவு அறிக்கையிட்டதன் காரணமாக 2018 ஆம் ஆண்டில் அது மூடப்பட்டது என்று தெரிவித்தார். இக்கட்டிடங்களை அவை அமைந்துள்ள காணிகள் உரித்தான நிறுவனங்களிடம் சாட்டுதல் செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குழு அறிவுரை வழங்கியது.
07	**<u>தனியார் ஊழியர் சேமலாப நிதியங்கள் தொடர்பான தற்போதைய தகவல்கள்</u>**	1996.02.02 ஆம் திகதி முதல் தனியார் ஊழியர் சேமலாப நிதியங்களைப் பதிவு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்றும், 1976 ஆம் ஆண்டிற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட 117 தனியார் ஊழியர் சேமலாப நிதியங்கள் தற்போது இயங்கி வருவதாகவும், அமுலிலுள்ள சட்டத்தின் கீழ் இந்நிதியங்களுக்கு மேலும் ஊழியர்களை இணைத்துக் கொள்வதற்கு எவ்வித தடையும் இல்லை என்றும் பிரதம கணக்கீட்டு அலுவலர் கணக்கீட்டு அலுவலர் / தெரிவித்தார். ஊழியர் சேமலாப நிதியம் சட்டத்தின், அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியங்கள் தொடர்பான 27 ஆம் பிரிவின் கீழ் இந்நிதியங்கள் தாபிக்கப்பட்டுள்ளதாக பிரதம கணக்கீட்டு அலுவலர் குழுவிற்குச் சுட்டிக்காட்டினார். **<u>அவதானிப்பு/ பரிந்துரை</u>** ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக, தனியார் ஊழியர் சேமலாப நிதியங்களின் நிருவாக சபைகளின் மூலம் இந்நிதிகளை முதலீடு செய்தல் மற்றும் சலுகைகளை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை ஒழுங்குறுத்துவதன் முக்கியத்துவத்தை குழு இங்கு வலியுறுத்தியது. தனியார் ஊழியர் சேமலாப நிதியங்களைப் பேணிவருகின்ற நிறுவனங்கள் எவை என்பது பற்றியும், அந்நிதியங்களின் தற்போதைய நிலைமை மற்றும் ஒவ்வொரு நிதியத்தினதும்

		நிர்வாக அதிகாரம் யாரிடம் உள்ளது என்பது பற்றியும், அந்நிதியங்கள் மூலம் வழங்கப்படும் சேவைகள் மற்றும் செலுத்தப்படும் வட்டி வீதங்கள் ஆகிய விபரங்களை உள்ளடக்கிய முழுமையான அறிக்கை ஒன்றை 2024.07.19 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பிக்குமாறும், அவசியமாயின் அந்நிதியங்களை ஒழுங்குறுத்துவது தொடர்பாக புதிய ஒழுங்குவிதிகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் குழு பிரதம கணக்கீட்டு அலுவலர் கணக்கீட்டு அலுவலருக்கு சிபாரிசு / .செய்தது **தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளரின் 2024.07.17 ஆம் திகதிய ML/AC/01/37/02-2024 ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம், இதுவரையில் பரிசோதிக்கப்பட்டுள்ள 107 நிதியங்களின் தற்போதைய நிலைமை அறிக்கையிடப்பட்டுள்ளது.**
மாவட்ட செயலகம் - கம்பஹா ***(2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளுக்கான கணக்காய்வு தலைமையதிபதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் தற்போதைய செயலாற்றுகை)*** **புலனாய்வு செய்யப்பட்ட திகதி – 2024 யூன் மாதம் 20 ஆம் திகதி**		
அழைக்கப்பட்ட நிறுவனங்கள்- ❖ பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ❖ மாவட்ட செயலகம் - கம்பஹா		
01	**<u>கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கள் மற்றும் ஏனைய மாவட்ட மற்றும் பிரதேச குழுக் கூட்டங்களை நடாத்துதல்.</u>**	**<u>அவதானிப்புக்கள்/ விதப்புரைகள்</u>** அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிதி இணக்கப்பாடு மற்றும் நெறிப்படுத்தல்களின் செயலாற்றுகை தொடர்பாக நிகழ்நிலை தகவல் முகாமைத்துவ முறைமையினூடாக மதிப்பீடு செய்கையில் கம்பஹா மாவட்ட செயலகம் முன்னைய வருடங்களில் அதிகளவான செயலாற்றுகையினை வெளிப்படுத்திய போதிலும் அண்மைக் காலத்தில் அதனூடாக பெற்றுக்கொண்ட புள்ளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் பார்க்கையில் ஒப்பீட்டு ரீதியாக குறைவாக காணப்படுவதாகவும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் முறையாக கூட்டப்படாமை இதற்கு செல்வாக்குச் செலுத்தியுள்ள விடயமாகும் என்பதை அவதானித்த குழு, பிரதேச செயலகங்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களை உரியவாறு நடாத்துவது தொடர்பாக மேற்பார்வை செய்வதற்கு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தலையீடு செய்தல் வேண்டுமென தெரிவித்தது. ஏனைய மாவட்ட குழுக் கூட்டங்களை நடாத்துவதில் குறைபாடுகள் காணப்படுவதாக சுட்டிக் காட்டிய குழு, மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் நடாத்தப்படும் கூட்டங்களின் வகைகள், ஒவ்வொரு கூட்டங்களையும் நடாத்துவதன் குறைந்தபட்ச தேவைப்பாடு, குறிப்பிட்ட ஒவ்வொரு குழுவுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுடன் ஒருங்கிணைப்பினை

		மேற்கொள்வது யார் என்பது தொடர்பாக, குழுக்களை நடாத்துவது தொடர்பில் வெளியிட்டுள்ள சுற்றறிக்கைள் காலத்திற்கேற்ப இற்றைப்படுத்த வேண்டுமாயின் அது பற்றிய தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையை 2024.07.20ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு பிரதான கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.)/ கணக்கீட்டு அலுவலர் (க.அ.) இற்கு விதப்புரை வழங்கியது. **பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் HA/F/MA/02/PAC-GAMஆம் இலக்க மற்றும் 2024.07.19ஆம் திகதிய கடிதம் மூலம் மாவட்ட மற்றும் பிரதேச கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் பற்றிய மேற்படி அறிக்கை ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.**
02	**<u>அனைத்து மாவட்டச் செயலகங்களின் தொலை நோக்கு, பணிக்கூற்று மற்றும் பணிப்பொறுப்புக்களை பயனுறுதிமிக்கதாக தயாரித்தல்</u>**	**<u>அவதானிப்புக்கள்</u>** இதற்கு முன்னைய சந்தர்ப்பங்களில் நிதி அமைச்சுடன் மேற்கொண்ட கலந்துரையாடல்களின் போதும் இது தொடர்பாக கவனம் செலுத்தியுள்ளயதாக தெரிவித்த குழு, ஒவ்வொரு மாவட்டச் செயலங்களுக்கும் ஏற்ற வகையில், தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் பணிப்பொறுப்பை பயனுதிமிக்கதாக தயாரிப்பதற்கான ஆலோசனை வழிகாட்டல்களை வழங்குவது பொருத்தமானதென சுட்டிக்காட்டப்பட்டது.
03	**<u>கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பிரச்சினைகள் காணப்படுகின்றமை</u>**	**<u>அவதானிப்புக்கள்/ விதப்புரைகள்</u>** மாவட்டத்தில் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்கையில் அதிக காலம் எடுப்பதன் காரணமாக குறித்த கருத்திட்டங்களுக்கு அதிகமான கிரயத்தை ஏற்க வேண்டியுள்ளதாக குழு சுட்டிக்காட்டியது. வரவு செலவுத்திட்டம் மூலம் நிதி ஒதுக்கீடுகளை செய்துகொண்டதன் பின்னர் நிறுவனங்கள் உரிய காலப்பகுதியினுள் சம்பந்தப்பட்ட கருத்திட்டங்களின் பணிகளை நிறைவு செய்வதில்லை என்றும், சமூக அமைப்புகளுக்கு கருத்திட்டங்களை வழங்கும் செயன்முறையில் குறைபாடுகள் காணப்படுவதை குழு அவதானித்தது. நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஒருங்கிணைப்புடன் சமூக அமைப்புகளுக்கு கருத்திட்டங்களை வழங்குதல் மற்றும் பகுதியளவில் பூர்த்திசெய்துள்ள கருத்திட்டங்களுக்கு நிதிகளை பயன்படுத்துவது தொடர்பாக காணப்படுகன்ற பிரச்சினைகள் தொடர்பாக அறிக்கையொன்றை தயாரித்து 2024.07.20ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு குழு விதந்துரைத்ததுடன், குறித்த அறிக்கையை தயாரிப்பது தொடர்பாக மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டங்களில் மக்கள் பிரதிநிதிகளிடம் கருத்துக்களை பெற்றுக்கொள்வது பொருத்தமாதொகும் என்று விதப்புரை வழங்கியது.

		பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் HA/IA/ஆம் இலக்க பூர்த்திசெய்யாத கட்டுமாணங்கள் / 2024 மற்றும் 2024.07.23 ஆம் திகதிய கடிதம் மூலம் 25 மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற அனைத்து பிரதேச செயலகங்கள் தொடர்பாகவும் மேற்கொள்ளப்பட்டு வரும், இருப்பினும் நிதி ஒதுக்கீடுகள் போதுமானதாக இன்மையால் இது வரையில் பூர்த்தி செய்யாதுள்ள கட்டுமாணங்கள் தெடார்பான தகவல்களை உள்ளடக்கிய அறிக்கை ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது. பகுதியளவில் பூர்த்தியாகியுள்ள கருத்திட்டங்கள் தொடர்பில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்து அறிக்கையொன்றைப் பெற்று அது தொடர்பாக அடுத்து வரும் வருடங்களில் முன்னுரிமை அளிக்கும் வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டும் எனவும், அதற்கமைவாக ஒவ்வொரு கருத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்ட திகதி, அதற்காக ஏற்கனவே செலவு செய்துள்ள தொகை, அதன் தற்போதைய நிலைமை, கருத்திட்டத்தை முன்கொண்டு செயல்வது நடைமுறை ரீதியாக சாத்தியப்படுமா ஆகிய தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கும் பிரதியிட்டு தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு ஆற்றுப்படுத்துமாறு குழு விதப்புரை வழங்கியது. **பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சு செயலாளரின் HA/F/MA/02/PAC-GAM ஆம் இலக்க மற்றும் 2024.07.19ஆம் திகதிய கடிதம் மூலம் கம்பஹா மாவட்டத்தில் பகுதியளவில் பூர்த்தியாகியுள்ள கருத்திட்டங்கள் தொடர்பான தகல்களை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக அறிக்கை தயாரித்து ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.**
04	<u>**ஓய்வூதியம் செலுத்துகையில் இடம்பெறுகின்ற முறைகேடுகள் மற்றும் பிரச்சினைகள்**</u>	<u>**அவதானிப்புக்கள்**</u> அரச ஊழியர்களின் கவனக்குறைவு மற்றும் மோசடிகள் காரணமாக ஓய்வூதியம் தொடர்பான முறைகேடுகள் இடம்பெறுவதாகவும், முப்படையினரின் ஓய்வூதியம் செலுத்துகையில் முறைகேடுகள் அதிகளவு இடம்பெறுவதாக அறிந்துகொள்ள முடிந்துள்ளதால், குழு அது தொடர்பில் கவனம் செலுத்தியதுடன் இவ்வாறான நிலைமைகளை தவிர்ப்பதற்கு போதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை என்பதையும் வெளிப்படுத்தியது. வெளிநாடுகளுக்குச் செல்லும் ஓய்வூதியம் பெறுநர்கள் மற்றும் ஏனைய ஓய்வூதியம் பெறுநர்களுக்கு தங்களது தகவல்களை ஓய்வூதிய திணைக்கள இணையத்தளம் மூலம் இற்றைப்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவுறுத்தல்களை வழங்கிய குழு, ஓய்வூதியம் பெறுநர்களின் குறைபாடுகள் அல்லது நிருவாக ரீதியான விடயங்கள் காரணமாக ஓய்வூதியம் தயாரிக்கையில் பிரயோக ரீதியாக

		ஏற்படக்கூடிய பிரச்சினைகளை துரிதமாக தீர்ப்பதற்கு ஒய்வூதியம் பெறுநர்களின் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான வடிவமொன்றை தயாரிப்பது பொருத்தமானதென முன்மொழியப்பட்டது. இதற்காக டிஜிட்டல் மயப்படுத்தலுடன் கூடிய தேசிய வேலைத்திட்டத்துக்கு செல்ல வேண்டியதன் முக்கியத்தவம் தொடர்பாகவும் குழு வலியுறுத்தியது.
05	**<u>2014ஆம் ஆண்டில் மஹர பிரதேச செயலகத்தின் பாதுகாப்பு பெட்டகத்தில் காணப்பட்ட ரூ. 1,082,245 காணாமல்போன சம்பவம்</u>** குறித்த சம்பவம் தொடர்பாக இடம்பெற்ற விசாரணை அறிக்கைக்கு அமைவாக பிரதேச செயலாளர், கணக்காளர், நிதி உதவியாளர் மற்றும் சரப் ஆகிய நான்கு அலுவலர்களிடம் இருந்து குறித்த தொகையை இது வரையில் முழுமையாக அறவிடப்படவில்லை என்பது குழுவின்போது தெரியவந்தது.	**<u>விதப்புரை</u>** குறித்த சம்பவம் தொடர்பாக காணாமல்போன பணத்தொகையை அறவிடுதல் வேண்டுமென்று விதந்துரைத்துள்ளதாக மாவட்ட செயலாளர் தெரிவித்ததுடன், பிரதேச செயலாளர், கணக்காளர், நிதி உதவியாளர் மற்றும் சரப் ஆகிய நான்கு அலுவலர்களிடம் இருந்து அறவிடவேண்டியுள்ள நட்டத்தை அறவிடுவதற்கு அவர்கள் தற்போது கடமையாற்றும் நிறுவனங்களுக்கு மீண்டும் நினைவூட்டல் கடிதங்களை அனுப்புமாறும், அது தொடர்பாக அளிக்கின்ற பதில்களை குழுவிற்கு அறிவிக்குமாறும் குழு விதப்புரை வழங்கியது. **பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் HA/F/MA/02/PAC-GAM ஆம் இலக்க மற்றும் 2024.07.19ஆம் திகதிய கடிதம் மூலம் அது வரையில் மீள அறவிடப்பட்டுள்ள பணத்தொகை தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், 2024.07.09ஆம் திகதியிட்டு மீண்டும் நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**
06	2011ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 10ஆம் திகதி தொடக்கம் 2013ஆம் ஆண்டு யூலை மாதம் வரையில் மினுவாங்கொடை பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய பெண் முகாமைத்துவ உதவியாளர் ரூ. 1,400,429 மக்கள் நல உதவிப் பணத்தை மோசடி செய்த சம்பவம்	**<u>அவதானிப்புக்கள்/ விதப்புரைகள்</u>** சம்பந்தப்பட்ட பெண் அலுவலருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதையும், இதுவரையில் உரிய தொகையை முழுமையாக மீண்டும் அறவிடவில்லை என்பதையும் குழு அவதானித்தது. அதேபோன்று இவ்வாறு மோசடி செய்துள்ள தொகையை ஒரே தடவையில் அறவிடாது தவணை அடிப்படையில் அறவிடுவதற்கு தீர்மானித்துள்ளமை பொருத்தமற்றது என்பது குழுவின் கருத்தாகும். அரசாங்க அலுவலர்களின் கவனயீனம், மோசடி மற்றும் ஊழல் தொடர்பாக போதுமான தண்டனைகள் வழங்கக்கூடிய வகையில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை என்பதை அவதானித்த குழு அதனூடாக தவறான முன்மாதிரி வழங்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டியது. பொது மக்களின் பண மோசடிகளுக்கு பொறுப்புக் கூற வேண்டியுள்ள அரச அலுவலர்களிடம் குறித்த தொகையை மீள அறவிடுவது குறித்து தற்போது நடைமுறையிலுள்ள நிலைமையை ஆராய்ந்து அவ்வாறான பண மோசடிகள் தொடர்பாக தவணை அடிப்படையில் அறவிடாது துரிதமாக

		பணத்தை மீள அறவிடுவதற்கான முறைமையொன்றை தயாரித்து 2024.07.20ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்கு அறிக்கையிடுமாறு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு குழு விதப்புரை வழங்கியது. **பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் HA/F/MA/02/PAC-GAM ஆம் இலக்க மற்றும் 2024.07.19ஆம் திகதிய கடிதம் மூலம் உரிய நட்டத்திற்கு பொறுப்புக் கூறவேண்டியுள்ள பெண் அலுவலரிடம் இருந்து அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டியுள்ள நட்டத்தை அவரது ஓய்வூதிய பணிக்கொடை மற்றும் செலுத்த வேண்டியுள்ள நிலுவைத் தொகையை ஓய்வூதியத்திலிருந்து அறவிட்டதன் பின்னர் அரசாங்கத்திற்கு மேலும் கிடைக்க வேண்டியுள்ள மீதிகள் காணப்படுமாயின் உரிய தொகையை குறித்த பெண் அலுவலரிடம் இருந்து ஒரே தடவையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜாஎல பிரதேச செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**
07	<u>**அரசாங்கத்திற்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் கட்டிடங்கள் பயன்படுத்தாமல் காணப்படுகின்றமை.**</u>	<u>**அவதானிப்புக்கள்/ விதப்புரைகள்**</u> நிறுவனப் பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற பல வாகனங்கள் பிரதேச செயலங்களில் பயன்படுத்தாது காணப்படுவதாகவும், அரசாங்கத்திற்குச் சொந்தமான கட்டிடங்களும் பல காணிகளும் இவ்வாறு பயன்படுத்தாமல் இருப்பதை குழு அவதானித்தது. நாடளாவிய ரீதியில் பயன்படுத்தாமல் காணப்படுகின்ற அரசாங்கத்திற்குச் சொந்தமான வாகனங்கள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக தகவல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பி.க.அ./ க.அ. தெரிவித்தார். அவ்வாறு பயன்படுத்தாமல் காணப்படுகின்ற வாகனங்கள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கைகளை குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு பி.க.அ./ க. அ. இற்கு குழு விதப்புரை வழங்கியது. **மேற்படி அறிக்கைகள் இது வரையில் சமர்ப்பிக்கப்படவில்லை.**
08	<u>**விபத்துக்குள்ளான PF 9743ஆம் இலக்க மின்சுபிசி வகை கெப் வாகனம் தொடர்பாக அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்**</u>	குறித்த வாகனத்தை பழுதுபார்ப்பதற்கு அனுப்பியுள்ளதாக பி.க.அ. தெரிவித்ததுடன் இதற்காக உரிய காப்புறுதி நிறுவனம் செலுத்துகின்ற நட்டஈட்டுத் தொகை தொடர்பில் பிரச்சினைகள் காணப்படுவதாகவும் தெரிவித்தார். நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் காப்புறுதி ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு ஆகிய நிறுவனங்கள் ஒருங்கிணைந்து ஒட்டுமொத்தமாக அரசாங்க வாகனங்களுக்கான காப்பீட்டு இழப்பீட்டுத் தொகை செலுத்துதல் தொடர்பாக தெளிவான முறைமையொன்றை தயாரிக்குமாறு குழு பி.க.அ. அறிவுறுத்தல் வழங்கியது.

09	<u>எழுதி வைக்கப்பட்டிருந்த காசோலைகளின் செல்லுபடியாகும் காலப்பகுதி முடிவடையும் வரையில் குறித்த காசோலைகளை வழங்காது இருந்த சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றமை</u>	<u>அவதானிப்புக்கள்</u> குறித்த திகதியில் பொருட்கள் கிடைக்காமை அல்லது பணிகள் நிறைவு செய்யாமையால் ஏற்கனவே எழுதி வைக்கப்பட்டிருந்த காசோலைகளின் செல்லுபடியாகும் காலப்பகுதி முடிவடையும் வரையில் குறித்த காசோலைகள் வழங்கப்படாதுள்ள சந்தர்ப்பங்களை அவதானித்த குழு, வருட இறுதியில் காசோலைகளை எழுதி வைத்திருப்பது நிதி ஒழுக்கத்திற்கு முரணானது என்றும், இவ்வாறான தாமதங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டுமெனவும் வலியுறுத்தியது.
10	<u>கிராமிய நீர் வழங்கல் கருத்திட்டங்கள் செயற்படாத நிலையில் காணப்படுதல்.</u>	இது தொடர்பாக காணப்படுகின்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்கு கொள்கை ரீதியான தீர்மானமொன்றை மேற்கொள்ளுதல் வெண்டுமென்று குழு இதன்போது சுட்டிக் காட்டியது. அதே போன்று, சமூகப் பங்குபற்றுதலுடன் கூடிய அணுகுமுறையினை பின்பற்றி மேற்கொள்ளக்கூடிய அபிவிருத்தி திட்டங்களை தெரிவு செய்கையில் அதிகாரப் பிரதேசத்திற்குள் முன்னுரிமை அளிக்க வேண்டியுள்ள துறைகளுக்கு அதிகளவு கவனம் செலுத்துதல் வேண்டுமெனவும் குழு வலியுறுத்தியது.
11	<u>மூடப்படுகின்ற பாடசாலைகளை பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்தாமை</u>	<u>அவதானிப்புக்கள்</u> கம்பஹா மாவட்டதில் காணப்படுகின்ற மூடப்பட்டுள்ள மாகாணப் பாடசாலைகளின் பட்டியல் மற்றும் அவ்வாறு மூடப்பட்டுள்ள பாடசாலைகளை பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்தும் வழிமுறை தொடர்பாக அறிக்கையொன்றை தயாரித்து 2024.07.2ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு குழு விதப்புரை வழங்கியது. **பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் HA/F/MA/02/PAC-GAM ஆம் இலக்க மற்றும் 2024.07.19ஆம் திகதிய கடிதம் மூலம் கம்பஹா மாவட்டத்தில் காணப்படுகின்ற மூடப்பட்டுள்ள பாடசாலைகளை பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்தவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளின் தற்போதைய நிலைமை தொடர்பாக விளக்கமான அறிக்கையொன்று ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.**
12	<u>கம்பஹா மாவட்டத்தில் காணப்படுன்ற அனைத்துக் கிராம அலுவலங்களும் உள்ளடங்கும் வகையில் சோதனை நடவடிக்கைகள் இடம்பெறாமை மற்றும் அலுவலர்களின் சேவை நிலையங்களின் இடமாற்றம் முறையாக இடம்பெறாமை.</u>	2022ஆம் ஆண்டில் கம்பஹா மாவட்டத்தில் காணப்படுன்ற அனைத்துக் கிராம அலுவலங்களும் உள்ளடங்கும் வகையில் சோதனை நடவடிக்கைகள் இடம்பெறாமை தொடர்பாக குழுவில் தெரியவந்ததுடன், இன்றளவில் கட்டாயமாக மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அனைத்து அலுவலகங்களையும் சோதனை செய்யுமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக பி.க.அ. / க.அ. தெரிவித்தார். கம்பஹா மாவட்ட செயலகத்தில் மற்றும் 13 பிரதேச செயலகங்களில் 05 வருடங்களுக்கு மேலாக ஒரே சேவை

		நிலையத்தில் கடமையாற்றும் அதிகளவான கிராம அலுவலர்கள் இடமாற்றம் செய்யப்படாமை தொடர்பில் கவனம் செலுத்திய குழு எதிர்காலத்தில் அவ்வாறான அலுவலர்களை இடமாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பி.க.அ./ க.அ. இற்கு அறிவுறுத்தல் வழங்கியது.
13	**கிராம சக்தி மக்கள் இயக்கம் வேலைத்திட்டத்தின் கீழ் 2017ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட சங்கங்கள்**	குறிப்பிட்ட சங்கங்களில் செயற்படாதுள்ள சங்கங்களின் பதிவை இரத்துச் செய்வதற்கு கம்பனிப் பதவாளர் நாயகத்திற்கு அறிவித்துள்ளதாகவும், குறித்த சங்கங்களின் கணக்குகளில் காணப்படுகின்ற பணத்தை செயற்பாட்டிலுள்ள சங்கங்களுக்கு அல்லது அரசாங்கத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக பி.க.அ. / க.அ. தெரிவித்தார்.
14	**கம்பஹா மாவட்டத்தில் ஏற்படுகின்ற வெள்ள அனர்த்தங்களை தடுத்தல்**	கம்பஹா மாவட்டத்தில் ஏற்படுகின்ற வெள்ள அனர்த்தங்களை தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டுமென குழு வலியுறுத்தியதுடன், இரண்டு வாரங்களுக்கு முன்னர் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, நகர அபிவிருத்தி அதிகாரசபை, காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களை ஒன்றிணைத்து தாபிக்கப்பட்டுள்ள குழுவின் மூலம் வெள்ளத்தை குறைப்பதற்கான திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக பி.க.அ./ க.அ. தெரிவித்தார்.
மேல்மாகாண சபைக்குச் சொந்தமான உள்ளூராட்சி நிறுவனங்கள் ***(2024.06.06ஆம் திகதி இடம்பெற்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் வழங்கிய விதப்புரைகள் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றத்தை ஆராய்தல்)*** **புலனாய்வு செய்யப்பட்ட்ட திகதி - 2024 யூலை மாதம் 10ஆம் திகதி**		
அழைக்கப்பட்ட நிறுவனங்கள் - ❖ பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ❖ மேல்மாகாண சபை – பிரதம செயலகம் ❖ உள்ளூராட்சி அமைச்சு (மே. மா.) ❖ உள்ளூராட்சி திணைக்களம் (மே. மா.) ❖ நீர்கொழும்பு மாநகர சபை ❖ களுத்தறை மாநகர சபை ❖ கடுவளை மாநகர சபை ❖ ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகர சபை ❖ பேலியகொட நகர சபை ❖ மஹரகமை நகர சபை ❖ மஹர பிரதேச சபை ❖ களுத்தறை பிரதேச சபை ❖ பேருவளை பிரதேச சபை ❖ பொருளாதார அபிவிருத்தி பணியகம் ❖ நகர அபிவிருத்தி அதிகார சபை		
01	**2024.06.06ஆம் திகதி அரசாங்க கணக்குகள் பற்றிய குழு வழங்கிய விதப்புரைகள்**	குழுவின் விதப்புரைக்கு அமைவாக மேல் மாகாண சபையின் உள்ளூராட்சி திணைக்களம் மேற்கொண்ட ஆய்வின் தகவல் அறிக்கைகள் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. மேல் மாகாணத்திலுள்ள 3 மாவட்டங்களில் ஏல விற்பனைக்

	நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம் **கட்டளை இல. 1** கடந்த 20 வருட காலப்பகுதிக்குள் மேல் மாகாணத்தில் காணிகளை துண்டாக்கி விற்பனை செய்கையில் பொதுப் பயன்பாடுகளுக்கு ஒதுக்கியுள்ள காணிகளின் தற்போதைய நிலைமை தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொள்ளுதல்	காணிகளில் பொதுப் பயன்பாடுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள காணித் துண்டுகள் தொடர்பாக எண்ணிக்கை ரீதியான தரவுகள் மாத்திரம் குறித்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ளது. பொதுப் பயன்பாடுகளுக்கு காணித் துண்டுகளை ஒதுக்குவது மாத்திரம் போதுமானதாக இருக்காது என்று குறிப்பிட்ட குழு, குறித்த காணித் துண்டுகளில் அதிகமானவை பொதுப் பயன்பாடுகளுக்கு பயன்படுத்துவதற்கு பொருத்தமான நிலையில் காணப்படாமை பிரச்சினையாக இருப்பதாக குழு வலியுறுத்தியது. குறித்த விடயம் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் கலந்துரையாடியதாகவும், அதன்போது பொதுப் பயன்பாட்டுக் காணிகளுக்கு அங்கீகாரம் வழங்குகையில் திட்டமிடல் குழு கள விஜயமொன்றை மேற்கொள்வது பொருத்தமானது என்று தீர்மானிக்கப்பட்டதாகவும் உள்ளூராட்சி திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலர் (க.அ.) தெரிவித்தார். குறித்த கலந்துரையாடலின் போது எற்படுத்திக் கொண்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில், காணிகளை துண்டாக்கி ஏல விற்பனை செய்கையில் பின்பற்ற வேண்டியுள்ள ஒழுங்குவிதிகள் உள்ளடங்கிய வர்த்தமானப் பத்திரிகை தயாரிக்கப்பட்டு வருவதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். **அவதானிப்புக்கள் / விதப்புரைகள்** சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களை ஆராய்ந்ததன் பின்னர், மஹர பிலுமொவ்ன்டன் (Blue Mountain) மற்றும் கம்பஹா பிரைம் லேன்ட்ஸ் (Prime Lands) ஆகிய ஏல விற்பனை காணிகளில் பொதுப் பயன்பாடுகளுக்கு ஒதுக்கபட்டுள்ள காணித் துண்டுகளுக்கு சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் திட்டக் குழு அங்கீகாரம் வழங்கியுள்ளதா என்பதுடன் குறித்த திட்டக் குழுவின் அங்கத்துவ உறுப்பினர்களாக கடமையாற்றிய அலுவலர்கள் யாவர் என்பது தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய அறிக்கையை குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு மேல் மாகாண உள்ளூராட்சிமன்ற ஆணையாளருக்கு குழு விதப்புரை வழங்கியது.
02	**2024.06.06 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட பரிந்துரைகளைச் செயற்படுத்துவதன் முன்னேற்றம் கட்டளை இலக்கம் 2.** காணி ஏல விற்பனையாளர்களின் மோசடிச் செயல்களிலிருந்து நுகர்வோரைப் பாதுகாப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் உள்ளடங்கிய தீர்வு	காணியொன்றை ஏலமிடுவதற்காக ஆரம்ப அனுமதியைப் பெறுவதற்கு முன்னர் ஏல விற்பனையாளர்கள் விளம்பரங்களை வெளியிடுதல் மற்றும் காணி அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்தல் என்பவற்றை மேற்கொள்வதாக சுட்டிக் காட்டிய குழு, இதனால் மின்சாரம், நீர் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் கூட இல்லாமல் காணித் துண்டுகளை கொள்வனவு செய்வதற்கு மக்கள் முனைவதாக குறிப்பிட்டார். இதற்கு மேலதிகமாக, காணிப்பத்திரத்தின் தெளிவுத்தன்மை குறித்து நுகர்வோர் அறிந்துகொள்வதற்கான முறையொன்று தயாரிக்கப்பட வேண்டுமென்றும் அக்குழு தெரிவித்தது.

	முன்மொழிவொன்றைத் தயாரித்தல்.	வரைவு செய்யப்பட்டுள்ள மேற்படி சுற்றறிக்கை மூலம் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒழுங்குவிதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் க.அ. தெரிவித்தார். அச்சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள சில ஒழுங்குவிதிகள் குழுவின் கட்டளைக்கிணங்க க.அ வினால் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டன. தமது அதிகாரப் பிரதேசத்திற்குள் அனுமதியற்ற காணி ஏல விற்பனைகள் தொடர்பில் உரிய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்கக்கூடியவாறு ஒழுங்குவிதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக இதன்போது தெரியவந்தது. **<u>அவதாணிப்புகள் / பரிந்துரைகள்</u>** சட்ட அலுவலர்களின் ஆலோசனைகளையும் பெற்று குறித்த சுற்றறிக்கையைத் தயாரிக்குமாறு அறிவுறுத்திய குழு, வரைவு செய்யப்பட்டுள்ள சுற்றறிக்கையை வெளியிடுவதற்கு முன்னர் அதன் இறுதி வரைவை 2024 ஓகஸ்ட் 22 ஆம் திகதிக்கு முன் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திற்குப் பரிந்துரை செய்தது. **நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் 2024.08.09 திகதியிட்ட கடிதம் மூலம் உரிய சுற்றறிக்கையின் வரைபு சமர்ப்பிக்கப்பட்டது.**
03	**<u>2024.06.06 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட பரிந்துரைகளைச் செயற்படுத்துவதன் முன்னேற்றம் கட்டளை இலக்கம் 3.</u>** கட்டிடத் திட்டங்களை அங்கீகரிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டுள்ள நிகழ்நிலை முறைமை (Online System) தொடர்பில், உள்ளூராட்சி நிறுவனங்கள் அமைச்சு, நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து தேவையான சுற்றறிக்கைகளை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வெளியிடுதல்.	கட்டிடத் திட்டங்களை அங்கீகரிக்கும் செயல்முறைக்காக தற்போது பல உள்ளூராட்சி நிறுவனங்களினால் நிகழ்நிலை முறைமை (Online System) பயன்படுத்தப்பட்டு வருவதாக உள்ளூராட்சி அமைச்சின் க.அ. தெரிவித்தார். ஒவ்வொரு நிறுவனத்தாலும் தங்களது விருப்பப்படி தயாரித்துக்கொண்ட நிகழ்நிலை முறைமைகளில் எந்தவொரு பாதுகாப்பும் இல்லையெனக் குறிப்பிட்ட நகர அபிவிருத்தி அதிகார சபையின் க.அ., தமது நிறுவனத்தால் அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள முறைமையானது அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப நிறுவனமொன்றின் அனுபவமிக்க அலுவலர்களின் கண்காணிப்பின் கீழ் தயாரிக்கப்பட்டதாகும் எனவும் குறிப்பிட்டார். மேலும், அனைத்து நிறுவனங்களுக்கும் இதற்காகப் பொதுவான முறைமொன்று இருக்க வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார். நகரப் பிரதேசங்களில் 9000 சதுர அடிக்கு மேற்பட்ட கட்டிடத் திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்குவது தமது அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுவதாகவும், அதற்காக 2018 ஆம் ஆண்டு முதல் நிகழ்நிலை முறைமையே (Online System) பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் க.அ. இங்கு சுட்டிக்காட்டினார். ஒருவர் சமர்ப்பித்த

		கட்டிட விண்ணப்பமொன்றின் தற்போதைய நிலையை இதன் மூலம் எந்த நேரத்திலும் பரிசோதிப்பதற்கான சாத்தியம் உள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். உள்ளூராட்சி நிருவனங்களை இம்முறைமைக்குள் உள்வாங்குவதற்காக இம்முறைமையில் சிறியதொரு மேம்படுத்தலை மாத்திரமே செய்ய வேண்டுமென்றும் மேலும் தெளிவுபடுத்தப்பட்டது. **<u>அவதாணிப்புகள் / பரிந்துரைகள்</u>** முன்வைக்கப்பட்ட விடயங்களைக் கருத்திற்கொண்ட குழு, நகர அபிவிருத்தி அதிகார சபை, உள்ளூராட்சி அமைச்சு மற்றும் மேல் மாகாண சபை ஆகிய நிறுவனங்கள் இணைந்து பகுப்பாய்வொன்றைச் செய்து, அனைத்து நிறுவனங்களாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொதுவான முறைமையொன்றை இதற்காகத் தயாரிக்குமாறும், அவ்வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் வரை காலக்கெடுவைக் கொண்ட அறிக்கையொன்றை 2024 ஓகஸ்ட் 22 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திற்குப் பரிந்துரை செய்தது.
04	<u>2024.06.06 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட பரிந்துரைகளைச் செயற்படுத்துவதன் முன்னேற்றம் கட்டளை இலக்கம் 04</u> மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டுப் பணிகளை ஒழுங்குபடுத்துவதற்காக அப்பணிகளை கணினிமயமாக்குவதற்காகத் தயாரிக்கப்பட்ட தரவு முறைமை இதுவரை நடைமுறைப்படுத்தப்படாமை, அதன் தற்போதைய நிலை மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவதற்குத் தாமதமாவதற்கான சிக்கல்கள்	தற்போதைய முறையின்படி மதிப்பீடுகள் தொடர்பான தகவல்களைப் புத்தகங்களில் பதிவு செய்வதற்காக நாளாந்தம் கனிசமான அளவு காலம் செலவிடப்படுவதாகவும், இம்முறைமையை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக நேரம் சேமிக்கப்படுவதால் அக்காலத்தையும் மதிப்பீட்டுப் பணிகளுக்காகப் பயன்படுத்திக் கொள்ள முடியுமென மதிப்பீட்டுத் திணைக்களத்தின் க.அ. ஜூம் (Zoom) தொழில்நுட்பம் ஊடாக இணைந்துகொண்டு தெரிவித்தார். இதன் மூலம் தற்போது தாமதமாகியுள்ள மதிப்பீட்டுப் பணிகளை மிகவும் வினைத்திறனாக செய்து கொள்ள முடியுமெனவும், தரவு முறைமையை நடைமுறைப்படுத்தும் பணிகள் இறுதிக்கட்டத்தில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.
05	<u>2024.06.06 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட பரிந்துரைகளைச் செயற்படுத்துவதன் முன்னேற்றம் கட்டளை இலக்கம் 06</u> உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளை நிறுவுதல்	பல உள்ளூராட்சி நிறுவனங்களில் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் இல்லாத காரணத்தினால் உள்ளகக் கணக்காய்வு முறையாக மேற்கொள்ளப்படாதமையால், உள்ளூராட்சித் திணைக்களத்திற்குள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஏற்படுத்தித் தருமாறு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனப் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள்

		மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். இது தொடர்பில் நிதி ஆணைக்குழுவுடன் கலந்துரையாடப்பட்டதாகவும், 2024 ஜூலை 23 ஆம் திகதி மீண்டும் கலந்துரையாடலொன்று நடத்தப்படவுள்ளதாகவும், இதன்போது இது குறித்து இறுதி முடிவு எடுக்க எதிர்பார்ப்பதாகவும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். உள்ளூராட்சி நிறுவனங்களில் வலுவான உள்ளகப் பிரிவொன்று இருப்பது அவசியமானதென்பது கணக்காய்வாளர் நாயகத்தின் கருத்தாகவும் இருந்தது. கடந்த வருடம் மேல் மாகாணத்தின் 49 உள்ளூராட்சி நிறுவனங்களில் மறுக்கப்படாத/முனைப்பழியற்ற கருத்து கிடைத்திருப்பது 4 நிறுவனங்களுக்கு மாத்திரம் என்பதும், 90% க்கு அதிகமானவை தொடர்பில் நல்லதொரு கருத்து கிடைக்கப்பெறவில்லையென்றும் தெரிவித்த கணக்காய்வாளர் நாயகம், அதற்குக் காரணம் அந்நிறுவனங்களில் முறையான கணக்குப் பரிசோதனை மேற்கொள்ளப்படாமையாகும் எனவும் குறிப்பிட்டார்.
06	**<u>2024.06.06 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட பரிந்துரைகளைச் செயற்படுத்துவதன் முன்னேற்றம் கட்டளை இலக்கம் 07</u>** கடுவலை மாநகரசபை பிரதேசத்திற்குள் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள் தொடர்பில் கணக்காய்வொன்றை மேற்கொள்ளுதல்.	போரே தகனசாலையின் கட்டுமானத் திட்டத்தில் இடம்பெற்றுள்ள முறைகேடுகள் தொடர்பில் கணக்காய்வொன்றை மேற்கொள்ளுமாறு குழுவினால் விடுக்கப்பட்ட பரிந்துரைக்கு இணங்க கணக்காய்வாளர் நாயகத்தினால் அது குறித்து மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தகவல்கள் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. இத்திட்டம் 2021 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, குறித்த ஒப்பந்ததாரர் வேலைகளைத் தாமதப்படுத்தியமையினால் ஒப்பந்தத்தை இடைவழியில் இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் அரசாங்கத்திற்கு எத்தகைய நிதி நட்டமும் ஏற்படவில்லையெனவும் கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டது. மீண்டும் கேள்விப் பத்திரம் கோரப்பட்டு இத்தகனசாலையின் கட்டுமானப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்காக மேல் மாகாண ஆளுநரின் அனுமதி கோரப்பட்டுள்ளதாக க.அ. தெரிவித்தார். புதிய மதிப்பீட்டின்படி ரூபா 80 மில்லியன் வரை தேவைப்படுமெனவும், அதனால் பழைய மதிப்பீட்டின்படி கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் க.அ. மேலும் தெரிவித்தார்.

		<u>அவதாணிப்புகள் / பரிந்துரைகள்</u> இத்தகனசாலையின் கட்டுமானப் பணிகளை மீள ஆரம்பிப்பதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறு மேல் மாகாண சபையின் பிரதம செயலாளருக்கு குழு பரிந்துரைத்தது. மேலும், ரன்பலெஸ்ஸ குப்பை மீள்சுழற்சி மையம் தற்போது திருத்தப் பணிகள் காரணமாக செயலற்ற நிலையில் காணப்படுவதுடன், இதன் மூலம் குறிப்பிட்டளவு மின்சார உற்பத்தி மேற்கொள்ளப்படுவதாகவும் கணக்காய்வின் மூலம் கண்டறியப்பட்டது. இது ஒரு கோட்பாட்டு ரீதியில் முன்மாதிரியான திட்டமாக இருப்பதால் இதனைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுமாறு குழுவினால் அறிவுறுத்தப்பட்டது. மேலும், கடந்த 04 ஆண்டுகளில் கடுவலை பிரதேச செயலகத்தினால் அல்லது கடுவலை மாநகரசபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களுக்கு இரட்டைக் கொடுப்பனவுகள் (Double Payment) எதுவும் மேற்கொள்ளப்படவில்லையென கணக்காய்வின்போது கண்டறியப்பட்டதாக கணக்காய்வாளர் நாயகம் குழுவில் தெரிவித்தார்.
07	<u>**கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையிலிருந்து எழும் விடயங்கள்**</u> கடுவலை மாநகரசபையினால் ரூபா 66 மில்லியனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டுள்ள வீதிகளில் காபற் இடுவதற்காகப் பயன்படுத்தப்படும் 6 இயந்திரங்களில் 4 இயந்திரங்கள் எந்தவொரு பயன்பாடுமின்றி பழுதடைந்து சிதைந்து வருவதாகக் கணக்காய்வினால் கண்டறியப்பட்டது.	இந்த இயந்திரங்கள் 2017 ஆம் ஆண்டில் அப்போதைய நகரசபையின் ஆட்சியாளர்களினால் எந்தவொரு சாத்தியவள ஆய்வுமின்றி கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட க.அ, அவற்றுள் 2 இயந்திரங்கள் மாத்திரமே பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 4 இயந்திரங்களும் தரித்து வைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார். இவ்வியந்திரங்களை மீள விற்பனை செய்வது தொடர்பில் உரிய வழங்குநர் நிறுவனத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் க.அ. தெரிவித்தார்.

கட்டடத் திணைக்களம்

(2020 மற்றும் 2021 ஆம் நிதி ஆண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் கட்டடத் திணைக்களத்தின் தற்போதைய செயலாற்றுகையை பரிசோதித்தல்)

விசாரணை செய்யப்பட்ட திகதி - 2024 ஜூலை 23

அழைக்கப்பட்ட நிறுவனங்கள் -

- நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
- கட்டடத் திணைக்களம்

01	**<u>கட்டடத் திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட பணியாட் தொகுதியின் எண்ணிக்கையும் நிலவும் வெற்றிடங்களும்</u>**	கட்டடத் திணைக்களத்தின் மொத்த அனுமதிக்கப்பட்ட பணியாட் தொகுதியின் எண்ணிக்கை 613 எனவும், 2024.06.30 ஆம் திகதிக்கு அதில் 494 பதவிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, அவ்வூழியர்கள்/பணியாளர்கள் 7 பிராந்திய அலுவலகங்களில் சேவையில் ஈடுபட்டுள்ளதாகவும், இவற்றுள் 96 பதவிகள் சிரேஷ்ட தரத்திலான பதவிகளாகும் எனவும், அந்த 96 பதவிகளில் பணிப்பாளர் நாயகம், மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவிகளுக்கு மேலதிகமாக 79 பொறியியலாளர்கள், 13 கட்டடக் கலைஞர்கள் மற்றும் 6 கணக்காளர்கள் உள்ளதாகவும், திணைக்களத்தின் மூன்றாம் தரத்தில் அனுமதிக்கப்பட்ட 24 பதவிகளில் தற்போது 3 பதவிகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும், மூன்றாம் நிலையென அழைக்கப்படுவது தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் விசேட தர உத்தியோகத்தர்களும் திட்டமிடல் நிபுணர்களின் விசேட தர உத்தியோகத்தர்களும் ஆவர் எனவும், இரண்டாம் தரமான அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உதவி உத்தியோகத்தர்கள் 258 பேரும், ஆரம்பத் தர பதவிகளான தொழிலாளர் மற்றும் சுற்றுலாப் பங்களா பொறுப்பாளர் பதவிகள் 137 யும் கொண்ட ஊழியர்கள் தற்போது திணைக்களத்தில் சேவையாற்றி வருவதாகக் கட்டடத் திணைக்களத்தின் க.அ. தெரிவித்தார்.
02	**<u>கட்டடத் திணைக்களத்தின் பணி</u>**	அரச மற்றும் பகுதியான அரச நிறுவனங்களின் கட்டடக் கட்டுமானங்கள், பராமரிப்பு மற்றும் திருத்தப் பணிகளின்போது தேவையான ஆலோசனைகளை வழங்குவது, வருடாந்த கட்டடக் கட்டண அட்டவணையை (BSR) தயாரிப்பதும் புதுப்பிப்பதும், சேவைப்பயனர் நிறுவனங்களுடைய கருத்திட்ட கட்டுமானங்களின் தரப் பரிசோதனைகளை மேற்கொள்வது, அரச மற்றும் பகுதியான அரச நிறுவனங்களின் நிறுவனங்களின் கட்டுமானங்கள் தொடர்பில் நீதிமன்றத்தினால் கோரப்படும் அறிக்கைகளை வழங்குவது, அரச மற்றும் பகுதியான அரச நிறுவனங்களிலுள்ள கட்டிடங்களுக்கான தரச் சான்றிதழ் அறிக்கைகளை வழங்குவது, பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களிலிருந்து சித்தியடையும் மாணவர்களுக்குத் தேவையானவாறு பட்டயப் பயிற்சி மற்றும் வதிவிடமற்ற பயிற்சியை வழங்குவது மற்றும் கூட்டு ஆதன சொத்துகள் வதிவிடத்திற்குப் பாதுகாப்பானவை என்பதற்கான சான்றிதழ்களை வழங்குவது என்பன தமது நிறுவனத்தின் கடமைப் பொறுப்பாகுமென கட்டடத் திணைக்களத்தின் க.அ. தெரிவித்தார்.

		அவதாணிப்புகள் / பரிந்துரைகள் கட்டடத் திணைக்களத்தின் முக்கியப் பணிகளில் ஒன்றான, வருடாந்தம் தயாரிக்கப்படும் "கட்டடக் கட்டண அட்டவணை (BSR)" திணைக்களத்தின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்ட மாத்திரத்தினாலேயே அவ்விலைகளைக் கட்டுமானப் பணிகளில் பிரயோகிப்பதற்கு ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்குக் கட்டாய சட்டரீதியான அழுத்தம் இல்லாத காரணத்தினால், பொதுவாக ஏனைய அரச நிறுவனங்கள் அவ்விலைகளைக் பயன்படுத்துவதில்லை என்பதைக் கண்டறிந்த குழு, இது தொடர்பாக நிதி அமைச்சின் தலையீட்டுடன் கூடிய குழுவொன்றை நியமித்து, கட்டடக் கட்டண அட்டவணை மூலம் வருடாந்தம் வழங்கப்படுகின்ற விலைகளைக் தமது கட்டுமானப் பணிகளில் கட்டாயமாகப் பிரயோகிக்க வேண்டுமென அனைத்து அரச நிறுவனங்களுக்கும் அறிவித்து, அதன் மூலம் கட்டடக் கட்டண அட்டவணைக்குச் சட்டரீதியான அதிகாரத் தன்மையைப் பெற்றுக்கொடுக்குமாறும், அச்செயற்பாட்டிற்காக தற்போது அனைத்து மாகாண சபைகளாலும் நடைமுறைப்படுத்தப்படும் வழிமுறையை ஆராய்ந்து பொருத்தமான வழிமுறையொன்றைத் தயாரிக்குமாறு பி.க.அ மற்றும் க.அ. விற்கு பரிந்துரை செய்து, அக்குழுவின் முன்னேற்றம் குறித்த அறிக்கையை ஒரு மாதத்திற்குள் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு பி.க.அ விற்கு பரிந்துரை செய்யப்பட்டது. மேலும், கட்டடக் கட்டண அட்டவணையினைப் புதுப்பிப்பது கட்டடத் திணைக்களத்தின் மிக முக்கியமான கடமைப் பொறுப்பாகும் என்பதால், அது குறித்து விசேட கவனம் செலுத்தி இவ்வாண்டுக்குரிய கட்டடக் கட்டண அட்டவணையை உடனடியாகத் திணைக்கள இணையத்தளத்தில் பிரசுரிக்குமாறு க.அ. விற்கு பரிந்துரைக்கப்பட்டது.
03	**ஒப்பந்தங்கள் தொடர்பான முறைகேடுகள்:** இடைநடுவே ஒப்பந்தத்தைக் கைவிட்டுச் சென்ற ஒப்பந்ததாரர் ஒருவரை கறுப்புப் பட்டியலில் சேர்ப்பதற்காக 2014.09.09 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் (COPA) வழங்கப்பட்ட பரிந்துரையை அவ்வாறே செயற்படுத்தாமல், கட்டடத் திணைக்களத்தினால் குறித்த ஒப்பந்ததாரருக்கு ஒரு வருட காலத்திற்குப் கொள்முதற் ஆவணங்களை மாத்திரம் வழங்காதிருத்தல், 2017 இல்	தமது நிறுவனம் ஆரம்ப காலத்தில் ஒப்பந்ததாரர்களைக் கறுப்புப் பட்டியலில் சேர்க்காமல், அவர்களுக்கு ஒரு வருட காலத்திற்குப் கொள்முதற் ஆவணங்களை வழங்காதிருப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாகவும், பின்னர் அவர்களைக் கறுப்புப் பட்டியலில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்போது நாட்டில் நிலவிய பணவீக்கம் மற்றும் ஏனைய பொருளாதாரச் சிரமங்கள் ஒப்பந்ததாரர்களுக்கும் தாக்கம் செலுத்தியிருந்தமையால் அந்தச் செயற்பாடும் பின்னர் ஒத்திவைத்ததாகவும், எனினும் 2024 ஆம் ஆண்டு முதல் ஒப்பந்ததாரர்களைக் கறுப்புப் பட்டியலில் சேர்க்கும் நடவடிக்கை மீளவும் செயற்படுத்தப்பட்டதாகவும், தற்போது வேலைகளைக் கைவிட்டுள்ள ஒப்பந்ததாரர்களுக்கு அது தொடர்பில் தமது தரப்பு நியாயங்களை முன்வைக்குமாறு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், 2014 ஆம் ஆண்டுக் குழுப் பரிந்துரைக்கு அமைய ஒப்பந்ததாரர்களைக் கறுப்புப் பட்டியலில் சேர்க்காமல் இருப்பதற்கு காரணம்

	வழங்கப்பட்ட 2 ஒப்பந்தங்களையும் இடைநிறுத்திய மற்றுமொரு ஒப்பந்ததாரரைக் கறுப்புப் பட்டியலில் சேர்த்திருக்க வேண்டுமெனினும் அவருக்கு 2018 இல் 81 மில்லியன் ரூபா ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளமை மற்றும் ஆர்.டீ. பில்டர்ஸ் (R. D. Builders) நிறுவனத்திற்கு 2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஒப்பந்தத்தை அவர்கள் இடைநிறுத்தியிருந்த போதிலும், அதற்குப் பிந்திய வருடங்களில் ஒப்பந்தங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை ஆகிய விடயங்கள் குறித்துக் குழு விசாரித்தது.	அப்போதைய பணிப்பாளர் நாயகத்தின் தனிப்பட்ட விருப்பத்திற்கமையவே என்றும் கட்டடத் திணைக்களத்தின் க.அ. குழுவிற்கு தெரிவித்தார். **<u>அவதாணிப்புகள் / பரிந்துரைகள்</u>** 2014 ஆம் ஆண்டில் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டுமெனப் பரிந்துரைகப்பட்ட ஒப்பந்ததார்களை அவ்வாறு கறுப்புப் பட்டியலில் சேர்க்காமை அப்போதைய பணிப்பாளர் நாயகத்தினால் இழைக்கப்பட்ட பாரிய தவறாகும் எனத் தீர்மானித்த குழு, குறித்த பணிப்பாளர் நாயகம் தற்போது ஓய்வு பெற்றிருந்தாலும் எதிர்காலக் குழுக்கூட்டமொன்றில் தேவை ஏற்பட்டால் இது தொடர்பாக அவரிடம் விசாரிக்க வேண்டியிருக்கும் என்பதால், இவ்விடயம் தொடர்பாக விரிவான அறிக்கையொன்றை உடனடியாகக் குழுவிற்கு வழங்குமாறு பி.க.அ விற்கு குழு பரிந்துரைத்தது.
04	**<u>ஒப்பந்தங்கள் தொடர்பான முறைகேடுகள்:</u>** இடைநடுவே ஒப்பந்தத்தைக் கைவிட்டுச் சென்ற ஒப்பந்ததாரர் ஒருவரை கறுப்புப் பட்டியலில் சேர்ப்பதற்காக 2014.09.09 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் (COPA) வழங்கப்பட்ட பரிந்துரையை அவ்வாறே செயற்படுத்தாமல், கட்டடத் திணைக்களத்தினால் குறித்த ஒப்பந்ததாரருக்கு ஒரு வருட காலத்திற்குப் பெறுகை ஆவணங்களை மாத்திரம் வழங்காதிருத்தல், 2017 இல் வழங்கப்பட்ட 2 ஒப்பந்தங்களையும் இடைநிறுத்திய மற்றுமொரு ஒப்பந்ததாரரைக் கறுப்புப் பட்டியலில் சேர்த்திருக்க வேண்டுமெனினும் அவருக்கு 2018 இல் 81 மில்லியன் ரூபா ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளமை மற்றும் ஆர்.டீ. பில்டர்ஸ் (R. D. Builders) நிறுவனத்திற்கு 2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஒப்பந்தத்தை அவர்கள்	தமது நிறுவனம் ஆரம்ப காலத்தில் ஒப்பந்ததாரர்களைக் கறுப்புப் பட்டியலில் சேர்க்காமல், அவர்களுக்கு ஒரு வருட காலத்திற்குப் பெறுகை ஆவணங்களை வழங்காதிருப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாகவும், பின்னர் அவர்களைக் கறுப்புப் பட்டியலில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்போது நாட்டில் நிலவிய பணவீக்கம் மற்றும் ஏனைய பொருளாதாரச் சிரமங்கள் ஒப்பந்ததாரர்களுக்கும் தாக்கம் செலுத்தியிருந்தமையால் அந்தச் செயற்பாடும் பின்னர் ஒத்திவைத்ததாகவும், எனினும் 2024 ஆம் ஆண்டு முதல் ஒப்பந்ததாரர்களைக் கறுப்புப் பட்டியலில் சேர்க்கும் நடவடிக்கை மீளவும் செயற்படுத்தப்பட்டதாகவும், தற்போது வேலைகளைக் கைவிட்டுள்ள ஒப்பந்ததாரர்களுக்கு அது தொடர்பில் தமது தரப்பு நியாயங்களை முன்வைக்குமாறு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், 2014 ஆம் ஆண்டுக் குழுப் பரிந்துரைக்கு அமைய ஒப்பந்ததாரர்களைக் கறுப்புப் பட்டியலில் சேர்க்காமல் இருப்பதற்கு காரணம் அப்போதைய பணிப்பாளர் நாயகத்தின் தனிப்பட்ட விருப்பத்திற்கமையவே என்றும் கட்டடத் திணைக்களத்தின் க.அ. குழுவிற்கு தெரிவித்தார். **<u>அவதானிப்புகள் / பரிந்துரைகள்</u>** 2014 ஆம் ஆண்டில் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டுமெனப் பரிந்துரைகப்பட்ட ஒப்பந்ததார்களை அவ்வாறு கறுப்புப் பட்டியலில் சேர்க்காமை அப்போதைய பணிப்பாளர் நாயகத்தினால் இழைக்கப்பட்ட பாரிய தவறாகும் எனத் தீர்மானித்த குழு, குறித்த பணிப்பாளர் நாயகம் தற்போது ஓய்வு பெற்றிருந்தாலும் எதிர்காலக் குழுக்கூட்டமொன்றில் தேவை ஏற்பட்டால் இது தொடர்பாக அவரிடம் விசாரிக்க

	இடைநிறுத்தியிருந்த போதிலும், அதற்குப் பிந்திய வருடங்களில் ஒப்பந்தங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை ஆகிய விடயங்கள் குறித்துக் குழு விசாரித்தது.	வேண்டியிருக்கும் என்பதால், இவ்விடயம் தொடர்பாக விரிவான அறிக்கையொன்றை உடனடியாகக் குழுவிற்கு வழங்குமாறு பி.க.அ விற்கு குழு பரிந்துரைத்தது.
05	**2018 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இருப்பிடக்கூறு சொத்தாண்மை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கு அமைவாக கூட்டாட்சி ஆதனங்கள் வசிப்பதற்குப் பாதுகாப்பானவை என்பதற்கான சான்றிதழ்களை வழங்குவதில் தாமதங்கள் காணப்படல்.** மேற்படி சட்டத்திற்கு அமைவாகக் கட்டடங்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட வேண்டிய கூட்டாட்சி ஆதனங்கள் வசிப்பதற்குப் பாதுகாப்பானவை என்பதற்கான சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்ட 2,352 கோரிக்கைகளுள் 1017 கோரிக்கைகளுக்கே வழங்கப்பட்டுள்ளமையால், அக்கூட்டாட்சி ஆதனங்களுக்காக உறுதிகளை வழங்க முடியாமல் போயுள்ளதாகக் குழுவில் வெளிப்படுத்தப்பட்டது.	ஏற்கனவே அது தொடர்பில் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், எதிர்காலத்தில் அந்நடவடிக்கைகளை மேலும் புதுப்பிப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் க.அ குழுவிற்கு தெரிவித்தார்.
06	**2021 – 2025 ஆம் ஆண்டுகளுக்காகத் தயாரிக்கப்பட்ட கூட்டாண்மைத் திட்டத்திற்கு (Corporate plan) அமைவாகக் கட்டட நிர்மாணக் கைத்தொழிலின் தொழில்நுட்பங்களில் சர்வதேசத் தரநிலைகள் தொடர்ச்சியாக மாற்றமடைவதை மதிப்பீடு செய்தல் மற்றும் மூலப்பொருட்கள், உழைப்பு போன்றன தொடர்பில் இலங்கைத் தரங்களை நிறுவுதல் சம்பந்தமாக திணைக்களம் தற்போது எடுத்துள்ள நடவடிக்கைகள்.**	கட்டடத் திணைக்களத்தின் செயலாற்றுகை திருப்திகரமான நிலையில் இல்லாமைக்கும் கட்டடத் திணைக்களம், குழுவினால் நிறுவப்பட்ட புள்ளியிடும் தரவு முறைமையில் குறைந்தபட்சப் புள்ளிகளைப் பெற்ற நிறுவனமாக மாறியிருப்பதற்கும் ஒரு காரணம் திணைக்களத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் தலையீடு குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையாகும் என வலியுறுத்திய குழு, இனிமேல் திணைக்களத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் இதைவிட அதிக அவதானம் செலுத்தி அதில் தலையிடுமாறு குழு பி.க.அ அறிவுறுத்தியது.
07	**கட்டடத் திணைக்களத்தின் செயலாற்றுகை திருப்திகரமான நிலையில் இல்லாமை மற்றும்**	கணக்காய்வாளர் தலைமையதிபதியின் 2024.07.23 ஆந் திகதிய சுருக்கக் குறிப்பில் அடங்கியுள்ள, எனினும் இன்றைய

	<u>குழுவினால் நிறுவப்பட்ட புள்ளியிடும் தரவு முறைமையில் கட்டடத் திணைக்களம் குறைந்தபட்சப் புள்ளிகளைப் பெற்ற நிறுவனமாக மாறியிருத்தல்.</u>	தினம் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படாத விடயங்கள் தொடர்பிலான முன்னேற்றத்தை ஒரு மாத காலத்திற்குள் குழுவிற்கு அறிக்கை செய்யுமாறு அமைச்சின் பி.க.அ இற்கு குழுவினால் விதந்துரைக்கப்பட்டது.
ஆயுர்வேதத் திணைக்களம் ***(2018, 2019, 2020, 2021 மற்றும் 2022 நிதியாண்டுகளுக்கான கணக்காய்வு அறிக்கைகளும் ஆயுர்வேதத் திணைக்களத்தின் தற்போதைய செயலாற்றுகையைப் பரிசீலித்தலும்)*** **விசாரணை செய்யப்பட்ட திகதி - 2024 ஜூலை 23**		
அழைக்கப்பட்ட நிறுவனங்கள் - ❖ **சுகாதார அமைச்சு** ❖ **ஆயுர்வேதத் திணைக்களம்**		
01	**<u>2017.08.09 ஆந் திகதி நடாத்தப்பட்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் வழங்கப்பட்டுள்ள விதந்துரைகளுக்கு அமைவாகத் திணைக்களத்தின், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்குத் தேவையான மனித மற்றும் பௌதிக வளங்களை வழங்கி, அதனை வலுப்படுத்துவதற்கு விசேட அவதானம் செலுத்துவதன் முன்னேற்றத்தைப் பரிசீலித்தல்.</u>**	தற்போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு, எஞ்சிய 3 பதவிகளுள் ஒரு (1) பதவியின் வெற்றிடம் நிரப்பப்பட்டுள்ளதாகவும், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்காக முறையே 4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் வீதம் நடாத்தப்பட்டுள்ளதாகவும், 2024 ஆம் ஆண்டிற்காக இதுவரை 2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதாகவும், அதற்கமைய அப்பிரிவின் நடவடிக்கைகள் தற்காலத்தில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்றும் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வாளரினால் தெளிவுபடுத்தப்பட்டது.
02	**<u>ஆயுர்வேத மருத்துவ மாணவர்களுக்கான உள்ளிருப்புப் பயிற்சியை வழங்குவதில் தாமதம் ஏற்படுதல், தேசிய மருத்துவப் பல்கலைக்கழகங்கள் அனைத்திற்கும் பொதுவான பாடவிதானமொன்று இல்லாமை மற்றும் சில பல்கலைக்கழகங்களில் பாடத்திட்டங்கள் அங்கீகரிக்கப்படாத பாடப்பிரிவுகளுக்கும் மாணவர்களை ஆட்சேர்ப்பு செய்தல் ஆகிய பிரச்சினைகள்.</u>**	பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் அனைத்து ஆயுர்வேத மருத்துவ மாணவர்களுக்கும் உள்ளிருப்புப் பயிற்சியை வழங்கி மருத்துவ சபையில் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், தற்போது 418 ஆயுர்வேத மருத்துவ மாணவர்கள் உள்ளிருப்புப் பயிற்சியைப் பெற்று வருவதாகவும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக எவரினதும் மூப்புரிமைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இடைநிலைப்பயிற்சியைத் தாமதமின்றி வழங்குவதற்குத் தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், மூப்புரிமைப் பட்டியலின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நான்கு தேசிய மருத்துவப் பல்கலைக்கழகங்களினதும் மருத்துவப் பிணியாய்வு மதிப்பீடுகளுக்காக ஒரே பொதுவான வினாத்தாளைப் பயன்படுத்துவதன் மூலம் பொதுவான மூப்புரிமைப் பட்டியலொன்றைத் தயாரிப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், பொதுவான பாடத்திட்டமொன்று இல்லாமை மற்றும் சில பல்கலைக்கழகங்களில் பாடநெறிகள் அங்கீகரிக்கப்படாத பாடப்பிரிவுகளுக்கும் மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்

		ஆகிய பிரச்சினைகளை, அப்பல்கலைக்கழகங்களுடனும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடனும் கலந்துரையாடித் தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சின் பி.க.அ குழுவிற்கு தெரிவித்தார்.
03	**பாரம்பரிய அறிவைப் பாதுகாத்தல் மற்றும் உள்நாட்டு மருத்துவத்தை மேம்படுத்துவதற்கான திட்டமொன்றிற்காக 350 மில்லியன் ரூபா பணத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட போதிலும், அந்நடவடிக்கைக்கு அவசியமான ஊடகப் பிரிவு உரிய முறையில் நிறுவப்படாமை மற்றும் அத்திட்டத்தின் பணத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 55 லட்சம் ரூபா பெறுமதியான ஒலி-ஒளிச் சாதனங்கள் தற்போது காணாமல் போயுள்ளமை.**	திணைக்களத்திற்கு ஊடகப் பிரிவொன்றை நிறுவி அதன் சேவைக்காக ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு 2018 ஆம் ஆண்டில் அங்கீகாரம் அளிக்கப்பட்ட போதிலும், அரசாங்கத்தினால் அவ்வப்போது எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானங்கள் உட்பட, பல்வேறு தொழில்நுட்பக் காரணங்களினால் அவ்ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்றும், இருப்பினும் அப்பிரிவின் கடமைப் பொறுப்புகள் தற்போது அமைச்சின் சில அதிகாரிகளைத் தற்காலிக அடிப்படையில் ஈடுபடுத்தி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அப்பிரிவிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட சேவை, ஏனைய அரசாங்க நிறுவனங்களையும் பங்கெடுக்கச் செய்து, தற்போதும் நிறைவேற்றப்பட்டு வருவதாகவும், 55 இலட்சம் ரூபா பெறுமதியான ஒலி-ஒளிச் சாதனங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கெமரா காணாமல் போகவில்லை என்றும், அது தற்போது அமைச்சின் ஊடகப் பிரிவின் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும், வருடாந்தப் பொருட்கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் சில சாதனங்கள் திருத்த வேலைகளுக்காக அனுப்பப்பட்டிருந்தன என்றும் ஆயுர்வேதத் திணைக்களத்தின் க.அ தெரிவித்தார். **அவதானிப்புக்களும் விதந்துரைகளும்** அத்திட்டத்திற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் பட்டியல் மற்றும் அவற்றின் தற்போதைய நிலைமை, காணாமல் போயுள்ள பொருட்கள் ஏதேனும் இருப்பின் அவை யாவை மற்றும் அது தொடர்பில் நிறுவனம் எடுத்த நடவடிக்கைகள் எவை என்பது பற்றிய அறிக்கையொன்றை, இரண்டு வாரங்களுக்குள், குழுவிற்கு வழங்குமாறு பி.க.அ இற்கும் க.அ இற்கும் குழுவினால் விதந்துரைக்கப்பட்டது. தொழில்நுட்ப அறிவுடைய அதிகாரிகளைக் கொண்ட பொருட்கணக்கெடுப்புச் சபையொன்றை நியமித்து 2024.08.03 ஆம் திகதி பொருட்கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப்பட்டதாகவும் அதில் பொருட்களின் குறைபாடுகள் எதுவும் கண்டறியப்படவில்லை என்றும், குறைபாடாகக் காட்டப்பட்டுள்ளவை திருத்த வேலைகளுக்காக அனுப்பப்பட்டுள்ள பொருட்கள் என்பதால் இனிவரும் காலத்தில் இவ்வாறான தவறுகள் நிகழாதிருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் ஆயுர்வேத ஆணையாளரின் **AVU/I.AU/03/05/03/COPA** மற்றும் **2024.09.19** ஆம் திகதிய அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.
04	**“AyurEx Colombo 2023”** சர்வதேச மாநாட்டிற்காக	தொழில்நுட்பப் பிரச்சினைகள் காரணமாக அந்தச் சந்தர்ப்பத்தில் அந்நடைமுறை பின்பற்றப்பட்ட போதிலும்,

	அனுசரணையாளர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட பணத்தைத் திணைக்களத்தின் நலன்புரிக் கணக்கில் வைப்புச்செய்தமை மற்றும் விதிக்கப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க நிதியியல் நடைமுறைகளுக்குப் புறம்பாக அப்பணத்திலிருந்து ஒழுங்கீனமான செலவீனங்களை மேற்கொண்டமை.	இனிவரும் காலத்தில் இவ்வாறான நடைமுறைகள் அங்கீகரிக்கப்படுவதோ பின்பற்றப்படுவதோ நிகழாது என, சுகாதார அமைச்சின் பி.க.அ இனால் குழுவிற்குத் தெளிவுபடுத்தப்பட்டது. **<u>அவதானிப்புக்களும் விதந்துரைகளும்</u>** இவ்விடயம் தொடர்பில் விசாரணையொன்றை நடாத்தி, அப்பணம் கிடைத்தமை மற்றும் அதிலிருந்து செலவீனங்களை மேற்கொண்டமை தொடர்பிலான ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் கணக்கு அறிக்கையொன்றை இரண்டு வாரங்களுக்குள் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு பி.க.அ இற்கும் க.அ இற்கும் குழுவினால் விதந்துரைக்கப்பட்டது. அரசாங்கச் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கான திறைசேரிச் செயலாளரின் 3/2022 ஆம் இலக்க மற்றும் 2022.04.06 ஆம் திகதிய சுற்றறிக்கை மற்றும் அக்காலத்தில் நாட்டில் காணப்பட்ட சூழ்நிலைகளின் அடிப்படையில் நாட்டில் உள்நாட்டு மருத்துவ முயற்சியாண்மையை மேம்படுத்தும் நோக்கில் திணைக்கள ஊழியர்களின் 95% இற்கும் அதிகமானோர் அங்கத்துவம் வகிக்கும் நலன்புரிச் சங்கத்தின் யாப்பு ரீதியிலான நோக்கங்களுக்கு அமைவாக அச்சங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட எண்ணக்கருப் படிவத்திற்குப் பொருத்தமான விடயப்பொறுப்புள்ள அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது என்றும், கருத்திட்டத்திற்காகத் திரட்டு நிதியத்திலிருந்து பணம் பயன்படுத்தப்படவில்லை என்றும், ஆயுர்வேத ஔடதக் கூட்டுத்தாபனம் அதன் மேம்படுத்தற் பணிகளுக்காக ஒதுக்கிய நிதியொதுக்கீட்டிற்கமைவாக ரூபா 5,000,000/- ஐ வழங்கியது என்றும், எஞ்சிய அனைத்துப் பணமும் அனுசரணையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது என்றும், நலன்புரிச் சங்கத்தின் கணக்குகள் அதிகாரமளிக்கப்பட்ட கணக்காய்வாளர் ஒருவரினால் பரிசீலிக்கப்பட்டது என்றும், திட்டத்தின் இறுதியில் எஞ்சிய பணத்திலிருந்து திணைக்களத்தின் தொடர்பாடல் பணிகளுக்கு அவசியமான சாதனங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும், நலன்புரிச் சங்கத்தின் கணக்குகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வக் கணக்கல்ல என்பதால் அது தொடர்பில் ஆரம்பக்கட்ட விசாரணையொன்றைச் செய்து தருமாறு அமைச்சிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாகத் தற்போது விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது என்றும், உரிய அறிக்கை விசாரணை முடிவில் வழங்கப்படும் என்றும்

		ஆயுர்வேத ஆணையாளரின் AVU/I.AU/03/05/03/COPA மற்றும் 2024.09.19 ஆம் திகதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
05	<u>பொரளை ஆயுர்வேத வைத்தியசாலையின் கட்டடத் தொகுதியை நிர்மாணித்தல் மற்றும் அக்கட்டடத்தை முழு கொள்ளளவிலும் வைத்தியசாலையின் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்ளாமை</u>.	பொரளை ஆயுர்வேத வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் 8 மாடிகளைக் கொண்ட குறித்த கட்டடத் தொகுதிக்குக் கழிவு நீரகற்றல், சாக்கடை நீரகற்றல், மின்சார இணைப்புகளைப் பெற்றுக்கொள்ளுதல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதாகவும், இந்நடைமுறைக்காகத் தற்போது 450 மில்லியன் ரூபா பணம் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடாகக் கிடைத்துள்ளதாகவும், கட்டடத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள அந்நிர்மாணப் பணிகளை, 2024 நவம்பர் மாதமளவில் உரிய ஒப்பந்தக்காரர்களிடம் ஒப்படைத்து, 2025 ஆம் ஆண்டின் முற்பகுதியில் அதன் பணிகளை நிறைவுசெய்து வைத்தியசாலையிடம் கையளிப்பதற்கான சாத்தியக்கூறு காணப்படுவதால், அவ்வாறு நிர்மாணப் பணிகள் நிறைவுற்றால் அதில் 87 அறைகளைக் கொண்டவொரு பகுதியையும், 354 கட்டில்களைக் கொண்ட விடுதித் தொகுதியையும் நடாத்திச் செல்வதற்கான சாத்தியக்கூறு உள்ளதாகவும் வைத்தியசாலையின் பணிப்பாளரினால் தெரிவிக்கப்பட்டது. <u>**அவதானிப்புக்களும் விதந்துரைகளும்**</u> இந்நிர்மாணப் பணிகள் நிறைவடையும் போது விடுதித் தொகுதியை வினைத்திறனாக வைத்தியசாலைக் கட்டமைப்பில் உள்வாங்குவதற்கு அவசியமான ஏனைய பௌதிக வசதிகள் மற்றும் அனைத்து மட்டங்களிலுமான ஊழியர்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடுகளைச் செய்யுமாறு குழுவினால் விதந்துரைக்கப்பட்டது. இக்கட்டடத்தினுள் 304 கட்டில்களை நிறுவி சேவைகளை வழங்க முடியும் என்றும், அனைவருக்கும் நியாயமான முறையில் தயாரிக்கப்பட்ட கட்டணம் செலுத்தும் முறைகளுடன் கூடிய திட்டங்கள் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், கட்டடத் தொகுதிக்குரிய வசதிகள் மற்றும் சாதனங்களைப் பெற்றுக்கொள்வதற்கு 250,000,000/- ரூபா ஒதுக்கீடு மேலும் அவசியமாகின்றது என்றும், ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ள நிர்மாணப் பணிகள் தற்போது அரசாங்கக் கட்டடத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், **ஆயுர்வேத ஆணையாளரின் AVU/I.AU/03/05/03/COPA மற்றும் 2024.09.19 ஆம் திகதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.**

06	**<u>கணக்காய்வாளர் தலைமையதிபதியின் 2024.07.23 ஆம் திகதிய சுருக்கக் குறிப்பில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பிலான முன்னேற்றம்.</u>**	குறித்த விடயங்கள் தொடர்பிலான முன்னேற்றம் ஆயுர்வேத ஆணையாளரின் **AVU/I.AU/03/05/03/COPA** மற்றும் **2024.09.19** ஆம் திகதிய அறிக்கையில் அறியத்தரப்பட்டுள்ளது.
வனப் பாதுகாப்புத் திணைக்களம் (2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகளில் அடங்கியுள்ள விடயங்களும் தற்போதைய செயலாற்றுகையும்) விசாரணை செய்யப்பட்ட திகதி - 2024 ஜூலை 25		
அழைக்கப்பட்ட நிறுவனங்கள் - ❖ **வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சு** ❖ **வனப் பாதுகாப்புத் திணைக்களம்** ❖ **அரச மரக்கூட்டுத்தாபனம்**		
01	**<u>திணைக்களத்தின் நிறுவனக் கட்டமைப்பு</u>** திணைக்களத்தின் விடயப் பரப்புகள், பிரதானிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஏதேனுமொரு பிரச்சினைக்குரிய சூழ்நிலை நிலவுவதை குழு அவதானித்தது. அங்கு பல விடயப் பரப்புகள் ஒரே பதவியினால் நிர்வகிக்கப்பட்டு வருவதைக் குழு சுட்டிக்காட்டியது. ஒவ்வொரு பிரிவினதும் பிரதானிகள் பெற்றிருக்க வேண்டிய துறைசார் அறிவு, ஒவ்வொரு விடயப் பரப்பினதும் வனப் பாதுகாவலர்களை நிர்வகிக்கும் பிரதானிகளுக்கு இல்லாமை குறித்துக் குழுவின் கவனத்திற்குபட்டது.	மேலதிக வனப் பாதுகாப்புத் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் மற்றும் மனிதவள முகாமைத்துவம்), மேலதிக வனப் பாதுகாப்புத் பணிப்பாளர் நாயகம் (கல்வி மற்றும் ஆராய்ச்சி), மேலதிக வனப் பாதுகாப்புத் பணிப்பாளர் நாயகம் (செயற்பாடுகளும் பாதுகாப்பும்) என மூன்று மேலதிக வனப் பாதுகாப்புப் பணிப்பாளர்கள் நாயகம் உள்ளதாகவும் அவர்கள் நிர்வாக சேவையின் ஓர் அதிகாரியையும் விஞ்ஞான சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகளையும் கொண்டிருப்பதாகவும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலர் (க.அ.) தெரிவித்தார். **<u>அவதானிப்புக்களும் விதந்துரைகளும்</u>** இவ்விடயம் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் துரிதமான அவதானத்தைச் செலுத்துமாறு குழு அறியத்தந்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையைத் திருத்தத்திற்கு உட்படுத்தியோ அல்லது வனப் பாதுகாப்புச் சேவையின் அதிகாரிகளுள் குறைந்தது இருவரையேனும் மேலதிக வனப் பாதுகாப்புப் பணிப்பாளர் நாயகம் பதவிகளுக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவர்களுக்குக் கீழ் தனித்தனியான பிரிவுகளை உருவாக்குமாறும் குழு முன்மொழிந்தது.
02	**<u>நிலுவையிலுள்ள ஊழியர் கடன் மீதிகளை மீள அறவிடுவது தொடர்பில் 2012 ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி நடாத்தப்பட்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் வழங்கப்பட்ட விதந்துரையை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம்.</u>** குறித்த நிலுவைக் கடன் மீதியானது சுமார் 13 மில்லியன் ரூபா போன்றவொரு பாரிய பெறுமதியைக் கொண்டிருப்பதாக	குழுவின் விதந்துரைக்கு அமைவாக அப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் அதில் 6 மில்லியன் ரூபா அறவிடப்பட்டு, தற்போது நிலுவைத் தொகையை 1.9 மில்லியன் ரூபாவாகக் குறைத்துக் கொள்ள முடிந்ததென்றும்; அந்த 1.9 மில்லியன் ரூபாவிற்குத் தொடர்புடைய வகையில் சேவையை விட்டு விலகிய, பணி இடைநீக்கம் செய்யப்பட்ட மற்றும் மரணமடைந்த ஊழியர்கள் உள்ளனர் என்றும், சேவையை விட்டு விலகிய ஊழியர்களிடமிருந்து எதிர்காலத்தில் மேலும் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அவ்வாறு அறவிட முடியாத நபர்களுக்கு அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை

	கணக்காய்வுப் பிரிவினால் சுட்டிக்காட்டப்பட்டது.	01/2024 இன் படி நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்படுவதாகவும் வனசீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சின் பி.அ/க.அ குழுவின் முன்னிலையில் தெரிவித்தார்.
03	<u>**தற்போது வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்படாத சுமார் 250,000 ஹெக்டயர் வனப் பிரதேசங்களை வர்த்தமானி அறிவித்தல் செய்தல்.**</u> 25 மாவட்ட வன அலுவலகங்களின் கீழ் நிர்வகிக்கப்படும் வன நிலப்பரப்பளவிலிருந்து 1.4 மில்லியன் ஹெக்டயர் ஒதுக்குகளாகவும் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களாகவும் வர்த்தமானி அறிவித்தல் செய்யப்பட்டுள்ளதாகக் கணக்காய்வுப் பிரிவினால் சுட்டிக்காட்டப்பட்டது. எஞ்சிய நிலப்பரப்பளவின் அளவீட்டுப் பணிகள் நிறைவுசெய்யப்படாதமையினால் அநாவசியமான காணி ஆக்கிரமிப்புகள், மரங்களை வெட்டுதல் மற்றும் வனக் குற்றங்கள் போன்றவை பெருமளவில் இடம்பெறுவதாகக் குழு முன்னிலையில் தெரிவிக்கப்பட்டது.	2012 மற்றும் 2018 காலப்பகுதியில் நில அளவீடொன்றை மேற்கொள்ளாமல் ஜி.பி.எஸ் (GPS) தொழில்நுட்பத்தின் ஊடாக வனப் பிரதேசங்களை வர்த்தமானி அறிவித்தல் செய்தமையினால் சமூகப் பிரச்சினைகள் உருவானதாக வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ. /க.அ. குழு முன்னிலையில் தெரிவித்தார். அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கில் தற்போது இனங்காணப்பட்டுள்ள 137,000 ஹெக்டயர் வனப் பிரதேசத்தை 2024 ஆம் ஆண்டின் இறுதியாகும்போது வர்த்தமானி அறிவித்தல் செய்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் குழு முன்னிலையில் தெரிவித்தார். <u>**அவதானிப்புக்களும் விதந்துரைகளும்**</u> கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைக்கு அமைவாக வர்த்தமானி அறிவித்தல் செய்யப்பட வேண்டிய வனப் பிரதேச அளவான 309000 ஹெக்டயர் நிலப்பரப்பளவை மாவட்ட மற்றும் வலய மட்டத்தில் பகிர்ந்து, வேலைத்திட்டமொன்றைத் தயாரித்து, அதன் பொறுப்புகளை மாவட்ட மற்றும் வலய மட்டத்தில் திணைக்கள அதிகாரிகளிடம் கையளித்து, அளவீட்டுப் பணிகளை நிறைவுசெய்வது உள்ளிட்ட எதிர்வரும் 5 ஆண்டுகளில் மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டத்தை வரிசைப்படுத்தி, அது தொடர்பிலான திகதிகள் அடங்கிய அறிக்கையொன்றைத் தயாரித்து 2024 செப்டெம்பர் 25 ஆம் திகதிக்கு முன்னர் குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலருக்கு (க.அ.) குழுவினால் விதந்துரைக்கப்பட்டது. **வனப் பாதுகாப்புப் பணிப்பாளர் நாயகத்தின் DFC/HO/ACC/A6/COPA ஆம் இலக்க மற்றும் 2024.09.24 ஆம் திகதியக் கடிதத்தின் மூலம் மேற்கூறப்பட்ட அறிக்கை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, பிரகடனப்படுத்தப்படாத வனப் பிரதேசத்தின் மொத்த அளவு 305,000 ஹெக்டயர் என்றும், 05 ஆண்டுகளில் இவ்வனப் பிரதேசங்களை வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தி நிறைவுசெய்வதற்குச் செலவாகும் மொத்தச் செலவீனம் 8,036 மில்லியன் ரூபா என்றும் அறிக்கையிடப்பட்டுள்ளது.**
04	<u>**திட்டவட்டமாக இலங்கையில் வனங்கள் குறித்த வர்த்தமானி**</u>	கிக்கிலியாமான கேபிள் கார் கருத்திட்டத்திற்கு வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப்பெறாமை

	<u>**அறிவித்தல்கள் இல்லாமை காரணமாக பல்வேறு கருத்திட்டங்களிலும் அபிவிருத்தித் திட்டங்களிலும் எழுந்துள்ள சிக்கல்கள்**</u>	குறித்து கலந்துரையாடப்பட்டது. குறித்த கருத்திட்டத்திற்கு மலைக்காட்டில் (Montane forest) சுமார் ஓர் ஏக்கர் காணி கோரப்பட்டதால், அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று வன வளப் பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ./ க.அ. தெரிவித்தார்.
05	<u>**வல்லப்பட்டை/அகில் (Agarwood) சாகுபடி மற்றும் அதன் மரக்கட்டைகளைக் கொண்டுசெல்வதில் உள்ள தடைகள்**</u>	இந்தப் பயிர்ச்செய்கையில் பரவலாக வர்த்தக ரீதியாக சாகுபடி பண்ணப்படும் இனம், காடுகளில் காணப்படும் வல்லப்பட்டை/அகில் மரமல்ல. மாறாக, வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வல்லப்பட்டை தாவரத்தின் அதே பேரினத்தைச் சேர்ந்த அக்விலேரியா (Aquilaria) தாவரம்தான் என்று குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும், இந்த இரு தாவரங்களின் புறத்தோற்றம் ஒரே மாதிரியாக இருப்பதாலும், அவற்றைக் கொண்டுசெல்லும் போது காடுகளில் உள்ள வல்லப்பட்டை தாவரத்தையும் (Gyrinops walla) வர்த்தக ரீதியாக பயிரிடப்பட்டு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அக்விலேரியா (Aquilaria) தாவரத்தையும் வேறுபிரித்து அறிவது சிரமமானது என்பதாலும், மரக்கட்டைகளைக் கொண்டு செல்லும்போது போக்குவரத்து அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டும் என்று குழுவின் முன்னிலையில் தெரிவிக்கப்பட்டது. வல்லப்பட்டை தாவரம் காடுகளில் காணப்படுமாயின், அந்தத் தாவரத்தின் பொறுப்பு வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு மாற்றப்படும் என்றும், அது காடுகளுக்கு வெளியே காணப்படுமாயின், அதன் உரித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு மாற்றப்படும் என்றும் வனசீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ./ க.அ. தெரிவித்தார். **அவதானிப்புகள்/பரிந்துரைகள்:** இது தொடர்பாக ஓர் அறிவியல் வழிமுறையை ஆய்வுசெய்து, ஓர் அறிக்கையைத் தயாரித்து, 2024 செப்டம்பர் மாதம் 25ஆம் திகதிக்குள் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று வனசீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ./ க.அ. இற்கு குழு பரிந்துரைத்தது. **இந்த அறிக்கை, வனப் பாதுகாவலர் நாயகத்தின் 2024.09.24 ஆம் திகதிய DFC/HO/ACC/A6/COPA ஆம் இலக்க கடிதம்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன்படி, Gyrinops walla, Aquilaria ஆகிய இரண்டு தாவர இனங்களையும் ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறு பிரித்து அடையாளம் காண்பதற்கான ஓர் அறிவியல் வழிமுறையைத் தயாரிப்பதற்கும், சாகுபடி செய்யப்படும் Aquilaria இனங்களின் (species) போக்குவரத்திற்கான ஒரு வழிமுறையைத் தயாரிப்பதற்கும்**

		நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, Aquilaria தாவர இனத்திற்கான போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதற்கான செயன்முறையை இரத்துசெய்வது பொருத்தமற்றது என்றும், சட்டவிரோதமான வர்த்தகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு ஓர் உரிமம் வழங்கும் முறை உருவாக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரை வழங்கியுள்ளது.
06	**சுற்றுச்சூழல் சுற்றுலாத் துறையை (Eco Tourism) மேம்படுத்துவதற்கும் பராமரிப்பதற்கும் போதுமான ஒரு வேலைத்திட்டம் 2024ஆம் ஆண்டுக்குள் நிறுவப்பட்டிருக்காமை**	வனசீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ./ க.அ., குழுவின் முன்னிலையில் கருத்துத் தெரிவிக்கும்போது, அத்திணைக்களம் தற்போது 26 சுற்றுலாத்தலங்களை இயக்கி வருவதாகவும், இந்தத் தலங்கள் 2023ஆம் ஆண்டில் 172 மில்லியன் ரூபா வருமானத்தையும், 2024ஆம் ஆண்டின் முதல் 7 மாதங்களில் மட்டும் 243 மில்லியன் ரூபா வருமானத்தையும் ஈட்டியிருப்பதாகவும் தெரிவித்தார். மேலும், 2024ஆம் ஆண்டில் அதிகூடிய எண்ணிக்கையில் சுமார் 35,000 சுற்றுலாப் பயணிகள் சிங்கராஜ வனத்தைப் பார்வையிட வந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.
07	**அரச மரக் கூட்டுத்தாபனத்திடம் "முழுமையாக தரிப்பதற்காக" ஒப்படைக்கப்பட்ட வன நடுகைப் பணிகளை, நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் மேற்கொள்ளத் தவறுவதால் சிக்கல்கள் ஏற்படுதல்** வனப் பாதுகாப்புத் திணைக்களத்தால் முழுமையாக தரிப்பதற்காக முன்மொழியப்பட்ட வன நடுகைப் பணிகளை, நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் மேற்கொள்ளத் தவறியதன் விளைவாக, அந்தத் திணைக்களத்தின் செயல்திட்டத்தின்படி மறுநடவுக்காக முன்மொழியப்பட்ட மரக்கன்று வகைகள் நாற்றுமேடையிலேயே மிகவும் பெரிதாக வளர்ந்துவிட்டமை மற்றும் பராமரிப்புச் செலவு அதிகமாகி உள்ளமை குறித்து குழு விசாரித்தது.	முந்திய ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2021ஆம் ஆண்டிலிருந்து மரங்களைத் தரிப்பதற்காக அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு அதிக பரப்பளவு காணி வழங்கப்பட்டதாலும், கொவிட் நெருக்கடி காரணமாக குறித்த காலப்பகுதியில் மரங்களை முழுமையாக தரிக்க இயலவில்லை என்பதாலும் இந்தப் பிரச்சினை எழுந்ததாக அரச மரக் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள் குழுவின் முன்னிலையில் தெரிவித்தனர். இலங்கையிலிருந்து ஃபைனஸ் (Pinus) மர சாகுபடியை அகற்றுவதற்காக 2020ஆம் ஆண்டில் செய்யப்பட்ட முன்மொழிவுகளைச் செயற்படுத்தியதன் மூலம், மரங்களைத் தரிப்பதற்கு அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட நிலப்பரப்பும் அதிகரித்துள்ளது என்றும், எஞ்சிய பகுதியை 2025ஆம் ஆண்டின் இறுதிக்குள் தரித்துவிடலாம் என்றும் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள் மேலும் தெரிவித்தனர். இதற்கென 10 ஆண்டுத் திட்டத்தைத் தயாரித்து, தேவைக்கேற்ப மரங்களைத் தரிக்கும் பணிகளை மேற்கொள்ளுமாறு அரச மரக் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்களுக்கு குழு அறிவுறுத்தியது.
08	**தியத்தலாவ இராணுவ முகாமுக்கு அருகிலுள்ள 42 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ள ஃபைனஸ் நடவு**	2021 ஆம் ஆண்டில், இலங்கையிலிருந்து ஃபைனஸ் சாகுபடியை அகற்றி, குறுகிய காலத்திற்குள் அதனை உள்ளூர் வன நடுகையாக மாற்றும் அரச கொள்கையின்படி, இந்த

	முழுமையாக வெட்டி அகற்றப்பட்டு மீண்டும் நடப்படத் தயாராக இருந்த போதிலும் அது முறையாக இடம்பெறாமையால், மீண்டும் நடப்படுவதற்காக நடப்பட்ட மரக்கன்றுகளைப் பராமரிக்க சுமார் 6 மில்லியன் ரூபா செலவானதுடன், அந்த மரக்கன்றுகளும் அழிக்கப்பட்டு வந்தமை.	முகாமுக்கு அருகிலுள்ள சுமார் 100 ஹெக்டேயர் ஃபைனஸ் சாகுபடி அகற்றப்பட்டு உள்ளூர் வன நடுகை ஆரம்பிக்கப்பட்டது என்றும், தியத்தலாவ என்பது இராணுவ முகாமுக்குள் அமைந்துள்ள ஒரு வன நடுகைப் பகுதி என்பதால், இராணுவ முகாமின் சட்டதிட்டங்களுக்கு அமைய, மரம் தரித்தல் வரையறுக்கப்பட்ட காலப்பகுதிகளுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். இவ்விடயங்கள் குறித்து ஆராயுமாறு குழு ஆலோசனை வழங்கியது..
09	**முறையான மதிப்பீடுகள் இன்றி மரக்கன்றுகள் நாற்றுமேடைகளில் நடப்பட்டு, அவை திறம்பட விநியோகிக்கப்பட்டிருக்காமை** அதிக எண்ணிக்கையான மரக்கன்றுகள் நாற்று மேடைகளிலேயே தேங்கிக் கிடப்பது குறித்தும் அவற்றின் பராமரிப்புக்காக செய்யப்பட்ட பாரிய தொகை செலவினம் குறித்தும் குழு விசாரித்தது. மேலும், 2020ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரை இந்த மரக்கன்றுகளின் பராமரிப்பிற்காகச் செலவிடப்பட்ட சுமார் 107 மில்லியன் ரூபா குறித்தும் குழு விசாரித்தது.	ஒவ்வொரு பகுதியிலும் உள்ள மரக்கன்றுகளுக்கான வருடாந்த தேவையின் அடிப்படையிலேயே அருகிவரும் தாவரங்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்டதாகவும், இந்த ஆண்டு சுமார் ஏழு இலட்சம் மரக்கன்றுகள் நாற்றுமேடைகளில் உற்பத்தி செய்யப்பட்டதாகவும், உள்ளூர் நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு அமைய இந்த மரக்கன்றுகள் வழங்கப்படும் என்றும் திணைக்களத்தின் அலுவலர்கள் தெரிவித்தனர். .
10	**திருகோணமலையிலுள்ள யான்ஓயா கழிமுகத்தில் மணல் அகழ்தல்**	இந்தக் குழுவிடம், இந்தச் செயன்முறையால் கண்டல்நிலக் காப்பகத்திற்கு பாதிப்பு ஏற்படவில்லை என்றும், அகழப்பட்ட மணல் அங்குள்ள ஒரு திறந்தவெளியில் குவித்துவைக்கப்பட்டுள்ளது என்றும், திணைக்களம் ஐந்து மணல் அகழ்வு அனுமதிப்பத்திரங்களை வழங்கியிருந்ததாகவும், அந்த அனுமதிப்பத்திரங்களும் இந்த ஆண்டுக்குள் இரத்து செய்யப்பட்டுவிட்டதாகவும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார். மேலும், கால்நடைகள் காடுகளுக்குள் நுழைவதும் வனப் பாதுகாப்புத் திணைக்களம் எதிர்நோக்கும் ஒரு பிரச்சினையாக உள்ளது என்பதையும் அலுவலர்கள் சுட்டிக்காட்டினர்.
11	**ஒப்பந்த அடிப்படையில் கல்லுடைப்பதற்கு வழங்கப்பட்ட கற்குழி அனுமதிப்பத்திரத்தின் படி, கல்லுடைத்த பிறகு தோண்டப்பட்ட குழிகள்**	திருகோணமலையில் உள்ள கிளிகொஞ்சிமலை கற்குழி (quarry) குறித்தும் குழுவிடம் வினவப்பட்டது. அது, இன்னும் செயற்பாட்டில் உள்ள ஒரு கற்குழி என்று வனசீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ./ க.அ. குழுவிடம் தெரிவித்தார். இந்தக் கற்குழியின்

	<u>**முறையாக நிரப்பப்படாமையால், அவை நீர்நிரம்பிய குழிகளாக மாறியுள்ளன. மேலும், சில இடங்களில் அந்தக் குழிகளில் குப்பைகளைக் கொட்டுதல் முதலான செயற்பாடுகளின் விளைவாக, ஏராளமான சுற்றுச்சூழல் பிரச்சினைகள் எழுந்துள்ளன.**</u>	உரிமதாரர்களிடமிருந்து ஒரு வைப்புத்தொகை தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், சம்பந்தப்பட்ட ஒப்பந்தக் காலம் முடிவடைவதற்குள் குழிகள் மூடப்பட வேண்டும் என்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.
12	<u>**வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கான மையப்படுத்திய தரவு முறைமையை** (Centralized Data System) **பராமரித்தல்**</u>	வனசீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ./க.அ., தற்போது திணைக்களத்தில் உள்ள 8 தொழில்நுட்பப் பிரிவுகளில் தனித்தனி தரவு முறைமைகள் (Data Systems) பராமரிக்கப்படுகின்றன என்றும், இது தவிர நிர்வாகப் பிரிவின் தாபன மற்றும் ஆராய்ச்சிப் பிரிவுகளில் தனித்தனி தரவு முறைமைகள் உள்ளன என்றும், இந்தத் தரவு முறைமைகளைச் சேமித்து வைப்பதற்கு 8 டெரா பைட் (TB) கொள்ளளவுள்ள கிளவுட் (Cloud) முறைமையொன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்றும் குழுவின் முன்னிலையில் தெரிவித்தார். **அவதானிப்புகள்/பரிந்துரைகள்** இதற்குத் தேவையான தரவுத்தொகுதி தயார்செய்யப்பட்டுள்ளதா என்று குழு வினவியது. மேலே விடயம் 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள வன வர்த்தமானி வேலைத்திட்டத்தின் முன்னேற்றத்தை உள்ளூர் மட்டத்தில் தெரிவிக்கக்கூடிய வகையில் தொடர்புடைய தரவு முறைமை தயாரிக்கப்பட வேண்டுமென குழு சுட்டிக்காட்டியுள்ளது. அதன்படி, இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களிலும் பரவியுள்ள திணைக்களங்களின் அலுவலர்கள் தரவுகளை உள்ளிட்டு தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் வகையில், மையப்படுத்திய தரவு முறைமையை (Centralized Data System) நடைமுறைப்படுத்துவதற்கான திகதிகள் அடங்கிய அறிக்கையை 2024ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25ஆம் திகதிக்குள் தயாரித்து குழுவிற்கு அனுப்புமாறு வனசீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ./க.அ. இற்கு குழு பரிந்துரைத்தது. இந்த அறிக்கை, வனப் பாதுகாவலர் நாயகத்தின் DFC/HO/ACC/A6/COPA ஆம் இலக்க, 2024.09.24ஆம் திகதிய கடிதத்தின்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன்படி, மையப்படுத்திய தகவல் முறைமையொன்றைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு 2024 நவம்பர் மாதம் 30ஆம் திகதி வரை காலவரையொன்று(time frame) முன்வைக்கப்பட்டுள்ளது. மேலும் தரவு முறைமையை இற்றைப்படுத்தி பராமரிக்கும் பொறுப்புக்கள்

		ஒப்படைக்கப்படும் அலுவலர்கள் குறித்தும் அறிவிக்கப்பட்டுள்ளது.
13	**<u>வனப் பாதுகாப்புத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட கற்குழி அனுமதிப்பத்திரங்கள் சார்ந்த நிலுவை வருமானங்களை அறவிடுதல்</u>**	கல் அகழ்வு அனுமதிப்பத்திரத்தை வழங்கும்போது அகழ்வுப் பணிகளுக்கென வனப் பாதுகாப்புத் திணைக்களத்தால் வழங்கப்படும் "C" அனுமதிப்பத்திரம் தவிர, புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தாலும் (GSMB) ஒரு சுரங்க அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகிறது என்றும், அவ்வாறு புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின்படி வெடிமருந்து வழங்குவதில் இந்த வருவாய் பற்றாக்குறை ஏற்படுகிறது என்றும், வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் "C" அனுமதிப்பத்திரத்திற்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட சுரங்கப் பணிகளுக்கான நிலுவைக் கட்டணங்களை உரிமதாரர்கள் செலுத்த மாட்டார்கள் என்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலர் குழுவிடம் தெரிவித்தார். அமைச்சரவை அங்கீகாரம் மூலம் 36 மாத தயை காலமும், நிலுவையிலுள்ள அனுமதிப் பத்திரக் கட்டணத்தில் 75% மானியமும் வழங்கப்பட்டுள்ளது என்று வன சீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ./க.அ. குழுவிடம் தெரிவித்தார். **அவதானிப்புகள்/பரிந்துரைகள்** முதலில், வனசீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சிற்குச் சொந்தமான தொடர்பாடல் கோபுரங்களின் பதிவேட்டைத் தயாரிக்குமாறும், அவற்றினுள் கட்டணம் செலுத்தாத நிறுவனங்களின் பதிவேட்டைக் குழுவிடம் சமர்ப்பிக்குமாறும் வனசீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ./ க.அ. இற்கு குழு பரிந்துரைத்தது. கல் அகழ்வு நடவடிக்கைகளுக்காக வனப் பாதுகாப்புத் திணைக்களத்தால் வழங்கப்படும் "C" அனுமதிப்பத்திரம் தவிர, புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தாலும் ஒரு சுரங்க அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகிறது என்றும், புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தால் (GSMB) வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் படி வெடிமருந்து வழங்குவதில் இந்த வருவாய் பற்றாக்குறை ஏற்படுகிறது என்றும், வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் "C" அனுமதிப்பத்திரத்திற்கு மேலாக மேற்கொள்ளப்படும் அகழ்வுப் பணிகளுக்கான நிலுவைக் கட்டணங்களை உரிமதாரர்கள் செலுத்த மாட்டார்கள் என்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலர் குழுவிடம் தெரிவித்தார். அமைச்சரவை அங்கீகாரம் மூலம் 36 மாத தயை காலமும், நிலுவையில் உள்ள அனுமதிப்பத்திரக் கட்டணத்தில் 75% சலுகையும் வழங்கப்பட்டுள்ளது என்று வனசீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ./க.அ. குழுவிடம் தெரிவித்தார்.

		எதிர்காலத்தில் கற்குழி அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக வழங்கப்பட வேண்டிய வெடிமருந்தின் அளவைத் தீர்மானித்து அதற்கேற்ப வரித் தொகையை நிர்ணயிப்பதற்கும், இதற்காக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்துடன் ஒரு கூட்டு வழிமுறையின்படி செயற்படவும், இது தொடர்பாக பொதுக் கணக்குகள் பற்றிய குழுவின் பரிந்துரையைக் குறிப்பிட்டு பாதுகாப்பு அமைச்சிற்கு எழுத்துபூர்வமாக தெரிவிக்கவும் வனசீவராசிகள் மற்றும் வள வளப் பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ,/க.அ. இற்கு குழு பரிந்துரைத்தது. கற்குழி அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான நிலுவைக் கட்டணங்களைச் செலுத்தாத 143 நிறுவனங்களுக்கு நிலுவைக் கட்டணங்களைச் செலுத்துமாறு இறுதி அறிவித்தலை அனுப்பிய பின்னரும் அவற்றைச் செலுத்தத் தவறும் நிறுவனங்களை கரைநிரலிற் (blacklist) சேர்ப்பதற்கும், சம்பந்தப்பட்ட உரிமதாரர்களின் பெயர்களில் பெறப்பட்ட வேறு எந்த அனுமதிப்பத்திரங்களையும் இரத்து செய்வதற்கும், தொலைத்தொடர்புக் கோபுரக் கட்டணங்களோடு தொடர்புடைய தொலைத்தொடர்பு நிறுவனங்களை ஒரேநாளில் தொடர்புகொண்டு, குறித்த கட்டணங்களைச் செலுத்துவதற்கான காலக்கெடுவை நிர்ணயித்து, அந்தத் திகதிக்குள் கட்டணங்களைச் செலுத்துமாறு அவர்களுக்குத் தெரிவிப்பதற்கும் வனசீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ. / க.அ. இற்கு குழு பரிந்துரைத்தது. வனப் பாதுகாவலர் நாயகத்தின் DFC/HO/ACC/A6/COPA ஆம் இலக்க, 2024.09.24 ஆம் திகதிய கடிதத்தில் பின்வரும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன:- i. கற்குழி உரிமதாரர்களுக்கு நிலுவைக் கட்டணங்களைச் செலுத்துமாறு 2024.09.02 அன்று இறுதி அறிவிப்பு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றும், நிலுவைக் கட்டணங்களைச் செலுத்தாத உரிமதாரர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும். ii. ஊடுகடத்தல் கோபுரங்களுக்கான நிலுவைக் கட்டணங்கள் செலுத்துவது குறித்த விவரங்களும், நிலுவைத் தொகையைச் செலுத்துவதற்கான கடைசித் திகதி பற்றிய விபரங்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. iii. ஊடுகடத்தற் கோபுரங்களின் அணுகுவழிகளைப் பயன்படுத்துவதற்கும், மின் கம்பிகளைப் பதிப்பதற்கும் அறவிடப்பட வேண்டிய கட்டணம் குறித்து முடிவெடுப்பதற்காக ஒரு குழு

		நியமிக்கப்பட்டுள்ளது என்றும், அதன் பரிந்துரைகளை திணைக்களத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிடம் சமர்ப்பித்த பின்னர், உரிய தொகையை அறவிட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்.
14	**வன வளங்களை நிலைபேறான முறையில் அறுவடை செய்தல்.**	தமது திணைக்களம், காடுகளிலிருந்து கித்துல், தேன், பிரம்பு போன்ற பொருட்களை நிலையான முறையில் பெறுவதற்காக அனுமதிப்பத்திரங்களை வழங்கி வருவதாகவும், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளைச் செயற்படுத்தி வருவதாகவும் வனசீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ./க.அ., குழுவிடம் தெரிவித்தார். **அவதானிப்புகள்/பரிந்துரைகள்** மாவட்ட வாரியான தகவல்களைப் பெற்று, இலங்கைக் காடுகளிலிருந்து பெறக்கூடிய வளங்களைக் கண்டறிந்து, அவற்றின் இருப்பிடங்கள் மற்றும் அத்தகைய வளங்களை நிலையான முறையில் அறுவடை செய்வதற்காக பின்பற்றக்கூடிய வழிமுறைகளை/ வழிகாட்டுதல்களை அடையாளங்கண்டு சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்புமாறு வனசீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ./ க.அ. இற்கு குழு பரிந்துரைத்தது. வனப் பாதுகாவலர் நாயகத்தின் DFC/HO/ACC/A6/COPA ஆம் இலக்க, 2024.09.24 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் மேற்கண்ட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ள விதம் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வனப் பொருட்களின் நிலையான பயன்பாடு குறித்து ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்புடன் இணைந்து ஒரு கூட்டு ஆய்வு நடத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
நீர்ப்பாசனத் திணைக்களம் (2020, 2021, 2022 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் அடங்கியுள்ள விடயங்களும் இன்றைய செயலாற்றுகையும்) விசாரணைத் திகதி – 2024 ஆகஸ்ட் 07		
அழைக்கப்பட்ட நிறுவனங்கள் - ❖ நீர்ப்பாசன அமைச்சு ❖ நீர்ப்பாசனத் திணைக்களம்		
01	**நீர்ப்பாசனத் திணைக்களம் பின்பற்றும் பணம் செலுத்தும் நடைமுறை, அரசாங்க நிதி ஒழுங்குவிதிகளுக்கு இணங்காமை.**	தற்காலிக அடிப்படையில் பணியிலீடுபடுத்தப்பட்ட ஊழியர்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது, பணரீதியாக அதனை மேற்கொள்ளல், பணம் செலுத்தியதைச் சான்றளித்தல் மற்றும் பணம் செலுத்திய பதிவேடுகளைப் பராமரித்தல் ஆகிய பணிகளை கணக்காளர் ஒருவர் அல்லாத

	நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 52 பிராந்திய அலுவலகங்களில், பணம் செலுத்தியதற்கான சான்றளிப்பு, வழங்கல் சான்றளிப்பு, பணம் செலுத்தும் செயலாக்கம் ஆகியவை கணக்காளர் அல்லாத பொறியியல் உதவியாளர் சேவை அலுவலர்களால் மேற்கொள்ளப்படுவதால், நிதி ஒழுங்கீனங்கள் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புள்ளது என்பது கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.	பொறியியல் உதவியாளர் சேவை அலுவலர்கள் மேற்கொள்வது நிதி ஒழுங்குவிதிகளுக்கும் பணிப் பங்கீட்டுக் கொள்கைகளுக்கும் முரணாக உள்ளன என்றும், இதனால் ஒழுங்கீனங்கள் இடம்பெற வாய்ப்புள்ளது என்றும் குழு சுட்டிக்காட்டியது. **அவதானிப்புகள்/பரிந்துரைகள்** தற்காலிக அடிப்படையில் பணியிலீடுபடுத்தப்பட்ட ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கும் போது, நீர்ப்பாசனப் பொறியியலாளர் பெயரில் எழுதப்பட்ட காசோலைகளைப் பணமாக்கி, பணம் பெறுபவர்களுக்கு காசாகச் செலுத்துவது சரியான முறை அல்ல என்பதால், சம்பந்தப்பட்ட பணம் பெறுபவரின் பெயரில் உள்ள கணக்கில் பணத்தை வரவுவைப்பது போன்ற ஒரு முறையைப் பின்பற்றுமாறு ஊழியர்களுக்கு அறிவுறுத்தி, சம்பளம் வழங்குவது குறித்து ஒரு சுற்றறிக்கையை வெளியிடுமாறு திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலருக்கு பரிந்துரைக்கப்பட்டது. மேலும், அதன் முன்னேற்றம் குறித்த அறிக்கையை, அந்தச் சுற்றறிக்கையின் பிரதிகளுடன் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பல்வேறு பணிகளைச் செய்வதற்காக தற்காலிக அடிப்படையில் பணியிலீடுபடுத்தப்பட்ட தொழிலாளர்களுக்குப் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கொடுப்பனவுகளைச் செலுத்தும் செயன்முறையை முறைப்படுத்துவதற்காக, நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தினால் சம்பந்தப்பட்ட பொறுப்புடைய தரப்பினருக்கு வழங்கப்பட்ட, CFO/FIN/AMC/01/2023 இலக்க மற்றும் 2024.09.24 ஆம் திகதிய அறிவுறுத்தல் கடிதத்தின் பிரதி, கமத்தொழில், காணி, கால்நடை வளங்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீர்வளமூலங்கள் அமைச்சின் செயலாளரால், MI/F-13/ID/COPA/GEN ஆம் இலக்க, 2024.10.23 ஆம் திகதிய கடிதம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
02	<u>**பொறியியலாளர் உதவிச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு கொடுப்பனவு தொடர்பான தத்துவங்கள் உட்சேர்க்கப்பட்டுள்ளமை**</u>	<u>**அவதானிப்புகளும் விதப்புரைகளும்**</u> இந்த விடயம் தொடர்பாக 2017 ஏப்ரல் 07ஆந் திகதிய 2013/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பினூடாக வெளியிடப்பட்டிருந்த பொறியியலாளர் உதவிச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பில் கணக்காளர் ஒருவரினால் செய்ய வேண்டிய உறுதிப்படுத்தல், காசோலைகள் ஒப்பமிடல், கொடுப்பனவு தொடர்பான ஆவணங்களைப் பேணுதல் ஆகிய கடமைப் பட்டியலை உட்சேர்த்துள்ளமை தொடர்பாகக் கடுமையான அதிருப்தியை வெளியிட்டுள்ள குழு அதனை உடனடியாக நடைமுறைப்படுத்தும் வகையில் திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு

		அறிவிக்குமாறு ஆலோசனை வழங்கியதுடன் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பி.க.அ./க.அ இற்கு விதந்துரைத்தது. அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் இலக்கம் PAC/9/5/2024 மற்றும் 2024.08.20ஆந் திகதிய கடிதத்தினூடாக மேற்படி விதந்துரை தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரின் MI/F-13/ID/COPA/GEN இலக்க மற்றும் 2024.08.31ஆந் திகதியக் கடிதத்தினூடாக, பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளரின் தத்துவங்கள் தொடர்பாக தற்போது செயற்படுகின்ற திருத்தங்கள் தொடர்பாக அறிக்கைப்படுத்தியுள்ளதுடன், பொறியியலாளர் உதவிச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பினைத் திருத்தும் வரை நீர்ப்பாசனத் திணைக்களத்தின் செயற்பாடுகளைத் தடைகளின்றி நிறைவேற்றிக் கொள்வதற்காக அதற்கு ஏற்றவகையில் செயற்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
03	**பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகங்களில் கொடுப்பனவுகளை உறுதிப்படுத்துவதற்கான சரியான முறையியலொன்றை ஏற்படுத்தல்.**	**அவதானிப்புகளும் விதப்புரைகளும்** வலய நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகங்களில் இணைக்கப்பட்டுள்ள கணக்காளர்களுக்குக் கொடுப்பனவுகளை சான்றுப்படுத்தக்கூடிய, மேற்படி சேவை நிலையங்களுக்கு அருகாமையில் அமைந்துள்ள பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்கள் யாவை மற்றும் அவ்வாறு செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் பிரதான முகாமைத்துவச் சேவை உத்தியோகத்தரிடம் கொடுப்பனவுகளை சான்றுப்படுத்துகின்ற அதிகாரத்தினை வழங்கக் கூடிய அலுவலகங்கள் யாவை என்பது (கணக்காளர்களை நியமிக்கும் வரை தற்காலிகத் தீர்வாக) தொடர்பாக நீர்ப்பாசன அமைச்சு மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் இணைந்து குழுவொன்றினை நியமித்து விரிவான கலந்துரையாடல்களை மேற்கொண்டு நிதி அமைச்சினையும் தொடர்புபடுத்திக் கொண்டு ஒரு மாத காலத்திற்குள் தகுந்த முறைமையொன்றினைத் தயாரிக்குமாறும், பொறியியலாளர் உதவிச் சேவைப் பிரமாணக் குறிப்பினைத் திருத்தியதன் பின்னர் சுற்றுநிருபத்தினூடாக அது தொடர்பாகக் குறித்த தரப்பினரைத் தெளிவூட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் விதந்துரைத்த குழு குறித்த சுற்றுநிருபத்தினை வெளியிடுவதற்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திற்குப் பிரதியொன்றை அனுப்பி வைப்பதுடன் குழுவிற்கும் பிரதியொன்றினை அனுப்பி வைக்குமாறும் ஆலோசனை வழங்கியது.
04	**பஸ்னாகொட நீரத்தேக்கத்தினை நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்கு**	ஆரம்பத்தில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பிழையான கணக்கீடுகள் காரணமாக 254 மில்லியன் ரூபாய் மேலதிகமாக

	<u>ஒப்பந்ததாரரினால் முன்வைக்கப்பட்ட 2093 மில்லியன் ரூபாய் விலை மனு, தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் விதந்துரைக்கு அமைவாக 254 மில்லியன் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளமை.</u>	மதிப்பீடு செய்துள்ளதாகவும், அத்தொகைக்கு விகிதாசாரப்படி 20% முற்பணத் தொகையாக 50 மில்லியன் ரூபாய் மேலதிகமாக செலுத்தியுள்ளதாகவும் மேற்படி முற்பணத்தொகையை மீளளிப்புச் செய்யும் போது அதனை மீண்டும் அறவிடுவதாகவும் நீர்ப்பாசன அமைச்சின் பி.க.அ./க.அ. குழுவிற்குத் தெரிவித்தார். <u>அவதானிப்புகளும் விதப்புரைகளும்</u> மேற்படி நிதியினை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், கருத்திட்டத்தின் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவில் இருந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் 2024.08.20 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்து மூலமான அறிவித்தலினூடாக அவர்களை அழைத்து இந்த சம்பவம் தொடர்பாக அவர்களின் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய அறிக்கையொன்றினைத் தயாரித்து மேற்படி அறிக்கையை 2024.09.01 ஆந் திகதிக்கு முன்னர் குழுவிற்கு சமர்ப்பிக்குமாறும் குழு அமைச்சின் பி.க.அ.இற்கு விதந்துரைத்தது. **கமத்தொழில், காணி, கால்நடை வளங்கள், நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சுச் செயலாளரின் MI/F-13/Project/ Gen/2024 ஆம் இலக்க மற்றும் 2024.10.18 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் மேற்படி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் இருந்த உத்தியோகத்தர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பிரதியொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**
05	**<u>பஸ்னாகொட நீரத்தேக்கத்தினை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தின் பெறுமதி அதிகரித்ததன் ஊடாக மேலதிகமாக 1085 மில்லியன் ரூபாய் நிதியை செலுத்த வேண்டியிருந்தமை</u>** கருத்திட்டத்திற்கான உடன்படிக்கையில் இணைந்து கொள்ளும் போது கருத்திட்டத்திற்கான காணியை இனங்கண்டு சுவீகரித்துக் கொள்ளாது கருத்திட்ட நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருப்பதால் மேற்படி சிக்கல் எழுந்துள்ளதாக கணக்காய்வாளர் பிரிவு சுட்டிக் காட்டியுள்ளது.	<u>அவதானிப்புகளும், விதப்புரைகளும்</u> மேற்படிக் கருத்திட்டத்திற்கு இன்றளவில் செலுத்தப்பட்டுள்ள நிதியின் அளவு, அங்கு நிர்மாணப்பணிகள் நிறைவடைந்துள்ள அளவு மற்றும் தற்போது குறித்த கருத்திட்டத்தினால் நீர் விநியோகம் நடைபெறுகின்றதா என்கின்ற விடயங்கள் அடங்கிய அதன் தற்போதைய நிலைமை தொடர்பான தகவல் அடங்கிய அறிக்கையொன்றினை 2024.08.20 ஆந் திகதிக்கு முன்னர் சபைக்குச் சமர்ப்பிக்குமாறு குழு அமைச்சின் பி.க.அ/ க.அ. இற்கு விதந்துரைத்துள்ளது. **பஸ்னாகொட நீர்த்தேக்கக் கருத்திட்டத்தின் பின்புலம் மற்றும் தற்கால நிலைமை தொடர்பாக நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகத்தின் கையொப்பத்துடனான அறிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.**
06	**<u>கிங் நில்வலா கருத்திட்டம்</u>** 2014 ஆம் ஆண்டு 690 மில்லியன் அ.டொலருக்கு உடன்படிக்கை	ஆரம்ப சாத்தியக்கூறு ஆய்வின் பின்னர் கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரமும் பெற்றுக் கொண்டதாகவும் அதன்படி நீர்ப்பாசன அமைச்சினூடாக குறித்த உடன்படிக்கையை செய்து

	செய்து கொள்ளப்பட்ட கருத்திட்டத்தின் முற்பணமாக 29.989 மில்லியன் அ.டொ. ஒப்பந்ததாரருக்குச் செலுத்தப்பட்டுள்ளதாகவும், அதன் பின்னர் செலுத்தப்பட்ட முற்பணத்திற்கு ஏற்ற வகையில் சாத்தியக்கூறு ஆய்வினை மேற்கொண்டு அறிக்கையொன்றினை முன்வைப்பதற்காக 2017 ஆம் ஆண்டு குறித்த உடன்படிக்கையைத் திருத்தியதாகவும் குழுவில் தெரிய வந்தது. மேற்படி சாத்தியக்கூற்று ஆய்வினை மேற்கொள்வதற்கு 8 மாத கால அவகாசம் வழங்கப்பட்ட போதிலும் தற்போது 7 வருடங்கள் கடந்து விட்டதாக குறிப்பிடப்பட்டது. மேற்படி கருத்திட்டம் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக கருத்திட்டத்தின் ஆரம்ப சாத்தியக்கூறு ஆய்விற்கு செலவிடப்பட்ட பணம் மற்றும் 5 வருட காலத்தில் கருத்திட்டத்தின் பணியாள் தொகுதியின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் உட்பட ஏனைய கருத்திட்ட நடவடிக்கைகளுக்கு செலவு செய்த 27 மில்லியன் ரூபாய் நிதி பயனற்ற செலவினமாக மாறியுள்ளதாகவும், 2015 மே மாதம் 26 ஆந் திகதியாகும் போது கருத்திட்டத்தை இடைநிறுத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருந்த போதிலும் அதற்காகச் செலுத்தப்பட்ட முற்பணத்தொகையினை, பிணைமுறியில் இருந்து குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பாக கணக்காய்வுப் பிரிவு சுட்டிக்காட்டியது.	கொண்டதாகவும் நீர்ப்பாசன அமைச்சின் பி.க.அ./ க.அ. தெரிவித்தார். மேலும் கருத்திட்டத்திற்கு கிங் மற்றும் நில்வலா ஆகிய இரு ஆறுகளும் தொடர்புபட்டிருந்த போதிலும் கருத்திட்டத்திற்கு தொடர்புடைய கிங் கங்கையின் ஒரு பகுதி உலக மரபுரிமையான சிங்கராஜ வனத்திற்கு உரித்தாவதால் வனப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் யுனெஸ்கோ நிறுவனத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியாமற் போனமையினால் 2024 ஆம் ஆண்டு வரையும் சாத்தியக்கூற்று ஆய்வினை மேற்கொள்ளல் தாமதமாகியதாக அவர் மேலும் தெரிவித்தார். இன்றளவில் அதன் சாத்தியக்கூற்று ஆய்வு நடவடிக்கைகள் மற்றும் புவிச்சரிதவியல் ஆய்வு நடவடிக்கைகள் சுமார் 95% நிறைவு செய்யப்பட்டிருப்பதாகவும் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் இக்கருத்திட்டத்தின் மேற்படி கருத்திட்டத்தின் நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கு எதிர்ப்பார்ப்பதாகவும் குறித்த நீர்ப்பாசன அமைச்சின் பி.க.அ./ க.அ. தெரிவித்தார். **<u>அவதானிப்புகளும் விதப்புரைகளும்</u>** நிதி ஒழுங்குவிதி இலக்கம் 3இல் குறிப்பிடப்பட்டுள்ள முறைமையினைக் கருத்திற் கொள்ளாது உடன்படிக்கை செய்து கொண்ட காரணத்தினால் மேற்படி நிலைமை ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வுப் பிரிவினால் சுட்டிக்காட்டப்பட்டதுடன் சிங்கராஜ வனத்திற்கு உரித்தான குறித்த பிரதேசம் தொடர்பாக எழுந்துள்ள சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளாமல் கருத்திட்டம் தொடர்பான உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடல் தொடர்பாக குழு தமது அதிருப்தியை வெளியிட்டது. எதிர்வரும் காலங்களில் இவ்வாறான கருத்திட்டங்கள் தொடர்பாக குறித்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடுவதற்கு முன்னர் நிதி ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக நடவடிக்கைகளை மேற்கொள்வதன் முக்கியத்துவம் குழுவினால் வலியுறுத்தப்பட்டது.
07	கணக்காய்வாளர் தலைமையதிபதியின் சுருக்கக் குறிப்பில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் (2024.08.07 ஆந்	2024.08.07 ஆந் திகதியக் கூட்டத்திற்கு கணக்காய்வாளர் தலைமையதிபதினால் குழுவில் முன்வைக்கப்பட்ட கணக்காய்வு சுருக்கக் குறிப்பில் (Brief Note) இன்றைய தினம்

<table>
<tr><td></td><td>திகதியக் கூட்டத்தில் கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்படாத கணக்காய்வுப் பந்தி)</td><td>கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்படாத கணக்காய்வு வினவல்கள் தொடர்பான பதில்களை குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு நீர்ப்பாசன அமைச்சின் பி.க.அ. / க.அ. இற்கு குழுவினால் விதப்புரை வழங்கப்பட்டது.</td></tr>
<tr><td colspan="3">தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம்
(இலங்கை தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் செயலாற்றுகையை ஆய்வு செய்வதற்கு 2024.06.06 ஆந் திகதி நடத்தப்பட்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட விதப்புரைகளின் முன்னேற்றம் மற்றும் தற்போதைய செயலாற்றுகை)

விசாரணை செய்யப்பட்ட திகதி – 2024 ஓகஸ்ட் 08</td></tr>
<tr><td colspan="3">அழைக்கப்பட்ட நிறுவனங்கள் –
❖ வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு
❖ தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகம்</td></tr>
<tr><td>01</td><td><u>தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் காப்புரிமைப் பரிசோதகர் மற்றும் புலமைச் சொத்து உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போது திணைக்களத்தில் பணியாற்றுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல்.</u></td><td>தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தில் காப்புரிமைப் பரிசோதகர்கள் மற்றும் புலமைச் சொத்து உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் போது திணைக்களத்தில் பணியாற்றுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குமாறு முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அதன்படி 08 புலமைச் சொத்து உத்தியோகத்தர்கள் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இன்றளவில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும், 10 காப்புரிமைப் பரிசோதகர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோர இருப்பதாகவும் தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் க.அ. குழுவிற்குத் தெரிவித்தார்.

<u>அவதானிப்புகளும் விதப்புரைகளும்</u>

துரிதமாக குறித்த ஆட்சேர்ப்புக்களைச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குழு, அமைச்சின் பி.க.அ. மற்றும் தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் க.அ. ஆகியோருக்கு விதப்புரை வழங்கியது.

காப்புரிமைப் பரிசோதகர் பதவிக்கு திறந்த ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சைக்குரிய அறிவித்தல் 2024.10.11 ஆந் திகதிய வர்த்தமானியில் வெளியிட்டதாகவும், விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2024.11.13 ஆந் திகதி எனவும் புலமைச் சொத்து உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை 2024.11.10 ஆந் திகதி நடத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகவும் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 2/4/8 VOL III மற்றும் 2024.11.07 ஆந் திகதிய கடிதத்தினூடாக அறிவிக்கப்பட்டுள்ளது.</td></tr>
</table>

02	**<u>காப்புரிமைப் பிரிவின் பணிப்பாளரை பதிலீட்டாளர் ஒருவரின்றி இடமாற்றஞ் செய்தல்</u>**	மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான I ஆந் தர உத்தியோகத்தர்களைக் கொண்டு நடத்திச் செல்கின்ற காப்புரிமைப் பிரிவின் பணிப்பாளரை பதிலீட்டாளர் ஒருவரின்றி இடமாற்றஞ் செய்தல் 2024 செப்டெம்பர் அல்லது ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கவுள்ள கோவைகளை ஸ்கேன் செய்யும் கருத்திட்டத்தை (Digitization Project) நடத்திச் செல்வதற்குத் தடை ஏற்படுவதால் பதிலீட்டாளர் ஒருவரை வழங்குமாறு தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் க.அ இனால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. <u>அவதானிப்புகளும் விதப்புரைகளும்</u> திணைக்கள ரீதியான பதவியாகிய குறித்த பதவிக்கு தற்போது இடமாற்றம் செய்யப்பட்டுள்ள இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர் 2017 ஆம் ஆண்டு இணைக்கப்பட்டது அக்காலத்தில் நிறுவனத்திற்குள் உரிய மூப்புரிமையை பூரணப்படுத்திய உத்தியோகத்தர்கள் இல்லாமையின் காரணத்தினாலாகும். இருந்த போதிலும் தற்போது குறித்த பதவிக்கு நியமிக்கக் கூடிய 11 வருடங்கள் மூப்புரிமையைப் பூரணப்படுத்திய உத்தியோகத்தர்கள் திணைக்களத்தினுள் இருப்பதைக் கவனத்தில் கொண்ட குழு உரிய முறையியலைப் பின்பற்றி திணைக்களத்தின் உத்தியோகத்தர்களில் தகுந்த உத்தியோகத்தரொருவருக்கு குறித்த பணி நிறைவேற்றுவதலைக் கையளிக்க முடியமெனவும், அது தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் பி.க.அ. மற்றும் தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் க.அ ஆகியோருக்கு விதந்துரைத்தார். **காப்புரிமைப் பிரிவின் குறித்த பணிப்பாளருக்கு புதிய சேவை நிலையத்தில் 2024.11.06 ஆந் திகதியிலிருந்து பணியேற்கக் கூடிய வகையில் பதிலீட்டாளர் இன்றி அவரை விடுவித்துள்ளதாக தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 2/4/8 VOL III மற்றும் 2024.11.07 ஆந் திகதிய கடிதத்தினூடாக அறிவிக்கப்பட்டுள்ளது.**
03	**<u>வியாபாரச் சின்னம், காப்புரிமைப் பத்திரம் மற்றும் தொழில்துறை வடிவமைப்புப் பதிவு தாமதமாவதால் ஏற்படுகின்ற அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளல்.</u>** வியாபாரச் சின்னம், காப்புரிமைப் பத்திரம் மற்றும் தொழில்துறை	இன்றளவில் வியாபாரச் சின்னங்களைப் பதிவு செய்வதற்கு சுமார் 14,000 விண்ணபப்பப்படிவங்கள், காப்புரிமை விண்ணபப்பப்படிவங்கள் 591 மற்றும் தொழில்துறை வடிவமைப்புப் பதிவுக்காக சுமார் 585 விண்ணபப்பப்படிவங்களைப் பரிசீலனை செய்யும் பணி தனது அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், அதற்கு மேலதிகமாக விண்ணபப்பப்படிவம் ஒன்று தனது அலுவலகத்திற்கு கிடைக்கப் பெற்று குறித்த சான்றிதழ் வெளியிடும் வரையும் பல்வேறுபட்ட மட்டங்களில் காணப்படுகின்ற விண்ணபப்பப்படிவங்கள் மற்றும்

	வடிவமைப்புப் பதிவு தாமதமாவதால் ஏற்படுகின்ற அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு காலவரையறைகளுடன் கூடிய திட்டத்தினைத் தயாரிக்குமாறு கடந்த குழுவில் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகள் தொடர்பான முன்னேற்றத்தை குழு வினவியது.	விண்ணப்பதாரர்களுக்கு குறைபாடுகளை அறிவித்தல் மற்றும் சான்றிதழ்களைப் புதுப்பித்தல் போன்ற விடயங்களுக்காக மேலும் பல விண்ணப்பப்படிவங்கள் காணப்படுவதாகவும், தற்போது காணப்படுகின்ற தாமதத்திற்குக் காரணம் நிறுவனத்திற்குக் கிடைக்கப்பெறுகின்ற பெரும்பாலான விண்ணப்பப்படிவங்கள் பிழைகளுடன் கூடிய விண்ணப்பப்படிவங்களாக இருப்பதும், விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்யும் போது வடிவமைப்பாளர்களின் திறமைக் குறைபாடுகள் மற்றும் குறித்த விண்ணப்பப்படிவம் முன்வைக்கப்பட்ட தினத்தில் இருந்து 20 வருட காலம் வரை செல்லுபடியாகுவதால் விண்ணப்பத்தை முன்வைத்த போதிலும் அதன் பின்னர் சில விண்ணப்பதாரர்கள் அதற்கு ஆர்வம் காட்டாமை போன்ற காரணிகள் என க.அ. சுட்டிக் காட்டினார். **<u>அவதானிப்புகளும் விதப்புரைகளும்</u>** மேற்குறித்த விடயங்களைக் கவனத்திற் கொண்ட குழு குறித்த விடயம் மற்றும் அது தொடர்பான பிரச்சினைகளைத் தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்திற்கே உரித்தான விசேட காரணங்களாகையால் அதனைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துத் தேவையான கொள்கை ரீதியான சட்ட அங்கீகாரம் மற்றும் ஒதுக்கீடுகள் செய்யக்கூடிய வகையில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தகுந்த முன்மொழிவுகளைக் கொண்ட அறிக்கையொன்றினை 03 மாதக்காலத்திற்குள் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு பி.க.அ. மற்றும் க.அ. ஆகியோருக்கு விதப்புரைகளை வழங்கியது. **தற்போது காணப்படுகின்ற உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை மற்றும் தற்போது இருக்கின்ற உத்தியோகத்தர்களின் வேலைப்பளு காரணமாக குறித்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு 2025.01.31 ஆந் திகதி வரை காலத்தை வழங்குமாறு தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகப் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 2/4/8 VOL III மற்றும் 2024.11.07ஆந் திகதிய கடிதத்தினூடாகக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.**
04	**<u>இலங்கையின் உள்நாட்டு மற்றும் இலங்கைக்கே உரித்தான புலமைச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்</u>**	இலங்கையின் உள்நாட்டு மற்றும் இலங்கைக்கே உரித்தான புலமைச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக வினவப்பட்ட போது அதற்கான பதில் வழங்குகையில் உள்நாட்டு மற்றும் இலங்கைக்கே உரித்தான புலமைச் சொத்துக்களை விசேடமாகப் பாதுகாப்பதற்காக புலமைச் சொத்துக்கள் அலுவலகத்திற்கு அதன் சட்டத்தினூடாக ஒதுக்கீடுகள் வழங்கப்படுவதில்லை என தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் க.அ. தெரிவித்தார்.

		<u>**அவதானிப்புகளும் விதப்புரைகளும்**</u> குறித்த நடவடிக்கைகள் தொடர்பாக சுதேச மருத்துவம், கலை, விளையாட்டு மற்றும் கலாசார நடவடிக்கைகள் தொடர்பான நிறுவனங்களுடன் குறித்த அலுவலகம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என பி.க.அ. மற்றும் க.அ. ஆகியோருக்கு குழு ஆலோசனை வழங்கியது. **மேற்படி நடவடிக்கைக்காக 2003 ஆம் ஆண்டு 36ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தினைத் திருத்தி இதனுடன் தொடர்புபட்ட அனைத்து தரப்பினருடனும் இணைந்து செயற்பட வேண்டுமெனவும், அதற்காகத் தனது நிறுவனத்தில் தனிப் பிரிவொன்றினை அமைக்க வேண்டுமென்பதால் தேவையான அடிப்படை வசதிகளை வழங்க வேண்டுமெனவும் தேசிய புலமைச் சொத்துக்கள் பணிப்பாளர் நாயகத்தின் 2/4/8 VOL III மற்றும் 2024.11.07 ஆந் திகதிய கடிதத்தினூடாக அறிவிக்கப்பட்டுள்ளது.**
05	<u>**உலக புலமைச் சொத்துக்கள் அமைப்பினால் [World Intellectual Property Organization (WIPO)] தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் கோவைகளை ஸ்கேன் செய்யும் கருத்திட்டம் (Digitization Project)**</u>	உலக புலமைச் சொத்துக்கள் அமைப்பினால் [World Intellectual Property Organization (WIPO)] தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் கோவைகளை ஸ்கேன் செய்யும் கருத்திட்டத்திற்கு (Digitization Project), 70 மில்லியன் ரூபாய் பெறுமதியான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு இணங்கி, குறித்த செயற்பாட்டிற்கு இலங்கை நிறுவனமொன்றினை (Data Management Systems) உலக புலமைச் சொத்துக்கள் அமைப்பு தெரிவு செய்து உடன்படிக்கை செய்த போதிலும் குறித்த கருத்திட்டத்திற்கு இன்றளவிலும் அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெறாமையால் 2024 செப்டம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள குறித்த கருத்திட்டத்தினை ஆரம்பிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் க.அ. தெரிவித்ததுடன் குறித்த அமைச்சரவை அங்கீகாரத்தினைக் கோருவதில் காணப்படுகின்ற சிக்கல் இந்தக் கருத்திட்டம் தொடர்பான பிரதம நிறுவனமான உலக புலமைச் சொத்துக்கள் அமைப்பிலிருந்து அது தொடர்பான எழுத்துமூலமான கோரிக்கை மற்றும் இணக்கப்பாடு இன்றுவரை அமைச்சுக்கு கிடைக்காமை என்பதனையும் அமைச்சின் பி.க.அ. குழுவிற்குத் தெரிவித்தார். <u>**அவதானிப்புகளும் விதப்புரைகளும்**</u> அமைச்சரவையின் அங்கீகாரத்தைக் கோருவதற்கான அனைத்துத் தகவல்கள் தொடர்பாகவும் உலக புலமைச் சொத்துக்கள் அமைப்பிற்கு எழுத்து மூலமாக அறிவித்து குறித்த நிறுவனத்தினால் தேவையான தகவல்களை நேரடியாகப் பெற்றுக் கொண்டு இரண்டு வாரங்களுக்குள் அமைச்சரவை

		அங்கீகாரத்தினைக் கோருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சின் பி.க.அ. இற்கு விதந்துரை வழங்கப்பட்டது. **அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு அமைச்சின் செயலாளரூடாக அமைச்சரவைக்கு கோரிக்கை விடுத்துள்ளதாக தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2/4/8 VOL III இலக்க மற்றும் 2024.11.07 ஆந் திகதியக் கடிதத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.**
06	**<u>புலமைச் சொத்துச் சட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக இந்நாட்டின் சில புலமைச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுதல்.</u>**	**<u>அவதானிப்புகள் / பரிந்துரைகள்</u>** புலமைச் சொத்துச் சட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக இந்நாட்டில் சில புலமைச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக வலியுறுத்திய குழு, பொருத்தமான சர்வதேச முறைமைகளையும் அடிப்படையாகக் கொண்டு சட்டத்தை இற்றைப்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்குமாறும், அச்செயற்பாட்டில் தேசிய புலமைச் சொத்து அலுவலகம் எதிர்நோக்க வேண்டியேற்பட்டுள்ள சிரமங்கள் மற்றும் தடைகள் குறித்துக் குழுவிற்கு அறிக்கையிடுமாறும் பி.க.அ மற்றும் க.அ. விற்கு குழு பரிந்துரைத்தது.
07	**<u>இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் இடவசதி தொடர்பான பிரச்சினையும் அலுவலகத்திலுள்ள கோப்புக்களைத் தேசிய சுவடிகூடத் திணைக்களத்திற்கு அனுப்புவது தொடர்பாக கடந்த குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட பரிந்துரைகளைச் செயற்படுத்துவதிலுள்ள முன்னேற்றமும்.</u>** இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் இடவசதி தொடர்பான பிரச்சினையையும் அலுவலகத்திலுள்ள கோப்புக்களைத் தேசிய சுவடிகூடத் திணைக்களத்திற்கு அனுப்புவது தொடர்பாகக் கடந்த குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட பரிந்துரைகளைச் செயற்படுத்துவது குறித்தும் குழு வினவியது.	மேற்கொள்ளப்பட்ட இடவசதி கணக்காய்விற்கு (Space Audit) அமைய, தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் செயற்பாடுகளைப் நடத்திச் செல்வதற்குரிய இடவசதி போதுமானதாக இல்லையென்பதுடன், எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள கோப்புக்களை ஸ்கேன் செய்யும் திட்டத்திற்காக அலுவலக வசதிகளை வழங்குவதும் பிரச்சினையாகவுள்ளதாகவும், தற்போதைய கட்டடத்திலிருந்து மேலதிக இடவசதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகக் கம்பனிப் பதிவாளருடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களும் தோல்வியடைந்துள்ளதாகவும், லங்கா சதொச நிறுவனம் அமைந்துள்ள கட்டடத்தில் இரண்டு மாடிகளில் 3,000 சதுர அடிக்கும் அதிகமான இடவசதியைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளதால், நிறுவனத்தின் சில பிரிவுகளை அக்கட்டடத்திற்கு கொண்டு செல்ல முடியுமெனவும் அமைச்சின் பி.க.அ. தெரிவித்தார். **<u>அவதானிப்புகள் / பரிந்துரைகள்</u>** லங்கா சதொச நிறுவனம் அமைந்துள்ள கட்டடத்தில் காணப்படும் குறித்த இடவசதியானது நிறுவனத்தின் பழைய கோப்புக்களைச் களஞ்சியப்படுத்த பயன்படுத்தப்பட வேண்டுமென்பதுடன், அவசியமற்ற பழைய கோப்புக்களை 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு இணங்க அகற்ற வேண்டும் எனவும், அதற்காக

		முதற்கட்டமாக 2006 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை பேணப்பட்ட, ஆனால் தற்போது செயற்பாட்டில் இல்லாத கோப்புக்கள் தொடர்பாக முறையான வழிமுறைகளைப் பின்பற்றி, பிரசித்திபெற்ற பத்திரிகைகள் மற்றும் ஏனைய பொருத்தமான விளம்பரங்களை வெளியிட்டுப் பொதுமக்களை விழிப்புணர்வூட்டி, அவற்றை உரிய காலப்பகுதிகளுக்குள் உரிய முறையில் அகற்ற வேண்டுமெனவும் பி.க.அ மற்றும் க.அ விற்கு பரிந்துரைத்த குழு, கம்பனிகள் பதிவாளர் கட்டடத்தின் தரை மாடியிலும் ஐந்தாவது மாடியிலும் குறைவான பயன்பாட்டுத் தன்மையைக் கொண்ட இடவசதிகள் காணப்படுவதாக கணக்காய்வாளர் தலைமையதிபதின் அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால், இக்கோப்புக்களை ஸ்கேன் செய்யும் திட்டம் நிறைவடையும் வரை அல்லது தற்காலிக அடிப்படையில் தற்போதைய கட்டடத்திலிருந்தே இடவசதியைப் பெற்றுக்கொள்ள கம்பனிப் பதிவாளரிடம் மீண்டும் கோரிக்கை விடுக்குமாறும், பிராந்தியத்தின் ஏனைய நாடுகளில் புலமைச் சொத்து அலுவலகங்களைப் நடத்திச் செல்வதற்கும் பராமரிப்பதற்கும் கையாளப்படும் முறைகள் மற்றும் அதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள திறன் (Smart) முறைகள் யாவை என்பது குறித்து ஆராய்ந்து அது தொடர்பாகக் குழுவிற்கு அறிக்கையிடுமாறும் பி.க.அ மற்றும் க.அ விற்கு குழு பரிந்துரைத்தது. **இடவசதிகள் தொடர்பில் 700 சதுர அடியைப் பெற்றுக்கொடுக்குமாறு கம்பனிப் பதிவாளர் திணைக்களத்திடம் கோரிய போதிலும், 100 சதுர அடி மாத்திரம் வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், அவ்விடவசதி போதுமானதல்ல என்று அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், கோப்புக்களைப் பாதுகாக்கும் செயற்பாட்டின்போது பாதுகாக்கப்பட வேண்டிய கோப்புக்கள் வகைப்படுத்தப்பட்டு 2024.08.02 ஆம் திகதியன்று தேசிய சுவடிகூடத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அகற்றுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள கோப்புக்களை சதொச நிறுவனத்தினால் வழங்கப்படவுள்ள இடப்பகுதியில் களஞ்சியப்படுத்துவது தொடர்பான ஏற்பாடுகளை உடனடியாக ஒழுங்குபடுத்துமாறு அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், இந்தியாவில் புலமைச் சொத்து அலுவலகங்களை நடத்திச் செல்வதற்கும் பராமரிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ள திறன் (Smart) முறைகளைத் தமது அலுவலகத்திலும் பின்பற்ற எதிர்காலத்தில் இயன்றவரை நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 2/4/8 VOL III மற்றும் 2024.11.07 ஆம் திகதியிட்ட கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.**

08	**<u>இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்காக நிரந்தர கட்டடமொன்றை நிறுவுவது தொடர்பாக தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வேலைத்திட்டம்.</u>**	இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்காக நிரந்தர கட்டடமொன்றை நிறுவுவது தொடர்பாக தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வேலைத்திட்டம் குறித்துக் கருத்துக்களை வினவியபோது, அமைச்சின் கீழுள்ள பல நிறுவனங்களுக்காக அமைச்சிற்குச் சொந்தமான கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள காணியொன்றில் தற்போது கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும், அக்கட்டடத்தின் பணிகள் நிறைவடைந்தவுடன் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமெனவும் பி.க.அ குழுவிற்கு தெளிவுபடுத்தினார். **இக்கட்டட நிர்மாணப் பணிகளில் நிலவும் தாமதம் காரணமாகத் தமது அலுவலகத்தின் இடவசதிப் பிரச்சினைக்குத் துரித தீர்வுகளை வழங்குமாறு அமைச்சின் செயலாளருக்குக் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 2/4/8 VOL III மற்றும் 2024.11.07ஆம் திகதியிட்ட கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.**
09	**<u>தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்காக பரிமாறியை கொள்வனவு செய்வதற்காக இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்திற்குச் செலுத்தப்பட்ட தொகையை மீளப்பெற்றுக் கொள்ளல்.</u>** தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்காக பரிமாறியைக் கொள்வனவு செய்வதற்கு இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்துடன் 2016 ஆம் ஆண்டில் ஒப்பந்தம் செய்து செலுத்தப்பட்ட 32 மில்லியன் ரூபா தொகையை மீளப்பெறுவது தொடர்பாகக் குழு வினவியது.	இவ்விடயத்திற்காக இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்திற்கு 2016 ஆம் ஆண்டில் நிதி வழங்கப்பட்ட போதிலும், பரிமாறி (Server) இதுவரை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்குக் கிடைக்கப்பெறவில்லையென்றாலும் மேற்படி நிதியை தமது நிறுவனத்தின் சம்பளங்களைச் செலுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டமையால் அதனை மீளச் செலுத்துவதற்கு இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்திற்கு முடியாதுள்ளதாக அறிவித்துள்ளதாக பி.க.அ மற்றும் க.அ. தெளிவுபடுத்தினர். <u>அவதானிப்புகள் / பரிந்துரைகள்</u> இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தினால் இழைக்கப்பட்ட இப்பாரதூரமான தவறினால் அத்தொகையை பொதுத் திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்வது சரியான வழிமுறையல்லவென்பதுடன், எனவே எதிர்வரும் 03 மாதங்களுக்குள் அத்தொகையை இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்திடமிருந்து மீளப்பெறுவதற்கு எடுக்க முடியுமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு பி.க.அ விற்கு குழு பரிந்துரைத்தது. **பரிமாறியைக் (Server) கொள்வனவு செய்வதற்காகச் செலுத்தப்பட்ட நிதியை மீளப்பெறுவதற்குத் தலையீடு செய்யுமாறு கோரி, 2024.10.29 ஆம் திகதியிடப்பட்டு**

		அமைச்சின் புதிய செயலாளருக்குக் கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதாகத் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 2/4/8 VOL III மற்றும் 2024.11.07 ஆம் திகதியிட்ட கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.
10	**<u>தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் கீழ் இயங்கும் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் நடத்தப்படும் தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையங்களின் செயற்பாடுகள் மற்றும் வருடாந்த முன்னேற்றங்கள் பரிசோதிக்கப்படாமை.</u>** தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் கீழ் இயங்கும் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் நடத்தப்படும் தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையங்களின் செயற்பாடுகள் மற்றும் வருடாந்த முன்னேற்றங்கள் பரிசோதிக்கப்படாமை குறித்து குழு வினவியது.	தமது நிறுவனம் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் 27 உடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளைக் கைச்சாத்திட்டு தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க மையங்களை [Technology and Innovation Support Centers (TISC)] ஆரம்பித்த போதிலும், தற்போது அவற்றுள் சில மையங்களே செயற்பட்டு வருவதுடன், அதற்கு முக்கிய காரணம் அவ்வாறான மையங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர் குழாத்தினருக்கு தற்போது எத்தகைய கொடுப்பனவுகளும் வழங்கப்படாமையாகும் என உரிய அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது. **<u>அவதானிப்புகள் / பரிந்துரைகள்</u>** மேற்படி மையங்களுக்கு நிதி ரீதியான ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்காக, அதன் சேவை தேவைப்படக்கூடிய ஏனைய அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து இம்மையங்களை மேலும் மேம்படுத்துவதற்காக தேசிய புலமைச் சொத்து அலுவலகம் தலையிட முடியுமான அனைத்துப் துறைகள் குறித்தும் முழுமையான ஆய்வொன்றை மேற்கொண்டு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சுடனும் கலந்துரையாடி, அதற்கான பொருத்தமான முன்மொழிவொன்றையும் என்னக்கரு பத்திரமொன்றயும் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு பி.க.அ மற்றும் க.அ. விற்கு குழு பரிந்துரைத்தது. இதற்காக எண்ணக்கரு பத்திரமொன்றை தயாரித்து வருவதாகவும், அப்போது அலுவலர்கள் தொடர்ச்சியாக இடமாற்றப்படும் சூழலில் ஏற்படும் பிரச்சினையான சூழ்நிலைகளைத் தவிர்ப்பதற்காகச் உரிய நிறுவனங்களுடன் இணைந்து விசேட சாத்தியவள ஆய்வொன்றையும் மேற்கொள்வதாகவும் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 2/4/8 VOL III மற்றும் 2024.11.07 ஆம் திகதியிட்ட கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.
11	**<u>புவியியல் சுட்டிகளைப் பதிவு செய்வது தொடர்பாக தேசிய புலமைச் சொத்துச் சட்டத்திற்கு 2022 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை</u>**	**<u>அவதானிப்புகள் / பரிந்துரைகள்</u>** அதற்காகத் தேவைப்படும் அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் தாமதத்திற்குக் காரணம் சட்டவரைஞர் திணைக்களத்தின் தரப்பிலிருந்து நிலவும் தாமதமாகும் எனக் குழுவிற்கு அறிவித்தமையினால், அத்திணைக்களத்துடன் சுமூகமாக இணைந்து செயற்பட்டு

	நடைமுறைப்படுத்துவதற்காக இடப்பட வேண்டிய ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம். புவியியல் சுட்டிகளைப் பதிவு செய்வது தொடர்பாக தேசிய புலமைச் சொத்துச் சட்டத்திற்கு 2022 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்காக இடப்பட வேண்டிய ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிப்பதில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பாகக் குழு வினவியது.	திருத்தங்களை உள்ளடக்கிய வரைவை துரிதமாகத் தயாரித்துக்கொள்ளுமாறு பி.க.அ. விற்கு குழு பரிந்துரைத்தது.

சுட்டி

ஆ
ஆயுர்வேத திணைக்களம்

இ
இலங்கை புகையிரதத் திணைக்களம்

ஏ
ஏற்றுமதி விவசாய திணைக்களம்

க
கம்பஹா மாவட்டச் செயலகம்
கட்டடத் திணைக்களம்
கமநல அபிவிருத்தித் திணைக்களம்

த
தொழில் திணைக்களம்
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

ந
நீர்ப்பாசனத் திணைக்களம்

ம
மேல் மாகாண சபை
மேல் மாகாண சபைக்கு உட்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்கள்

வ
வனப் பாதுகாப்புத் திணைக்களம்